# உதயன்



www.onlineuthayan.com

26 : பக்கங்கள் சுடர் 27 கதிர் 339 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 14 செவ்வாய்க்கிழமை (30/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


## 2013 ஜெனிவாவில் புதிய போர்க்குற்ற ஆதாரங்கள்
## கடும் அச்சத்தில் இலங்கை; ஐ.நாவுடன் பேச முயற்சி

கொழும்பு, ஒக்.30

2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடை பெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாடு தொடர்பில் இலங்கை அரசு தொடர்ந்தும் கடும் அச்சத்தில் உறைந்துள்ளது என்றும் மாநாடு தொடர்பில் அரசின் பிரதிநிதிகள் சிலர் விரைவில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர் மட்டத்தினரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

இந்த மாநாட்டின்போது இறுதிப்போரில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கான உத்தியோகபூர்வ ஆதாரங்களை ஐக்கிய நாடுகள் சபை முன்பாக சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன் அரச படையினரின் வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து புதிய காணொலி ஆதாரங்கள் இந்த மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ளன.

இந்தநிலையில் அரசு இது தொடர்பில் முழுமையான அச்சத்தில் உள்ளது. இதன் அடிப்படையில் சர்வதேச நாடுகள் இலங்கை மீது சுமத்தி இருந்த குற்றச்சாட்டுகளுக்கு பதில்களை தயார் செய்யும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது என அறியவந்துள்ளது.

அதன் ஒரு கட்டமாகவே திருகோணமலையில் இடம்பெற்ற மாணவர்களின் கொலை மற்றும் மூதூரில் இடம்பெற்ற தொண்டு பணியாளர்களின் படுகொலை போன்றவை தொடர்பிலான விசாரணைகளை மீண்டும் அரசு ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பார்க்க பக்கம் 4

# கரையோரத்தில் இருந்து மக்கள் இரவோடு இரவாக வெளியேற்றம்

### சூறாவளி அபாய எச்சரிக்கை காரணமாக

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளில் நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் சூறாவளி தாக்கக்கூடிய அபாயம் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து கரையோரப் பகுதியில் உள்ள மக்கள் இரவோடிரவாக வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்தனர். கரையோரப் பகுதிகளில் நேற்றிரவு 9 மணிக்குப் பின்னர் சூறாவளி அனர்த்தம் தொடர்பானபொது அறிவிப்புகள் விடுக்கப்பட்டன.

பொலிஸாரும் இராணுவத்தினரும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவும் கரையோரப் பகுதிகளில் மக்களுக்கு இந்த அறிவிப்பை விடுத்தனர்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் நேற்று மாலை முல்லைத்தீவிலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்து வருவதால் அதிகாலை 2 மணியளவில் கரையோரப் பகுதிகளை சூறாவளி தாக்கலாம் என இதன் போது எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது;

"தற்போது யாழ். மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளிலிருந்து 500 மீற்றர் இற்கு அப்பால் மக்களை இடம்பெயருமாறு நாம் அறிவுறுத்தியுள்வோம்.

குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் எச்சரிக்கைக் கோபுரங்கள் இயங்க விடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு பகுதி கிராம சேவகரூடாகவும் மக்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பார்க்க பக்கம் 4

மழைக்காலத்தின் ஆரம்பத்துடன் சிறார்கள் "கொக்ஸகி" எனப்படும் வைரஸ் காய்ச்சலுக்கு உள்ளாகும் அபாயம் நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 5

சென்னை அருகே உருவாகி இருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் தற்போது தீவிரமடைந்து புயலாக மாறி வருவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 8

மேற்கத்தேய நாட்டு மக்களையும், வெள்ளைக்காரர்களையும் முஸ்லிம்கள் நாடு கடத்த வேண்டும் என்று அல்குவைதா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் அல் ஜவாஹிரி அறைகூவல் விடுத்துள்ளார். 9

## சிறுவனைக் காணவில்லை

கிளிநொச்சி, ஒக்.30

முரசுமோட்டைப் பகுதியில் பதினான்கு வயதுச் சிறுவன் ஒருவன் காணாமற்போயுள்ளதாக அவரது உறவினர்களால் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முரசுமோட்டை 3 ஆம் யூனிற் பகுதியில் தாயாருடன் வசித்து வந்த குறித்த சிறுவன் விசுவமடுவில் உள்ள அவரது உறவினர் வீட்டுக்குச் சென்று வருவதாக கூறி கடந்த 18 ஆம் திகதி வீட்டில் இருந்து

பார்க்க பக்கம் 4

## முல்லைத்தீவில் கடும் காற்றினால் பறந்தன தறப்பாள் குடிசைகள்

கிளிநொச்சி, ஒக்.30

முல்லைத்தீவு கடலோரப் பகுதிகளில் அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்களின் குடிசைகள் நேற்று பகல் வீசிய காற்றினால் தூக்கி வீசப்பட்டன. தங்குவதற்கு பொதுக் கட்டடங்கள் கூட இல்லாத நிலையில் அந்த மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டது.

இதேவேளை, கடலோரப் பகுதியில் சூறாவளி மற்றும் சுனாமி ஏற்படலாம் என இராணுவத்தினரால் விடுக்கப்பட்ட அறிவித்தலை அடுத்து இரவோடிரவாக மக்கள் இடம்பெயர்ந்து இரணைப்பாலை பற்றிமா தேவாலயம் மற்றும் இரணைப்பாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை என்பவற்றில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

புதுமாத்தளன், பழையமாத்தளன், அம்பலவன்பொக்கணை ஆகிய கிராமங்களில் இருந்து நேற்று இரவு 9.30 மணி வரை 100 இற்கும் மேற்பட்டோர்

பார்க்க பக்கம் 4

## நள்ளிரவு முதல் பாணின் விலை இரண்டு ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.30

450 கிராம் பாணின் விலை 2 ரூபாவால் நள்ளிரவுமுதல் அதிகரிக்கப்படுமென பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. இவ்வறிவித்தலை அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கே. ஜயவர்த்தன விடுத்துள்ளார்.

கோதுமை மாவின் விலை

பார்க்க பக்கம் 4

## மூதூர் படுகொலை விசாரணை இவ்வருட இறுதிக்குள் நிறைவு

### சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.30

மூதூரில் தொண்டுநிறுவன பணியாளர்கள் 17 பேரின் படுகொலை மற்றும் திருகோணமலையில் பல்கலை மாணவர்கள் ஐவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்யப்படும் - என்று சட்டமா

பார்க்க பக்கம் 4

## அறுந்து கிடந்த மின்சாரக் கம்பி மாணவனின் உயிரைப் பறித்தது

### தம்பசிட்டியில் நேற்றுப் பரிதாபம்

வடமராட்சி, ஒக்.30

வீதியில் அறுந்து கிடந்த மின்கம்பி மாணவனின் உயிரைப் பறித்தது.

நேற்று இரவு பருத்தித்துறை தம்பசிட்டியிலுள்ள வட்டப்பாதி ஒழுங்கையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் உயிரியல் பிரிவில் கல்வி கற்று வந்த அதே இடத்தைச் சேர்ந்த

பார்க்க பக்கம் 4

## '13' ஐ பாதுகாப்பதற்கு உருவாகிறது இயக்கம்

### இவ்வார இறுதிக்குள் ஆரம்பமாகிறது போராட்டம்

கொழும்பு, ஒக். 30

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச்சட்ட ஒழிப்புக் கோஷத்தால் அரசியல் களத்தில் பெரும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பாதுகாப்பதற்காகப் பொது இயக்கமொன்று உருவாக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

அத்துடன், நாட்டினுள் வேரூன்றி வரும் சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை இல்லாதொழிக்கவும் அந்த இயக்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் தெரியவருகின்றது. 13 ஆவது திருத்தத்தை ஆதரிக்கும்

பார்க்க பக்கம் 4

## மிதிவெடியில் காயமுற்ற பெண் யாழ். ஆஸ்பத்திரிக்கு

வவுனியா, ஒக்.30

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பச்சைப் புல்லு மோட்டைப் பகுதியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பப் பெண் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை பச்சைப் புல்லுமோட்டைப் பகுதியில் சிறுமி ஒருத்தி மிதிவெடியைக் கத்தியால் [illegible] அது வெடித்த

பார்க்க பக்கம் 4

## இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

### முன்னாள் அமைச்சர் கிருஷ்ணா வலியுறுத்து

கொழும்பு, ஒக்.30

"இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்ட விவகாரத்தில் இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்."

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா.

இந்திய மத்திய வெளி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் நேற்றுக் கனமழை மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்பு

## காற்றினால் மரங்கள் முறிந்தமையால் மின்சாரமும் தடைப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் காற்றுடன்கூடிய கனமழை பெய்துள்ளது. இதனால் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. பல இடங்களில் மின்சாரம் தடைப்பட்டது. நேற்று மதியம் வரையான 27 மணித்தியாலங்களில் 49.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மழைகாலம் ஆரம்பித்த பின்னர் நேற்றுமுன்தினம் குடாநாட்டின் பல பகுதிகளிலும் கனமழை பெய்துள்ளது. அதனால் தாழ்ந்த பிரதேசங்களில் மழைவெள்ளம் நிறைந்துள்ளது.

மழைபெய்யத் தொடங்கிய பின்னர் குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்பட்டது. வீதியோரம் நின்றிருந்த நிழல் மரவள்ளி உட்பட பல வகை மரங்கள் காற்றுடன் கூடிய மழை காரணமாக சரிந்து வீதியில் விழுந்தன. மின்சாரக் கம்பிகளிலும் இந்த மரங்கள் சரிந்து விழுந்தமையால் பல இடங்களில் மின்சாரம் தடைப்படக் காரணமாக இருந்துள்ளது. சில இடங்களில் மின்சாரத் தூண்களும் சரிந்துள்ளன. மின்சாரக் கம்பிகளை அண்மித்துள்ள சரியக்கூடிய மரங்கள் வெட்டப்படாமையாலேயே அவை சரிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நகரிலும் பொம்மைவெளி, கொட்டடி, மீனாட்சிபுரம், பண்ணை, காக்கைதீவு, நாவாந்துறை உள்ளிட்ட பல பகுதிகளிலுள்ள தாழ்ந்த இடங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் குடிமனைகளுக்குள் வெள்ளம் உட்புகக்கூடிய நிலை ஏற்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. யாழ். முற்றவெளி தனியார் பஸ் நிலையப் பகுதியிலும் மழை வெள்ளம் ஏற்பட்டதால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். தாழ்ந்த பகுதிகளிலுள்ள வயல் நிலங்களிலும் மழைநீர் தேங்கியது. எனினும் அதனால் பாதிப்பு ஏற்படாது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கில் உடுத்துறை, மருதங்கேணி, ஆழியவளை உட்பட பல இடங்களிலும் மழையினால் வெள்ளம் ஏற்பட்டது.

தென்மராட்சியிலும் பல இடங்களில் காற்றுடன் கூடிய மழை காரணமாக மரக்கிளைகள் முறிந்தன. அங்கு சில இடங்களில் மின்தடையும் ஏற்பட்டது.

இதேவேளை -

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியிலிருந்து நேற்று முற்பகல் 11.30 மணிவரை 49.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதென யாழ். திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-4-8-9-17-86)

## சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஐ.தே.க. உறுப்பினருக்கு அச்சுறுத்தல்

### தொலைபேசி மூலம் விடுக்கப்பட்டதாக முறைப்பாடு

தென்மராட்சி, ஒக். 30

சாவகச்சேரி பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கு.சர்வானந்தாவுக்கு நள்ளிரவு வேளையில் தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வேளையில் தொலைபேசியில் அழைத்த இனந்தெரியாத நபர், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து உடனடியாக விலக வேண்டும். இல்லையேல் நாங்கள் மாற்று நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் எனக் கடுமையான தொனியில் எச்சரிக்கை விடுத்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் மற்றும் படையினருக்கு உடனடியாக அறிவித்ததுடன் காலையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பேரில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

கொடிகாமம் கெற்பேலியில் வசிக்கும் பிரதேச சபை உறுப்பினர் சாவகச்சேரியில் வர்த்தக நிலையம் வைத்துள்ளார்.

கட்சியில் இருந்து விலகாதுவிடின் சாவகச்சேரியிலுள்ள வர்த்தக நிலையம் அழிக்கப்படும் எனவும் தொலைபேசியில் மிரட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

## பிரதான வீதிகளும் படுமோசம் புதையுண்டன வாகனங்கள்

யாழ். குடாநாட்டில் பெய்த கனமழை காரணமாக திருத்தப்பணிகள் நடைபெற்று வரும் பிரதான வீதிகள் உட்பட பல வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு மோசமாகச் சேதமடைந்துள்ளன. இதனால் பயணிகள் கடும் விசனமடைந்துள்ளனர். சில இடங்களில் வீதிகளில் வெட்டப்பட்டிருந்த குழிகளுக்குள் வெள்ளம் தேங்கியதை அறியாத வாகனச் சாரதிகள் வாகனங்களைச் செலுத்தி புதையுண்டு சிரமப்பட்டனர்.

யாழ்ப்பாணம் ஏ-9 வீதி, காங்கேசன்துறை வீதி என்பன பெரியளவில் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் வீதிகள் சல்லிக் கற்கள் போடப்பட்ட நிலையில் உள்ளமையால் அத்தகைய இடங்கள் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன. அதனுள் மழைநீர் தேங்கி போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சில வீதிகளில் நிலம் தோண்டப்பட்டு மண் போட்டு நிரவப்படாமல் உள்ளமையால் அதனுள் மழைநீர் தேங்கியுள்ளது. அந்தக் குழிகள் அடையாளப்படுத்தப்படவில்லை. இதனால் குழிகள் இருப்பதை அறியாத வாகனச் சாரதிகள் அவற்றினுள் விழுந்து விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன. இதேவேளை யாழில் இருந்து மன்னார் நோக்கி நேற்று முற்பகல் புறப்பட்ட பஸ் ஒன்று பாலியனாற்றுப் பாலமருகே புதையுண்டதில் போக்குவரத்துக்கள் பல மணி நேரம் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நல்லூரில்

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் திருத்த வேலைகள் இடம்பெறுவதன் காரணமாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கூட்டம் அரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## வவுனியாவில் கடும் காற்று வீட்டுக் கூரைகள் பறந்தன

### மரங்களும் வேரோடு சாய்ந்தன

வவுனியா, ஒக். 30

வவுனியாவில் நேற்றும் நேற்று முன்தினமும் மழையுடன் கூடிய கடும் காற்றினால் மரங்கள் பல வேரோடு சாய்ந்தன. இதனால் வீடுகள் சேதமடைந்துள்ளன. பூந்தோட்டம், ஓமந்தை, அலகல்ல வவுனியா நகரப் பிரதேசங்கள் உட்பட பல இடங்களில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகர சபை விடுதியொன்றில் உள்ள மரம் மற்றும் அலகல்ல பிரதேசத்தில் வீடொன்றில் உள்ள மரம் உட்பட பல்வேறு இடங்களில் பல மரங்களும் வேரோடு சாய்ந்தமையால் வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை பூந்தோட்டம் நலன்புரி முகாமில் தற்காலிக வீடுகள் சில மழையினால் சேதமடைந்துள்ளன. நீண்டகாலமாக போரினால் இடம்பெயர்ந்து வசித்து வரும் மக்கள் மழை, காற்றினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர்களுக்கான வீட்டுத் திட்டத்தில் புதிய வீடுகள் சிலவற்றில் ஓடுகள் காற்றினால் சேதமடைந்துள்ளன.

இந்தப் பகுதியில் பெரும் வெள்ளம் பாய்ந்து ஓடுவதால் ஹைஏஸ் வாகனம், ஓட்டோ, டிப்பர் வாகனங்கள் புதையுண்ட நிலையில் பொதுமக்கள் உதவியுடன் நீண்ட நேரத்தின் பின் மீட்கப்பட்டன.

வாரிக்கூட்டியூர், பம்பைமடு, கிடாச்சூரி பகுதியில் வெள்ளம் பாய்ந்து ஓடுவதனால் பயணிகள் பஸ்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் பயணத்தை மேற்கொண்டன. (த-402)

## மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யுங்கள்

### அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கோருகிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஒக். 30

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் பயிற்சிகள் நடத்துதவற்கு அதிகளவான நிதி ஒதுக்கப்படுவதை விடுத்து, மக்களின்அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலான கூடாரங்கள், தண்ணீர் வசதிகளுக்கு அதிகளவிலான நிதிகளை ஒதுக்குமாறு வடமாகாண ஆளநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பணிபுரிகின்ற உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் அண்மையில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதியுடனேயே வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

> பயனாளிகளின் தெரிவின்போது அந்தப் பகுதி பிரதேச செயலாளர், கிராம சேவையாளர் ஆகியோரது அறுவுறுத்தல்களுடனேயே தெரிவு செய்ய வேண்டும்.

மேலும் எந்தவொரு திட்டத்துக்கான பயனாளிகளின் தெரிவின்போது அந்தப் பகுதி பிரதேச செயலாளர், கிராம சேவையாளர் ஆகியோரது அறுவுறுத்தல்களுடனேயே தெரிவு செய்ய வேண்டும். எந்தப் பிரதேசத்தில் முன்னுரிமை அடிப்படையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பணியாற்ற வேண்டும் என்பதையும் பிரதேச செயலரே தீர்மானிக்க வேண்டும்.

அத்துடன் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் பயிற்சிகளுக்கு அதிகளவான நிதியை ஒதுக்குகின்றன. அதற்கான நிதி ஒதுக்கீடுகளை குறைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கூடாரங்கள், தண்ணீர், மலசலகூட வசதிகள் என்பவற்றுக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களுக்கு மாவட்ட அரச அதிபரின் சிபாரிசுக் கடிதம், ஜனாதிபதி விசேட செயலணிக்கு வழங்கப்படும் என்று இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் தெரிவித்தார். (த-5)

## இடி ஒலியை உணர்ந்தால் உடன் பாதுகாப்புத் தேடுங்கள்

### மின்னல் தாக்கத்தில் இருந்து தப்பிக்க

யாழ்ப்பாணம், ஒக். 30

இடி ஒலியை நாம் உணர்ந்தால் மின்னல் தாக்கத்துக்கு உட்படக் கூடிய இடத்தில் நிற்கின்றோம் என்பதை அறிந்து பாதுகாப்பான இடத்தை நாடவேண்டும். இடி மின்னலில் இருந்து பாதுகாத்துக் கொள்வது ஒவ்வொருவரிலும் தங்கியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் இடி மின்னல் அதிகமாக இருக்கும். இந்த வருடம் இதுவரையான காலப்பகுதிவரை மின்னல் தாக்கத்தினால் 44 பேர் உயிரிழந்துள்ளனர். அதிகளவாக கடந்த ஏப்ரல் மாதம் 20 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இந்த மாதத்தில் மாத்திரம் 9 பேர் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நாடளாவிய ரீதியில் மின்னல் தாக்கத்துக்குள்ளானவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலும் மின்னல் தாக்கத்தினால் பலர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மழையின்போதோ மழை இல்லாமலோ எந்த நேரத்திலும் இடி மின்னல் உருவாகலாம். அது எந்நேரமும் மக்களைத் தாக்கலாம். இடி ஒலியை நாம் உணர்ந்தால் மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகக் கூடிய இடத்தில் நாம் நிற்கிறோம் என்பதனை அறிந்து கொள்ளுங்கள். உடனடியாக பாதுகாப்பான இடத்தை நோக்கி நகருங்கள்.

பச்சை மரங்கள், கம்பிகளில் தொடுகையில் இருத்தல், தொலைபேசி பயன்படுத்துதல், விளையாட்டு மைதானம், தேயிலைத் தோட்டம், நெல் வயல்கள் போன்ற திறந்த வெளிகளில் நிற்கும் வேளையிலும் மின்னல் தாக்கச் சந்தர்ப்பம் உண்டு. எனவே இடி மின்னலின் போது பாதுகாப்பான இடங்களை நாடுங்கள்.

மண்வெட்டி, அலவாங்கு உள்ளிட்ட உலோகப் பொருள்களை இடிமின்னலின்போது பயன்படுத்துவதைத் தவிருங்கள். மலை உச்சி, உயரமான இடங்கள் பாலங்களில் நிற்பதும் ஆபத்தானது. உடைகள் உலர விடும் கம்பிகளும் ஆபத்தானவை. மூடிய கட்டடங்கள், மூடிய வாகனங்கள் போன்றவற்றில் பாதுகாப்புத் தேடவும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## கொழும்பு நூதனசாலை கொள்ளை பிரதான சந்தேகநபர் மாட்டினார்

கொழும்பு, ஒக்.30

கொழும்பு தேசிய நூதனசாலையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரகசிய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய நூதனசாலையில் முன்பு சாதாரண உதவியாளராகப் பணிபுரிந்த பிரியந்த மெண்டிஸ் என்பவரே கைது செய்யப்பட்டவராவர். இவர் பிரியந்த மெண்டிஸ், குமார, கங்கெந்த என்ற மூன்று பெயர்களில் நடமாடி உள்ளார்.

பிரதான சந்தேகநபரின் கையடக்கத் தொலைபேசி அழைப்புகளை இரகசியமாக் கண்காணித்து வந்த பொலிஸார் அவரை நீர் கொழும்பு கடற்கரையில் வைத்துக் கைது செய்துள்ளனர். சந்தேகநபருடன் தொடர்புடைய ஒரு பெண்ணைக் கொண்டே சந்தேகநபரை மறைவிடத்திலிருந்து வெளியே கொண்டுவர முடிந்தது எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

சந்தேகநபரின் வாக்குமூலத்தின்படி பல திடுக்கிடும் விடயங்கள் வெளிப்பட்டுள்ளன.

கொள்ளை நடைபெற்ற மே-17 ஆம் திகதி தேசிய நூதனசாலை மூடப்படுவதற்கு சில மணி நேரங்களின் முன்னரே நூதனசாலைக்குள் புகுந்து பதுங்கி இருந்ததாகவும், எல்லா ஊழியர்களும் கடமை முடித்துச் சென்ற பின்னரே கைவரிசையைக் காட்டியதாகவும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார். வறுமை நிலையில் வாழும் தான் கொள்ளையடித்த பொருள்களை வெளியில் விற்பதன் மூலம் ஒரு கோடீஸ்வரனாக வாழலாம் என்ற நோக்கத்துடனேயே இந்தப் பொருள்களைத் திருடியதாக அவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் கடற்படை முகாமுக்கு அண்மித்த கிணறுகளில் கழிவு

## பயன்படுத்த முடியாது திண்டாடும் மக்கள்

யாழ்ப்பாணம்,ஓக்.30

மாதகல் மேற்கில் மக்கள் அண்மையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், கடற்படையினரின் முகாமுக்கு அண்மித்த பகுதிகளிலுள்ள வீட்டுக் கிணறுகளில் கழிவுகள் கொட்டப்பட்டுப் பாவிக்க முடியாத நிலைமையில் இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாதகல் மேற்கு ஜே/152 கிராம அலுவலர் பிரிவில் கடந்த 22ஆம் திகதி மக்கள் மீளக்குடியமர்வதற்கு 20 வருடங்களின் பின்னர் அனுமதிக்கப்பட்டனர்.

229 குடும்பங்கள் வரையில் மீளக்குடியமர்வதற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளன. இந்தக் குடும்பங்களுக்கு எதுவித உதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லை. கடும் மழையின் மத்தியிலும் பற்றைக்காடாக மண்டியுள்ள பகுதிகளைத் துப்புரவு செய்யும் பணியில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தப் பகுதி மக்கள் சிலர் குடிசை வீடுகளை அமைத்துள்ளனர். இதனைத் கடற்படையினர் பிடுங்கி அகற்றியதுடன் பற்றைக் காணிகளை மாத்திரம் துப்புரவு செய்யுமாறும் தற்காலிக குடிசைகள் எதனையும் அமைக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தி வருகின்றனர்.

மேலும் மாதகல் நுணசை பாடசாலையைச் சுற்றியுள்ள 15 வீடுகள் தொடர்ந்தும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்து வருகின்றன. இதனை அண்மித்த பகுதிகளிலுள்ள வீடுகளின் கிளைகளில் கழிவுகள் கொட்டப்பட்டு அவை பாவிக்க முடியாத நிலையில் உள்ளன. இறைச்சிக்காக வெட்டப்பட்ட விலங்குகளின் எச்சங்களே இவ்வாறு கிணறுகளில் போடப்பட்டுள்ளன.

மேற்படி கிணறுகளைத் துப்புரவு செய்வதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-5)

## முதியோர் சிறுவர் தினவிழா நாளை

தென்மராட்சி,ஓக்.30

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி சாவகச்சேரி நகர சபையின் முதியோர் மற்றும் சிறுவர் தின விழா நாளை புதன்கிழமை நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறும். இந்த விழாவில் சாவகச்சேரி நகர சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற 70 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர், ஊழியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் கடந்த ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் ந.அருந்தவபாலனும், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் கோ.சேது காவலரும் கலந்து கொள்வர். (த-9)

## சாவகச்சேரியிலும் புயல் எச்சரிக்கை

தென்மராட்சி, ஓக்.30

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகரசபை வாகனத்தில் புயல் எச்சரிக்கை அறிவிக்கபட்டது.

யாழ்.மாவட்டத்தில் புயல் வீசக்கூடும் எனப் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நகரசபை தலைவரால் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் 24 மணி நேரத்தில் புயல் வீசும் அபாயம் உள்ளதால் பொது மக்களை அவதானமாக இருக்குமாறும் கடலுக்கு மீன்பிடிக்க யாரும் செல்ல வேண்டாம் என்றும் ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. (த-9)

# மக்களின் இயல்பு வாழ்வை குழப்பும் கடற்படையினர்

## அரச அதிகாரிகளும் பாராமுகம்

யாழ்ப்பாணம், ஒக்.30

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்பும் விதத்தில் கடற்படையினர் தமது தலையீடுகளை மேற்கொண்டு வருகின்ற போதும் அதனை கண்டும் காணாதது போல் அரச அதிகாரிகள் இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

**அதனை கண்டும் காணாதது போல் அரச அதிகாரிகள் இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.**

மாதகல் மேற்கில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் காணி உறுதி இலக்கங்கள், உரிமையாளரின் பெயர், காணி அமைந்துள்ள வரைபட அமைவிடம் என்பவற்றின் விவரங்களைத் தமக்கு வழங்குமாறு கடற்படையினர் அரச அதிகாரிகளிடம் கோரியுள்ளனர்.

இந்த நிலையில் மீளக் குடியமர்ந்த மக்கள் தமது காணிகளில் கொட்டில்கள் அமைக்க முற்படுகின்ற வேளைகளில் கடற்படையினர் அவற்றைப் பிடுங்கி எறிந்துள்ளனர்.

காணிகளின் உரிமையாளர்கள் யாரென்று தெரியாத நிலையில், தாம் கோரிய விவரங்களை அரச அதிகாரிகள் வழங்கும் வரையில் மக்களைத் தற்காலிக வீடுகள் எதையும் அமைக்க வேண்டாமெனவும் கடற்படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

மக்களின் சிவில் நடவடிக்கைகளில், கடற்படையினர் தேவையற்ற விதத்தில் தலையீடுகள் மேற்கொள்கின்றனர். இதனால் மீளக் குடியமர்ந்த மக்கள் அச்ச நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

காணிகளில் உரிமையாளர்களை யாரென்று இனங்கண்டு அவர்களை அந்த இடத்தில் குடியமர்த்த வேண்டிய பொறுப்பு அரச அதிகாரிகளுடையதே, அதனை அவர்கள் ஒழுங்காக மேற்கொள்ள வேண்டுமென்று பொதுமக்கள் கோரியுள்ளனர். (த-5)

# கனமழையை அடுத்து மரக்கறிகள் படு சூடு

யாழ்ப்பாணம், ஒக்.30

குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் நாளுக்கு நாள் கிடுகிடுவென அதிகரித்து வருகின்றன.

**அதிகாலையில் சந்தைக்கு வந்து சேரும் மரக்கறிகள் நண்பகலுக்கு முன்னரே விற்றுத் தீர்ந்து விடுகின்றன.**

தற்போது பருவகால மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. இதனால் தாழ்ந்த பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட மரக்கறி வகைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் சந்தைகளில் மரக்கறிகளுக்குப் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளன.

அதிகாலையில் சந்தைக்கு வந்துசேரும் மரக்கறிகள் நண்பகலுக்கு முன்னரே விற்றுத் தீர்ந்து விடுகின்றன. அத்துடன் அவற்றின் விலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

குடநாட்டில் மரக்கறிகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டதை அடுத்து வியாபாரிகள் தம்புள்ளையில் இருந்து கூடுதலாக மரக்கறி வகைகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருகின்றனர். ஆயினும் அந்த மரக்கறிகளும் மழை காரணமாக அழுகிய நிலையிலேயே வந்து சேர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று திங்கட்கிழமை திருநெல்வேலி சந்தையில் மரக்கறி வகைகளின் விலைகள் வருமாறு:

கத்தரிக்காய் - கிலோ 140 ரூபா, வெண்டிக்காய்- கிலோ 90 ரூபா, தக்காளிப் பழம் - கிலோ 150 ரூபா, தக்காளிக்காய் - கிலோ 80 ரூபா, பாகற்காய் - கிலோ 160 ரூபா, பயிற்றங்காய் - கிலோ 90 ரூபா, கரட் - கிலோ 120 ரூபா, பூசணிக்காய் - கிலோ 60 ரூபா, உருளைக்கிழங்கு - கிலோ 80 ரூபா, முருங்கைக்காய் - கிலோ 120 ரூபா, கீரை - ஒரு பிடி 40 ரூபா, தேசிக்காய் - ஒன்று 20 ரூபா. (த-17)

# புதிய உப அலுவலகத்துக்கான திறப்பு கையளிக்காமைக்கு எதிராக வழக்கு

## வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.30

வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தை நிர்மாணித்த ஒப்பந்தகாரருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாகப் பிரதேச சபையின் தவிசாளர் உதயகுமார் அறிவித்துள்ளார். புதிய கட்டடப் பணிகள் முடிவடைந்த நிலையில் அதன் திறப்புகளை தன்னிடம் இதுவரை ஒப்படைக்காததை அடுத்தே இந்த சட்ட நடவடிக்கையில் அவர் இறங்கியிருக்கிறார்.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் ஊடாக வலி.கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகமும், ஆயுள்வேத வைத்தியசாலையும், அச்சுவேலி மத்திய பஸ் நிலையத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்டு வந்தது.

இந்தமாதம் 10 ஆம் திகதி பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மேற்படி கட்டடத்தை நேரில் பார்த்து வேலைகள் முடிக்கப்படாமல் இருந்ததை அவதானித்துள்ளார்.

அதன்பின்னர் வேலைகள் முடிவடைவதற்கு முன்பாக இந்த மாதம் 13ஆம் திகதி பிரதேச சபையின் செயலாளர், அமைக்கப்பட்டு வரும் புதிய கட்டடத்தின் திறப்பை ஒப்பந்தகாரரிடம் இருந்து பெற்று யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கையளித்ததாகவும், இதனை 19 ஆம் திகதி தமக்குத் தெரியப்படுத்தியதாகவும் பிரதேச சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

பிரதேச சபையின் தவிசாளர் என்ற ரீதியில் கட்டடத் திறப்பை தன்னிடம் கையளிக்காமைக்கு ஒப்பந்தகாரர் மீது சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக பிரதேச சபையின் செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

கடந்த செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல் கடிதத்தின் பிரகாரமே செயற்பட்டேன். மேற்படி கடிதத்தின் பிரதி கடந்த மாதம் 28 ஆம் திகதி சபை உறுப்பினர்கள் 21 பேருக்கும் வழங்கப்பட்டது.

மேலும் ஒப்பந்தத்தின் பிரகாரம் சகல வேலைகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கடந்த 13 ஆம் திகதி ஒப்பந்தகாரரிடம் இருந்து திறப்பை நான் பெற்று உடனடியாகவே உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கையளித்தேன்.

அதன்பின்னர் இரு தினங்கள் எனக்குச் செயலமர்வு இருந்த காரணத்தால் மறுநாளே நான் அதனைத் தவிசாளரிடம் தெரியப்படுத்தினேன்.- என்றார்.

இந்தவிடம் தொடர்பில் குறிப்பிட்ட கட்டட வேலைகளை மேற்கொள்ளும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டபோதும் அவர்கள் பதிலளிக்கவில்லை. (த-5)

# மக்கள் பிரச்சினைக்கு உரிய வகையில் தீர்வு

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் கூறுகிறார்

வலி. வடக்கு, ஒக். 30

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் நடைபெறும் மக்கள் தினத்தில் யாழ்.மாவட்ட பொதுமக்கள் கலந்துகொள்வதுடன் தமது பிரச்சினைகளைக் கூறி உரிய தீர்வுகளையும் பெற்று வருவதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக்பெரெரா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் குறிப்பிட்ட மக்கள் தினம் சம்பந்தமாகக் கேட்டபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஒவ்வொரு புதன்கிழமையும் இடம்பெறும் பொதுமக்கள் தினத்தில் வட மாகாண பொலிஸ் மா அதிபர் 'பிரதிப் பொலிஸ் மா அதிபர்' சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்கின்றார்கள்.

இந்த நாளில் பொலிஸார் தொடர்பான குறைகள் இருந்தால் அதனை தமக்கு பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாக முறையிடலாம் எனவும் மற்றும் பொலிஸ் நிலையங்களில் முறையிடப்பட்டும் நீண்ட நாள்களாகியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத விடயங்கள் சம்பந்தமாகவும் மற்றும் பொதுமக்கள் தாம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் முறையிடலாம் என்று அவர் கூறினார்.

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.பிக்கு பாலூட்டுகிறது அரசு

## சாடுகிறது ஐ.தே.க.

கொழும்பு,ஒக் 30

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களில் ஒருவரான கே.பி என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் சர்வதேச ஆயுத கடத்தல்களுடன் தொடர்புடையவர். பயங்கரவாதத் தலைவரான அவரை இராணுவப் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ள போதிலும் கே.பிக்கு எதிராக அரசும் எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளையும் எடுக்காது அவருக்குப் புட்டிப் பாலூட்டிக்கொண்டிருக்கிறது என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கே.பிக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதாக அரசு உத்தரவாதம் அளித்திருந்தது. அவரை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தபோதும் உத்தரவாதமளித்ததுபோல அவருக்கு எதிராக அரசு எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

கே.பிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்று படையினரும் மக்களும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றனர். அதேபோல அவர் இந்தியாவுக்குக் கையளிக்கப்படவேண்டியவர். அவ்வாறானதொரு பயங்கரவாதத் தலைவருக்கு அரசு புட்டிப்பால் ஊட்டிக்கொண்டு இருக்கிறது. அவர் கிளிநொச்சியில் அரச சார்பற்ற நிறுவனமொன்றை நடத்திக் கொண்டிருக்கிறார். இவரது விடயத்தில் அரசு சட்டத்தையும் மீறி இருக்கிறது.

13 ஆவது திருத்த விவகாரத்தில் அரசு நாடகமாடி கொண்டிருக்கிறது. சில அரசியல் பிரிவுகளே இவ்விடயத்தில் அரசுக்குப் பின்நின்று அழுத்தம் கொடுத்து கொண்டிருக்கின்றன. அதன் மூலம் அரசு சந்தோஷத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறது-என்றார். (த)

## அறுந்து...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

முஸ்தபா கலாகரன் (வயது -17) என்ற முஸ்லிம் மாணவனே சம்பவ இடத்திலேயே துடிதுடித்துப் பலியாகி உள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்று இரவு தனியார் வகுப்புக்குச் சென்றுவிட்டு கலாகரன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

அந்த வேளை கடும் காற்றுடன் கூடிய மழை பெய்து கொண்டிருந்தால் மின்சாரக் கம்பி அறுந்து பாதையில் கிடந்துள்ளது.

மழை வெள்ளத்தினூடு கடத்தப்பட்ட மின்சாரம் மாணவனின் உயிரைப் பறித்துள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலாவின்சன் தயான் விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் பிரேத பரிசோதனைக்களுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-16-8)

## கரையோரத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நாவாந்துறைப் பகுதியிலிருந்து சுமார் 150 குடும்பங்கள் புயல் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் நாவாந்துறை தேவாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உடனடி சமைத்த உணவுகள் மற்றும் இதர வசதிகளை யாழ். செயலகத்தினூடாகவழங்கியுள்ளோம்.

இதேபோல வடமராட்சி, வடமராட்சி கிழக்கு கரையோரங்களில் இருந்தும்இரவிரவாக அதிகளவான மக்கள் இடம்பெயர்ந்தவண்ணம் உள்ளனர்.

இவர்களுக்குரிய உடனடி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார்.

புயல் அச்சம் காரணமாக வடமராட்சி கரையோரமாக பருத்தித்துறை, பருத்தித்துறை முனை, தாளையடி, செம்பியன்பற்று, மணற்காடு, இன்பருட்டி, வல்வெட்டித்துறை, கற்கோவளம், சுப்பர்மடம், பொலிகண்டி ஆகிய பகுதிகளிலிருந்தும் வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில், வெற்றிலைக்கேணி, தாளையடி, கட்டைக்காடு ஆகிய பகுதிகளிலும், தீவகத்திலும் மக்கள் பாதுகாப்பான இடம் தேடி இடம்பெயர்ந்து இருப்பதாக தெரியவந்துள்ளது. (த-ஐ-16-8)

## மிதிவெடியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தில் சிறுமி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவத்தில் இவரது சகோதரியான எஸ். புஸ்பலதா (வயது - 28) என்பவர் படுகாயமடைந்த நிலையில் முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

தற்போது அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை சம்பவத்தில் உயிரிழந்த சிறுமியின் சடலம் விசாரணைகளின் பின் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-400)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விவகாரத்துறை அமைச்சராக இருந்து இலங்கை அரசுடனான இந்திய உறவுக்கு பாலமாக விளங்கிய கிருஷ்ணா தற்போது, தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை இந்தியப் பிரதமரிடம் கையளித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே இலங்கை விவகாரம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டார்.

இதன்போது இலங்கையில் தமிழ் மக்களின் புனர்வாழ்வு மற்றும் அடிப்படை உரிமைகளின் பாதுகாப்பு தொடர்பில் இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்கு உரிய அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

## நள்ளிரவுமுதல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யேற்றத்தைத் தொடர்ந்து

பாணின் விலை உள்ளடங்களாக அனைத்து பேக்கரி உணவு உற்பத்திகளின் விலையையும் அதிகரிப்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி உணவு உற்பத்திகளின் திருத்தப்பட்ட விலை தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக பேக்கரி உரிமையாளர்களின் சந்திப்பொன்று நேற்றுக்காலை இடம்பெற்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.கடந்த வெள்ளிக்கிழமை இரவு கோதுமை மாவின்விலை6ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 2013 ஜெனிவா..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இதற்கிடையில் அரசின் பிரதிநிதிகள் சிலர் விரைவில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர் மட்டத்தினரை சந்தித்து, இது தொடர்பில் பேச்சு நடத்துவர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சிறுவனை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

புறப்பட்டுச் சென்ற நிலையில் இன்றுவரை வீடுதிரும்பவில்லை என்றும், உறவினர் வீடுகளில் தேடியும் சிறுவனை மீட்கமுடியவில்லை எனவும் தாயார் கடந்த 22 ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் இன்றுவரை குறித்த சிறுவன் பற்றிய தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை. 3 ஆம் யூனிற், முரசுமோட்டையைச் சேர்ந்த ஜெயக்குமார் கிருசாந் என்ற பதினான்கு வயதுடைய சிறுவனே காணாமற்போயுள்ளான். (ஐ-6)

## முல்லைத்தீவில்......

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இடம்பெயர்ந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இரணைப்பாலைக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். இந்தத் தகவலை இரணைப்பாலை பங்குத் தந்தை அருட்செல்வன் அடிகளார் உறுதிப்படுத்தினார். மக்கள் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதால் அவர்களுக்கான வசதிகளை செய்து கொடுப்பதற்கு தாம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் மேற்கில் இருந்து 25 வரையான குடும்பங்கள் இடம்யெர்ந்து முள்ளிவாய்க்கால் அ.த.க. பாடசாலையில் தஞ்சம் புகுந்துந்துள்ளன.

பலத்த காற்று மற்றும் மழை காரணமாக அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் தறப்பாள் கொட்டகைகள் பல தூக்கி வீசப்பட்ட நிலையிலேயே மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

நேற்று பிற்பகல் 2 மணியிலிருந்து காற்று பலமாக வீசியதுடன் கடும் மழையும் பெய்துள்ளது. சுமார் 6 மணி நேரம் தொடர்ந்து வீசிய காற்றால் முள்ளிவாய்க்கால் அம்பலவன்பொக்கணை, புதுமாத்தளன், ஆனந்தபுரம், சிவநகர் போன்ற பகுதிகளில் தற்காலிகமாகஅமைக்கப்பட்ட தறப்பாள் கொட்டகைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. மழை தொடர்ந்து பெய்து வருவதால் அந்த மக்கள் இல்லிட நெருக்கடிகளை எதிர்நோக்கி உள்ளனர். இதேவேளை அந்தப் பகுதிகளில் இடம்பெயர்ந்து தங்குவதற்கு பொது கட்டடங்கள் இல்லாத நிலையில் தொடர்ந்தும் அவர்கள் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி உள்ளது.

காற்றுடன் கூடிய மழை தொடர்ந்து பெய்து வருவதால் அந்தப் பகுதிகளில் மேலும் பல குடும்பங்கள் பாதிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய காற்றுடன் கூடிய மழை அவற்றின் சேதம் தொடர்பில் முல்லைத்தீவு அரச அதிபர் கூறுகையில்,

'நேற்றுப் பிற்பகலில் இருந்து பலத்த காற்றுடன் கூடிய மழை காலநிலை நிலவுகிறது. இதனால் மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி வலியுறுத்தி உள்ளோம். இதுவரைக்கும் மக்களுக்கு பலத்த சேதம் எதுவும் ஏற்பட்டதாக தரவுகள் இல்லை. காற்றுடன் மழை தொடர்வதால் சேத விவரம் குறித்து தற்போது கூறமுடியாது' என்றார்.

முல்லைத்தீவு கடலுக்குக் கிழக்காக 100 கிலோ மீற்றர் தொலைவில் புயல் மையங்கொண்டு நகர்ந்து வருவதால் அது கரையை எட்டும்போது சூறாவளி ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-400-16-6)

## '13' ஐ பாதுகாப்பதற்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அரசின் பங்காளிக் கட்சிகளிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர் ஆகியோர் இணைந்து இந்த இயக் கத்தை ஆரம்பிக்கவுள் ளனர் என நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, 13 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும், அது பிரபாகரனுக்காகவே உருவாக்கப்பட்டது, தமிழர்களின் பிரச்சினைக்கு அது ஒருபோதும் தீர்வாக அமையாது எனத் தெரிவித்திருந்தார்.

இவரின் இந்தக் கருத்தின் பின்னர், ஆளும்தரப்பின் இனவாத அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க மற்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர ஆகியோர் 13 ஆவது திருத்தச் சட்ட ஒழிப்புக்கு ஆதரவாக உறுதியாகக் குரல் கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை, அமைச்சர்களான திஸ்ஸ வித்தாரண, வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர ஆகியோர் 13 ஆவது திருத்தச் சட்டம் நாட்டில் இல்லாதொழிக்கப்படக்கூடாது, அது ஒழிக்கப்பட்டால் நாடு பேராபத்தைச் சந்திக்க நேரிடும் என்கின்றனர். அதிகாரப் பரவலாக்கலினூடாகத் தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை வழங்கவேண்டும் என்றும் 13 ஆவது திருத்தச்சட்ட ஒழிப்புக் கோஷத்துக்கு எதிராக அரசினுள் இருந்து கொண்டே குரலெழுப்பி வருகின்ற அதேசமயம், எதிர்க்கட்சிகளும் இந்த 13ஆவது திருத்த ஒழிப்புக்கு எதிராகத் தமது கடும் அதிருப்தியை வெளியிட்டு வருகின்றன.

13 ஆவது திருத்தச்சட்டம் அரசமைப்பிலிருந்து நீக்கப்படவேண்டும் என்பது தமது கருத்தல்ல என்று அரசு அறிவித்துள்ள போதிலும், அரசின் முக்கிய பதவியிலுள்ள அதிகாரியொருவர் இவ்வாறானதொரு கருத்தைத் தெரிவித்திருப்பதாலேயே அரசியல் களத்தில் பல வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், 13 ஆவது திருத்தச் சட்டம் பாதுகாக்கப்படவேண்டும். அதனூடாகத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கி அவர்களுக்குச் சிறந்த தீர்வை அரசு பெற்றுக்கொடுக்க வேண்டும். 13 ஆவது திருத்தத்தை அரசமைப்பிலிருந்து நீக்கக்கூடாது என்று அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கிலும், நாட்டில் வேரூன்றுகின்ற பௌத்த ஆதிக்கத்தை இல்லாதொழிக்கும் நோக்கிலும் பொது இயக்கமொன்று உருவாக்கப்படவுள்ளது.

இந்தப் பொது இயக்கமானது ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, கொழும்பு மாநகர முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலி ஆகியோரால் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான பேச்சுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன எனக் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

இந்தப் பொது இயக்கத்தில் பொது எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். அத்துடன், 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஆதரிக்கும் ஆளும்தரப்பிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்களும் கலந்துகொள்கின்றனர். மேலும் சட்டத்தரணிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் இந்த இயக்கத்தில் கலந்துகொள்கின்றனர்.

13ஆவது திருத்தத்தைப் பாதுகாக்கவும், நாட்டில் வேரூன்றிவரும் சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை இல்லாதொழிப்பதற்குமான இந்தப் பொது இயக்கத்தின் செயற்பாடுகள் இவ்வாரத்திற்குள் ஆரம்பமாகும் என்றும் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். (த-சி)

## மூதூர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் இந்த விசாரணைகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவுக்கு கொண்டுவரப்படும் என உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவித்தன.

சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் ஆகியன இந்த வழக்குகளை மீளவும் ஆரம்பித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அழுத்தம் கொடுத்தன.

கடந்த மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்ற கூட்டத்தொடரில் சர்வதேச மன்னிப்புச்சபை இந்த விவகாரத்தை எடுத்துக்கொண்டது.

இது தொடர்பில் சட்டமா அதிபர் பாலித்த பெர்ணான்டோ கூறுகையில், சட்டமா அதிபர் திணைக்களம், மேற்படி வழக்குகள் இவ்வருட இறுதிக்குள் நிறைவுக்குக் கொண்டு வரும் - என்றார்.

இதேவேளை, இந்த வழக்குகளுக்குப் பொறுப்பான மேலதிக சொலிஸிஸ்டர் ஜெனரல் சுஹத கம்லத் கூறுகையில், இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பிலான ஆதாரங்களை தனித்தனியாக ஆராய்ந்து வருகின்றனர் எனவும் இந்த சம்பவங்களோடு தொடர்புடையவர்களுக்கு எதிராக மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறார் எனவும் கூறினார்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதி திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன், பிரான்ஸ் நாட்டின் தொண்டு நிறுவனமொன்றைச் சேர்ந்த 17 பணியாளர்கள் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பிலும் ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அந்தச் சம்பவங்களை ஆராய்ந்த மேற்படி குழு தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்திருந்தது என்பது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தேசிய தலைமைத்துவத்தின் பண்பு மலருமா....? எப்போது...?

திருகோணமலை நகரத்தை அண்டியுள்ள பாலையூற்றுப் பகுதியில் அமைந்துள்ள புனித லூர்த்து அன்னை தேவாலயத்தில் நிறுவப்பட்ட மாதா சொரூபத்தைச் சேதமாக்கிய விஷமிகளை உடனடியாகக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்-

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் திருகோணமலை நகரசபையின் தலைவர் க.செல்வராஜா.

நாட்டின் எந்தப் பகுதியிலேனும் சிறுதிருட்டு நடைபெற்றிருந்தால், அதனுடன் தொடர்புடையவர்களை, அல்லது சந்தேக நபர்களைக் கைது செய்யும் பொலிஸார்--

தமிழ், முஸ்லிம் மக்களின் மதத் தலங்களை அவர்களின் மத குரவர்களின் சிலைகளை சேதமாக்கும் விஷமிகளை கைது செய்யாமல் இருப்பது ஏன்? இது குறித்து மக்கள் மத்தியில் மிகுந்த சந்தேகங்கள் உண்டு- என்றவாறும் அவர் தொட்டுக்காட்டியுள்ளார்.

அத்தோடு நிறுத்தாமல், அரசு இது விவகாரத்தில் தக்க நடவடிக்கை எடுக்காவிடில், விஷமிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தாவிடில், தமிழ் பேசும் மக்கள்- தமிழர்களும் முஸ்லிம்களும்- கிளர்ந்தெழும் நிலை உருவாகும் என்றும் திருகோணமலை நகரசபைத் தலைவர் விளம்பியுள்ளார்.

1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட புனித லூர்த்து அன்னையின் சொரூபம், வடக்கு-கிழக்கில் போர் தீவிரமாக நடைபெற்ற மூன்று தசாப்த காலத்தில் கூட எந்தவித பாதிப்பும் இன்றி இருந்தது. ஆனால், தற்போதைய அமைதிச் சூழலில் இவ்வாறான அனர்த்தம் நடைபெற்றுள்ளமை, மக்களிடம் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது என்று பங்குத் தந்தை அருட்திரு. அன்றியாஸ் பெர்ணான்டோ தெரிவித்திருக்கிறார்.

மாதா சொரூபம் (வெள்ளிக்கிழமை இரவு) உடைக்கப்பட்டு நான்கு நாள்கள் கழிந்தும்-நேற்று (29-10-2012) வரை- பொலிஸாரால் எவரும் கைது செய்யப்படவில்லை. அதனால் நகர சபைத் தலைவரினது சந்தேகம் கருத்தில் கொள்ளத்தக்கது- கொள்ளப்பட வேண்டியது.

தம்புள்ளையில் அமைந்துள்ள அறுபது வருட காலப் பழைமை வாய்ந்த ஹைரியா ஜும்மா பள்ளிவாசல் மீது, கடந்த ஏப்ரல் மாதம் இருபதாம் திகதி, ஐந்நூறுக்கும் மேற்பட்ட பௌத்த மத குருமார் கூட்டமாகச் சென்று தாக்குதல் நடத்திய சம்பவம் நடைபெற்றது. அங்கு தொழுகைக்காகச் சென்றிருந்த பக்தர்கள், பொலிஸாரின் பிரசன்னத்தில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

அதன் பின்னர் இஸ்லாமிய மக்களின் மத சுதந்திரத்தைப் பறிக்கும் வகையிலான பல அடாத்தான சம்பவங்கள், கொழும்பு மாவட்டம் உட்பட பல பகுதிகளில் நடைபெற்றுவருகின்றன. ஆகப் பிந்தி அனுராதபுரம் மல்வத்துஓயாவில் அமைந்துள்ள அரபு மத்ரஸாவுக்கு இந்த மாதம் பிற்பகுதியில் தீ வைத்துச் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைச் சேர்ந்தவர்களின் வணக்கத் தலங்கள் மீதும், அந்தச் சமயங்களைச் சேர்ந்த புனிதர்களினதும், தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களினதும் உருவச்சிலைகளைச் சேதமாக்கும் புதிய வகையான வன்செயல்கள் என்று கருதக்கூடிய அக்கிரமங்கள், இந்த வருட ஆரம்பத்தில் (ஜனவரி 12 இல்), மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம்பதியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்து மதத்தவர்களால் வீரத்துறவி என்று கொள்ளப்படும், சுவாமி விவேகானந்தரின் உருவச் சிலை சிதைக்கப்பட்டது!இத்தனைக்கும், அவர் அனைத்து மதங்களையும், சமமாகக் கொள்ளுமாறு போதித்த சமரச ஞானி.

அதனைத் தொடர்ந்து, இந்து சமயத்தவர்களால் கல்விக்குரிய கடவுளாகக் கருதப்படும் சரஸ்வதிதேவியின் சிலை- பாடசாலை ஒன்றில் நிறுவப்பட்டிருந்த சிலை- சேதமாக்கப்பட்டது.

அதே பாணியில், கடந்த வருடம் ஒக்ரோபரில்- சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர்- இலங்கைத் தமிழர்களால் ஈழத்துக் காந்தி என்று போற்றப்படும் தந்தை செல்வாவின் உருவச்சிலையின் கழுத்துத் (திருகோணமலையில்) துண்டாடப்பட்டது. அதே போன்று இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இந்தியாவின் தந்தை மகாத்மா காந்தி, சாரணியத்தின் நிறுவுநர் பேடன் பவுல், சுவாமி விபுலானந்தர், புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை ஆகியோரின் சிலைகளும் சேதமாக்கப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட, மத விரோத, இன விரோதச் செயற்பாடுகளுக்குப் புறம்பாக, தமிழ் மக்களின்- தமிழ் பேசும் மக்களின்- பூர்வீக நிலங்கள், அவர்களுக்கு உரியனவே அல்ல என்று நிறுவும் "சூத்திரங்களும்" ஆக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் பண்டைய காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட, இந்துக்களின் பஞ்ச ஈஸ்வரங்களின் இரண்டான மன்னார் திருக்கேதீஸ்வரத்தையும் சிலாபம் முன்னேஸ்வரத்தையும், அவற்றின் சரித்திரத்தையும் புதுக்கி எழுதும் திட்டத்துக்கு அதற்கான முன்முயற்சிகள் உள்ளாடும் கள்ளாடுமாக கைக்கொள்ளப்படுகின்றன.

திருக்கேதீஸ்வரத்தில் புத்த பெருமானுக்கு சிலை வைக்க முயற்சிகள் எடுக்கப்படுவதும், முன்னேஸ்வர ஆலயத்தின் வரலாற்றுச் சுவடிகள் காணாமல் போயிருக்க வேண்டுமென்று புதுக்கதைகள் விடுவதும் மேற்குறிப்பிட்ட சூத்திரங்களில் அடங்கும்.

இத்தகைய சூத்திரங்கள், அரசாங்கம் "சுத்துமாத்துப் பண்ணும்" தேசிய நல்லிணக்கம் என்பதற்கான முன்னோட்டம் அல்ல. இதனைத் தேசிய பிக்குகள் முன்னணியும் பெருந்தன்மையுடன் ஒப்புக்கொண்டுள்ளது.

பௌத்தர்கள் இல்லாத , தமிழர்கள் செறிந்து வாழும் வடக்குப் பிரதேசத்தில் , விகாரைகளை அமைப்பது நாட்டில் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் செயல்--

வடக்கு, கிழக்கில் புதிதாக விகாரைகளை அமைப்பதோ அல்லது புத்தர் சிலைகளை நிர்மாணிப்பதோ மதப்பற்றல்ல-- என்று பிக்குகள் முன்னணியின் உயர் பதவியில் உள்ள பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவித்திருப்பது இங்கு குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய ஒன்றாகும்.

தேசிய நல்லிணக்கத்தை வெறுமனே பேச்சாலும், எழுத்தாலும் அதற்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளாலும் எய்துமுடியாது. அரசதரப்பின் பற்றுதியான, செயற்பாடுகளால் மட்டுமே அதனை ஈட்ட முடியும். அரசுக்கும் அதன் தலைவர்களுக்கும் அதனை நாடும் அப்பழுக்கற்ற மனம் வேண்டும்; இன்றியமையாதது. அதுவே தேசியத் தலைமைத்துவத்தின் மாற்றமில்லாத பண்பாகப் பூக்கவேண்டும். இன்றைய இலங்கையில் மலருமா அது ....? இனி எப்போது....?

# '13' ஐ நீக்க நாடாளுமன்றத்தில் யோசனை வைத்தால் எதிர்ப்போம்

### இப்போது இப்படிக் கூறுகிறது மு.காங்.

கொழும்பு,ஒக்.30

13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய நாடாளுமன்றத்தில் ஏதேனும் யோசனை முன்வைக்கப் பட்டால், அதனை எதிர்ப்போம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு அரசிடம் முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு, மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும் என்று அரசுக்கு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், அது மாகாண மட்டத்தில் நடத்தப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி கூறினார்.

அரசில் உள்ள இனவாத கட்சிகள் மாத்திரம் 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன. அவர்களின் இந்த செயற்பாடு மிகவும் ஆச்சரியமானது என்று அவர் தெரிவித்தார்.

உலகில் வேறு நாடுகளில் இதனை விட அதிகளவான மொழிகள், இனங்கள், மதங்கள், கலாசாரங்களை கவனத்தில் கொண்டு அந்த நாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு வெற்றிகரமான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறான நாடுகள் தற்போது உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளாக மாறியுள்ளன. ஒவ்வொரு பிரதேசத்துக்குரிய பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட மாகாண சபைகளின் ஊடாக தீர்த்துக் கொள்வது சிறந்தது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

## மக்களின் வேண்டுகோளால் கட்சி உறுப்புரிமை தப்பியது

### கரு ஜயசூரிய எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.30

பொதுமக்களின் வேண்டுகோளின் படியே பொன்சேகாவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பில் தான் எடுத்த முடிவை கட்சிக்கு தெரியப்படுத்தியதாக அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களது கட்சி உறுப்புரிமை பறிக்கப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 18ஆம் திகதி சரத் பொன்சேகா தலைமையில் கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று ஐ.தே.க. செயற்குழு அறிவித்தது.

எனினும் தீர்மானத்தை மீறி கூட்டத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித தெவரப்பெரும, பாலித ரங்கே பண்டார, அசோக்க அபேசிங்க மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான மைத்திரி குணரத்ன, ஷிரால் லக்திலக ஆகியோரின் கட்சி உறுப்புரிமை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் 15 பேரின் கட்சி உறுப்புரிமையும் தற்காலிகமாக பறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## அரச உயர் பதவி வகிப்போர் மேலதிக பதவி வகிக்கத் தடை

கொழும்பு, ஒக்.30

அரச சேவையில் முக்கிய உயர் பதவியொன்றை வகிப்போர், தமது அந்தப் பதவிக்கு மேலதிகமாக வேறு பதவியொன்றையோ, பலவற்றையோ வகிப்பது தடை செய்யப்படவுள்ளதாக அரசின் உயர்மட்டத் தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

அரச சேவையைச் செயற்றிறன் மிக்கதாக ஆக்குவதே இத்திட்டத்தின் நோக்கமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஓர் அமைச்சின் செயலாளர் பதவி வகிப்போர் கூட கூட்டுத்தாபனம், சபை போன்றவற்றின் தலைமைப் பதவியை வகிக்க நேர்வதால் அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் பின்னடைவு காண நேர்வதாக பல தரப்புக்களால் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது. இதனால் அரசின் சிற்சில செயற்றிட்டங்களை உரிய வகையில், உரிய நேரத்தில் நிறைவேற்றிக் கொள்ள இயலாத சிரமமான நிலை உருவாகிறது.

இது குறித்து விசாரணை மேற்கொண்டு தாம் வகிக்கும் உயர் பதவிக்கு மேலதிகமாக வேறு பதவிகளையும் வகிக்கும் அதிகாரிகளது பெயர்ப் பட்டியலொன்றைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அரச உயர் அதிகாரிகள் வகிக்கும் மேலதிக பதவிகளிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டு அப் பதவிகளுக்கு தகுதியான புதியவர்கள் நியமனம் பெற வாய்ப்பு ஏற்படவுள்ளது. (த)

## நெல்லியடி லயன்ஸ் கழகம் ஞாயிறன்று அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,ஒக்.30

யாழ்.மாவட்டத்தின் 24 ஆவது லயன்ஸ் கழகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட அங்குரார்ப்பணக் கூட்டம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ச.மனோகரன் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வுக்கு விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழக 306பி, மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா, உதவி மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்குரார்ப்பண நிகழ்வுக்கு வடமாகாணத்தில் உள்ள 25 லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் மாவட்ட, பிராந்திய, வலய லயன்ஸ் கழகங்களின் தலைவர்களும் கலந்து கொண்டதாக லயன்ஸ் மாவட்ட ஊடகப் பிரிவு தலைவர் லயன் எஸ்.கே.நவரத்தினம் தெரிவித்தார்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தின் தலைவராக லயன் ரி.யோகேந்திரனும், செயலாளராக லயன் எம்.எஸ்.சரவணபவவும் பொருளாளராக லயன் எஸ்.சரவணபவனும் தெரிவானார்கள்.

அனைத்து ஆரம்ப அங்கத்தவர்களுக்கும் மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா சத்தியப் பிரமாணம் செய்து வைத்தார். (த-9)

## 'கொக்ஸசி' வைரஸ் காய்ச்சல் மழையை அடுத்து பரவும் நிலை

கொழும்பு,ஒக்.30

மழைக்காலத்தின் ஆரம்பத்துடன் சிறார்கள் "கொக்ஸகி" எனப்படும் வைரஸ் காய்ச்சலுக்கு உள்ளாகும் அபாயம் நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

இந்த வைரஸ் காய்ச்சலுக்கு பெரும்பாலும் சிறுவர்களே அதிகளவில் இலக்காவதுடன் காய்ச்சல் ஏற்பட்ட சிறார்களின் பற்கள்,வாய் மற்றும் பாதங்களை அண்டியதாகப் பருக்கள் தோன்றுவதாகவும் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

**காய்ச்சல் ஏற்பட்ட சிறார்களின் பற்கள்,வாய் மற்றும் பாதங்களை அண்டியதாகப் பருக்கள் தோன்றுவதாகவும் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.**

ஒரு வயது முதல் 10 வயது வரையான சிறுவர்களுக்கு இந்தக் காய்ச்சல் தொற்றும் அபாயம் நிலவுவதாகவும் இந்தக் காய்ச்சல் ஏற்பட்டுள்ள நோயாளரொருவரிடமிருந்து மேலுமொருவருக்குத் தொற்றக்கூடிய வாய்ப்பு அதிகமுள்ளது.

தற்போது பெய்யும் மழை காரணமாக இந்த வைரஸ் காய்ச்சல் மிக வேகமாகப் பரவிச் செல்லும் அபாயம் நிலவுவதாகவும், குறிப்பாக மழை நீரைக் கைகளால் அலசுவதாலும் இந்த நோய் பரவ அதிகவாய்ப்புள்ளதாகவும்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் புதுவெளி கிராமத்துக்கு 47 இந்தியன் வீடுகள் ஒதுக்கீடு



மன்னார்,ஒக்.30

இந்திய வீட்டுத் திட்ட தெரிவில் மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரசூல் புதுவெளிக் கிராமத்துக்கு 47 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் முஸ்லிம் மக்களே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் நாட்டில் நிலவிய அசாதாரண நிலை காரணமாக 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து புத்தளம், கற்பிட்டி உட்பட நாட்டின் பல பகுதிகளில் வாழ்ந்து வந்தனர்.

தற்போது இவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளனர். இவர்கள் முன்னர் வாழ்ந்த வீடுகள் போர் காரணமாக சேதமடைந்த நிலையில் தற்காலிக வீடுகளை அமைத்து இவர்கள் வசித்து வருகின்றனர்.

தற்போது இந்தியாவின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வரும் இந்தியன் வீட்டுத் திட்டத்தில் 47 வீடுகள் இந்தக் கிராமத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்தக் கிராம மக்கள் மகிழ்ச்சியடைந்ததுடன் 20 வருடங்களின் பின்னர் தமது கிராமம் அபிவிருத்திப் பாதையில் பயணிப்பதாகவும் தெரிவித்தனர்.

மேலும் தமது கிராமத்துக்கான போக்குவரத்து வசதிகள் பற்றாக்குறையாக உள்ளதுடன் வீதிகளும் சேதமடைந்து காணப்படுவதாகவும் இவர்கள் முறையிடுகின்றனர்.

(க-12)

# புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் காணிகள் தொடர்பான பிணக்குகள்

## நாளாந்தம் ஐம்பதுக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்

புதுக்குடியிருப்பு,ஒக்.30

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் காணிகள் தொடர்பான முறைப்பாடுகள் தினமும் கிடைத்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த போரின் போது வீடுகள் அனைத்தும் அழிவடைந்துள்ள நிலையில் காணிகளுக்கு இடப்பட்ட வேலிகளும் முற்றாக அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. தற்போது இந்தப் பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள் புதிதாக வேலிகளை அமைக்கும் போது எல்லைப் பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன.

இது தொடர்பான முறைப்பாடுகள் தினமும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு வந்து குவிகின்றன. வார நாள்களில் திங்கள், புதன் ஆகிய கிழமைகளிலேயே காணிப் பிரச்சினைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போதும் தினமும் 50க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலக குடியேற்ற உத்தியோகத்தர் எஸ்.கருணாகரன் தெரிவித்தார்.

மக்களால் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக புதுக்குடியிருப்பு பதில் பிரதேச செயலர் இ.பிரதாப் தலைமையில் நேரடியாகச் சென்று பிணக்குகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இங்குள்ள சில பகுதிகளில் தேவையற்ற சக்திகளின் தலையீடு அதிகமாகக் காணப்படுவதால் பிணக்குகளைத் தீர்க்க முடியாதுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

(க-410)

## புதுக்குடியிருப்பு — புதுமாத்தளன் வீதி பயணிக்க முடியாத மோசமான நிலையில்

### விழுந்தெழும்பிச் செல்கின்றனர் பயணிப்போர்

வவுனியா, ஒக்.30

புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து இரணைப்பாலை ஊடாக புதுமாத்தளன் பகுதிக்குச் செல்லும் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியினூடாகவே முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை ஆகிய பகுதிகளுக்கு தினமும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகளின் வாகனங்களும் தென் பகுதியைச் சேர்ந்த இரும்பு வியாபாரிகளின் கனரக வாகனங்கள் உட்பட இதர வாகனங்கள் பலவும் வந்து செல்கின்றன.

இதனால் வீதி முழுவதும் குன்றும் குழியுமாக மாறியுள்ளது. இப்போது சைக்கிள் உட்பட ஏனைய வாகனங்களும் பயணிக்க முடியாத அளவுக்கு வீதி படுமோசமாகக் காணப்படுகிறது. தற்போது பருவ மழை ஆரம்பித்துள்ளதால் வீதி எங்கும் வெள்ளம் தேங்கி நிற்பதால் வீதியால் பயணம் செய்வோர் குழிகளில் விழுந்தெழும்பிச் செல்ல வேண்டியுள்ளது. பாவனை அதிகரித்துள்ள இந்த வீதியை உடனடியாகத் திருத்தி போக்குவரத்தை இலகுபடுத்தித் தருமாறு இந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் கேட்டுள்ளனர். (ஐ-400)

## கொட்டுகிறது கன மழை உயருகின்றன குளங்கள்

துணுக்காய்,ஒக்.30

தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக துணுக்காய், பாண்டியன்குளம், மாந்தை கிழக்கு பிரதேசங்களிலுள்ள குளங்களின் நீர் மட்டம் உயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனிக்குளத்தில் 12 அடி 9 அங்குலமாகவும், பணங்காமம் குளத்தில் 5 அடியாகவும், மல்லாவிக் குளத்தில் 5 அடி 9 அங்குலமாகவும், கொல்லவிளாங்குளத்தில் 5 அடி 6 அங்குலமாகவும், கல்விளான் குளத்தில் 4 அடி 6 அங்குலமாகவும், தேறாங்கண்டல் குளத்தில் 8 அடியாகவும், பழையமுறிகண்டிக்குளத்தில் 6 அடி 6 அங்குலமாகவும், மருதங்குளத்தில் 9 அடி 6 அங்குலமாகவும், ஐயன்கன்குளத்தில் 4 அடி 1 அங்குலமாகவும், அம்பலப்பெருமாள்குளத்தில் 4 அடி 11 அங்குலமாகவும், கோட்டைகட்டிய குளத்தில் 6 அடி 10 அங்குலமாகவும், தென்னியன்குளத்தில் 2 அடி 8 அங்குலமாகவும் நீர்மட்டம் நேற்று காலை வரை காணப்பட்டதாக வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் விகர்ணன் தெரிவித்தார்.

இதேவேளை அம்பலப்பெருமாள் குளம் பகுதியில் 85 மில்லி மீற்றரும், வவுனிக்குளம் பகுதியில் 87 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-415)

## மன்னாரிலும் தலைதூக்குகிறது டெங்கு வைத்தியசாலையில் மூவர் அனுமதி

மன்னார்,ஒக்.30

மன்னார் தீவுப் பகுதிக்குள் மூன்று டெங்கு நோயாளர்கள் இதுவரை இனம் காணப்பட்டுள்ளனரென மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரியான மருத்துவர் என்.குணசீலன் தெரிவித்துள்ளார்.

இனம் காணப்பட்ட இந்த மூவரும் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மன்னார் சாவக்கட்டு கிராமத்தில் இரண்டு டெங்கு நோயாளர்களும், தலைமன்னார் பகுதியில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தற்போது மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள மன்னார் சாவக்கட்டு, தலைமன்னார் ஆகிய இரண்டு கிராமங்களிலும் டெங்கு நுளம்பை ஒழிப்பதற்கான தீவிர செயற்பாடுகளை மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

புகையூட்டுவதன் மூலமாக நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் என்.குணசீலன் மேலும் தெரிவித்தார்.

(க-12)

## அபிவிருத்தி எப்போது?



மக்கள் மீள்குடியமர்ந்து மூன்று ஆண்டுகள் நெருங்கும் நிலையிலும் புனரமைக்கப்படாது மோசமான நிலையில் காணப்படும் கிளிநொச்சி, கோணாவில் கிராமத்தின் முக்கிய பாலமொன்றினூடாகப் பயணிக்கின்றது பஸ் ஒன்று. (க-18)

# 22 பாடசாலைகள் தற்போது இயங்குகின்றன புதுக்குடியிருப்பில்

## கல்வி கற்கின்றனர் 8 ஆயிரம் மாணவர்

புதுக்குடியிருப்பு,ஒக்.30

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 22 பாடசாலைகள் கற்றல் நடவடிக்கைகளுக்காக மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இறுதிக் கட்ட போர் இடர்களால் மூடப்பட்டிருந்த முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளே மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### தற்காலிக கொட்டகைகளில்

இவற்றில் பல பாடசாலைகள் போர் இடர்களால் முற்றாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. சேதமடைந்த பாடசாலைகள் பல தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருவதுடன் சில பாடசாலைகளில் மாணவர்கள் மரநிழல்களில் இருந்தும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சுமார் 8 ஆயிரம் மாணவர்கள் இங்குள்ள பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் 434 ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று முல்லைத்தீவு வலய திட்டமிடற் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இறுதியாக மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் கணிதம், சங்கீதம், நடனம் மற்றும் வர்த்தகம், சித்திரம் போன்ற பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படாமையால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அண்மையில் இடம்பெற்ற வலயத்துக்குள்ளான இடமாற்றத்தின் போது இடமாற்றப்பட்ட ஆசிரியர்கள் சிலர் தமது செல்வாக்குகளைப் பயன்படுத்தி முன்னைய பாடசாலைகளில் தொடர்ந்தும் கடமையாற்றி வருகின்றனர் என்றும் அதிபர்கள் [illegible] தெரிவித்துள்ளனர்.

(க-400)

## பண்டாரவன்னியன் நினைவு நாளையொட்டி வவுனியாவில் சிறப்பான ஏற்பாடுகள்

வவுனியா,ஒக்.30

வவுனியா நகரசபையும் பண்டாரவன்னியன் அறங்காவலர் குழுவினரும் இணைந்து நடத்தும் பண்டாரவன்னியன் நினைவு தினம் சிறப்பான வகையில் நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நகரசபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா நகரசபைத் தலைவர் ஐ.கனகையா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வரவேற்புரையை கலாபூஷணம் சிவசோதியும், சிறப்புரையை தர்மராஜாவும் (அகளங்கன்) பண்டாரவன்னியன் வரலாறு பற்றிய ஒரு கண்ணோட்டம் என்ற தலைப்பில் அருணா செல்லத்துரையும் உரையாற்றவுள்ளனர்.

இதில் பண்டாரவன்னியன் அறங்காவல் குழுவின் மூத்த உறுப்பினரும் சட்டத்தரணியுமான மு.சிற்றம்பலம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார். தொடர்ந்து நிருத்திய நிவேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் குழு நடனமும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். மேலும் இந்த விழா தொடர்பாக வவுனியா வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்;

வன்னியை ஆண்ட தமிழ் மன்னன் பண்டார வன்னியன் வெள்ளையனுக்கு எதிராக போரிட்ட ஒரு மாவீரன். அதனை உணர்ந்து இலங்கை அரசு பண்டாரவன்னியனை இலங்கை தேசிய வீரனாக வர்த்தமானியில் பிரசுரித்துள்ளது. அந்த மாவீரனது நினைவுநாள் நாளைய தினம் ஆகும்.

இந்தத் தினத்தை இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் நினைவு கூர்வது சாலச்சிறந்ததாகும்.

அந்த வீரனினதும், வன்னிமண்ணினதும் கலாசார விழுமியங்களை எமது மக்களும் அறிய இந்த விழா ஒரு தேசிய விழாவாக கொண்டாடப்படுவது அவசியமென்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளலாம் - என்றுள்ளது.

(க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன் வீடுகளின் கூரைகள் தறப்பாளால் மூடப்படும் அவலம்

## விழிபிதுங்கி நிற்கின்றனர் பரிசங்குளம் கிராம மக்கள்

**இங்கு வாழ்ந்த மக்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்து போரின் பின்னர் தமது சொந்த இடத்தில் மீள்குடியமர்ந்துள்ளனர்**

அக்கராயன், ஒக்.30

வவுனியா வடக்கு புளியங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள பரிசங்குளம் கிராமத்தில் இந்தியாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளின் கூரைகள் தறப்பாளால் மூடப்படும் அவலம் நேர்ந்துள்ளது.

புளியங்குளம் பிரதேசத்திலுள்ள பரிசங்குளம் கிராமம் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ளது. இங்கு வாழ்ந்த மக்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்து போரின் பின்னர் தமது சொந்த இடத்தில் மீள்குடியமர்ந்துள்ளனர். இவர்களின் வீடுகள் யாவும் போரின்போது அழிவடைந்து விட்டன.

மிகவும் வறிய நிலையிலுள்ள இந்த மக்களின் நிலையறிந்து இந்திய அரசின் நிதியுதவியுடன் 43 வீடுகள் அமைக்கப்பட்டு மக்களிடம் வழங்கப்பட்டன.

ஒப்பந்தகாரர்களே இந்த வீடுகளை அமைத்து வழங்கினர். ஆனால் அவர்கள் மேற்கொண்ட வேலைகளின் சீர்கேடுகள் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளன.

தற்போது பெய்து வரும் மழையின் போது வீட்டின் சகல பகுதிகளும் மழை நீரால் நனைந்து பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளதைக் காண முடிகின்றது. வீடுகளின் கூரைகள் மற்றும் புகைபோக்கிகள் சீராக அமைக்கப்படாததால் அவற்றினூடாகவே மழை நீர் வீட்டினுள் கொட்டுகிறது.

இதனால் இந்த வீடுகளில் வைக்கப்பட்ட பொருள்கள் யாவும் நனைந்து காணப்படுகின்றன. அத்துடன் வீடுகளில் தங்க முடியாத மக்கள் வேறிடங்களை நாடிச் செல்ல வேண்டிய அவலமும் நேர்ந்துள்ளது.


இதனையறிந்து வவுனியா வடக்கு பிரதேச செயலர் அந்த வீடுகளைப் பார்வையிட்டு நிலைமையைக் கண்டறிந்து கொண்டார்.

உடனடியாக வீட்டு உரிமையாளர்களுக்கு தறப்பாள்கள் வழங்கப்பட்டு அவற்றின் மூலமாக வீட்டுக் கூரைகளை மூடுமாறு கூறப்பட்டது.

தமக்கு 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மதிப்பீட்டில் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டபோதிலும் அதன் கூரைகளை தறப்பாளால் மூட வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளமை தொடர்பாக இங்குள்ள மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே பாண்டியன்குளம், உயிலங்குளம் ஆகிய பகுதிகளிலும் ஒப்பந்தகாரர்களால் அமைக்கப்பட்ட இந்தியன் வீடுகளும் விரைவிலேயே பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## நகர் பகுதி கழிப்பறை பூட்டப்பட்டதால் வர்த்தகர்களும் பொதுமக்களும் அவதி



யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ். நகர வர்த்தக நிலைய கட்டடத் தொகுதிக்கு வெளிப்புறமாக அமைந்துள்ள பொது மலசலகூடம் மூன்று நாள்களாகப் பூட்டப்பட்ட நிலையில் உள்ளது. அத்துடன் இந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசி வருவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வர்த்தக நிலையக் கட்டடத் தொகுதிக்கு உள்ளே காணப்படும் பொது மலசல கூடங்கள் வெளிப்புற வாயில்கள் பூட்டப்பட்டால் வெளியார் பயன்படுத்த முடியாது.

அதனால் வர்த்தகர்கள், பொதுமக்கள் வெளியே அமைந்துள்ள இந்த பொது மலசல கூடத்தையே பயன்படுத்துவது வழக்கம்.

ஆனால் அது கடந்த மூன்று நாள்களாகப் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளது. தவிர மலக்குழி நிரம்பி வழிவதால்தான் அது துர்நாற்றம் வீசுவதாகவும், அதனால்தான் கதவு பூட்டப்பட்டுள்ளதாகவும்பலரும் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக வர்த்தக நிலையத்தின் ஊழியர்கள், பொதுமக்கள் பலரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாநகர பதில் ஆணையாளருடன் நேற்றுமுன்தினம் தொடர்பு கொண்டு கேட்டபோது யாழ். மாநகர சுகாதாரப் பகுதிக்கு மாநகர ஆளுங்கட்சி உறுப்பினர் விஜயகாந் பொறுப்பாக உள்ளார். எனினும் நேற்றைய தினமும் மலசல கூடம் பூட்டிய நிலையில் துர்நாற்றம் வீசிக்கொண்ளண்டிருப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப் பட்டது. என கூறுப் பட்டது. சம்பவம் குறித்து நேற்றும் மாநகர சபைக்கு தொடர்பை ஏற்படுத்தியபோதும் குறித்த விடயம் தொடர்பில் பதில் பெறமுடியவில்லை.

(ஐ-4)

## சண்முகலிங்கம் காலமானார்



சைவ பரிபாலன சபைத் தலைவரும் தொழிலதிபருமான தம்பியப்பா சண்முகலிங்கம் நேற்றுமுன்தினம் காலமானார். ஊர்காவற்றுறை, சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தனது இறுதிக்காலத்தில் யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, நீராவியடியில் வசித்துவந்தார்.

கடந்த சில தினங்களாக சுகவீனமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். இவர் நேற்றுமுன்தினம் தனது 82 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

(ஐ-16)

## உறுதிமொழியை வழங்கியும் பள்ளிவாசல் மீது தாக்குதலா?

### கேள்வியெழுப்புகிறது மு.கா.

அம்பாறை,ஒக்.30

பள்ளிவாசல்களை இடிப்பதற்கோ, சேதப்படுத்துவதற்கோ இடமளிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி உறுதியளித்திருந்த நிலையில், அநுராதபுரம், மல்வத்துஓயா பள்ளிவாசல் தாக்கப்பட்டமை முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்துவதாக இருக்கின்றது.

அரசு இது குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ருமான எம்.ரி. ஹஸனலி தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபை தேர்தலின்போது பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் இருக்கும் வரை ஒரு பள்ளிவாசலையாவது இடிக்கவோ அல்லது அதன் மீது தாக்குதல் நடத்தவோ இடமளிக்கப்போவதில்லை என்று தெரிவித்தார்.

ஆனால், இப்போது என்ன நடந்துள்ளது? முஸ்லிம் களின் புனித நாளான ஹஜ் தினத்தில் அநுராதபுரம் மல்வத்து ஓயா என்ற இடத்திலுள்ள பள்ளிவாசல் தாக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாதவாறு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.- என்றார்.

(ச)

## மட்டக்களப்பில் விபத்து

மட்டக்களப்பு,ஒக்.30

தனியார் பஸ்ஸொன்றும் வான் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று மட்டக்களப்பு- வாழைச் சேனை பிரதான வீதியில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் இரு வாகனங் களும் சேதத்துக்குள்ளாகியபோதும் அதில் பயணம் செய்த எவருக்கும் எவ்விதமான ஆபத்துக்களும் ஏற்பட வில்லை என்று மட்டக்களப்பு தலைமையக மோட்டார் போக்குவரத்து பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி பி. ரி.நஸீர் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலிருந்து வாழைச் சேனை நோக்கிச்சென்ற தனியார் பஸ்ஸும் கொழும்பிலிருந்து காத்தான் குடி நோக்கி பயணித்த வானும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ச)

## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி கதிரவேலு



(நீர்ப்பாசனத் திணைக்கள இயந்திர பொறியியல் பகுதி மாங்குளம்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், புளியங்கண்டு பிள்ளையார் கோயிலடி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கதிரவேலு நேற்றுமுன்தினம் (28.10.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (29.10.2012) திங்கட்கிழமை கரையாம்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கண்டு பிள்ளையார் கோயிலடி, ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பாக்கியலட்சுமி கந்தையா



மண்கும்பான் கிழக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பாக்கியலட்சுமி நேற்று (29.10.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான முத்தர் - வள்ளிப்பிள்ளைதம்பதியரின்அன்புமருமகளும்,கந்தையாவின்அன்பு மனைவியும், றஜனி, பவானி ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயம், பஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியும், மயூசாந் (சுவிஸ்), சிந்துயா, சீனுசாந், சாமினி, சாமந்தி, சரண்ஜா, பஸ்மியா, திபிசங்கர், விஸ்ணுகாந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தங்கத்துரை, சுந்தரலட்சுமி, தர்மலிங்கம், இராசலட்சுமி மற்றும் காமாட்சி ஆகியோரின் சகோதரியும், சுந்தரலட்சுமி, காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் சடாசிவம், கந்தையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(24924)(15.14)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் (A/L - 2013 கலைப்பிரிவு)
மாணவன் சி.வாகீசனின் அன்புத் தந்தை

### இராசா சிதம்பரநாதர்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
சமூக விஞ்ஞானக் கல்வியற்கல்லூரி, பெரியரசடி, சாவகச்சேரி.

(க/4368)(3.14)

## மரண அறிவித்தல்

### திருமதி றாகினி கோணேஸ்வரன்



கொழும்பு கொட்டாஞ்சேனை கல்பெத்த வீதியை வதிவிடமாகவும், தற்போது இல.9 மருதடி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான திருமதி றாகினி கோணேஸ்வரன் கடந்த (28.10.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் கோணேஸ்வரனின் அன்பு மனைவியும், விஷானி, விஷ்ணு, சந்தியா, சானுஜா ஆகியோரின் பாசமிகு தாயும், இரட்ணதுரை- காலஞ்சென்ற இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகராசா- மகேஸ்வரி தம்பதியரின்அன்பு மருமகளும், திருமதி இராஜேஸ்வரி ஜெகநாதன், திருமதி இரட்ணேஸ்வரி கணபதி, செல்வி இரட்ணதுரை றஜனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வி ஜெகநாதன் தயாழினி, செல்வன் கணபதி சாரங்கன் ஆகியோரின் அன்புச் சித்தியும், அன்பு பெரியம்மாவும், பாலசந்திரன், பாலபாஸ்கரன், கமலதாஸ், திருமதி கலைவாணி சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை 31.10.2012 புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து தாவடி கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.கோணேஸ்வரன்
(கணவர்)

இல.9, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(24927)(9.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் உள்ள முன்னணி வளவாளர்களின் பங்களிப்பில் உருவான வழிகாட்டி இதோ! வெளிவந்துவிட்டது.




புலமை 03

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855

வடமாகாணத்தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

## மரண அறிவித்தல்



### சேனாதிராசா கனகேஸ்வரி

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா - கனகேஸ்வரி நேற்று (29.10.2012) திங்கட்கிழமைகாலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்பு மகளும், சேனாதிராசாவின் அன்பு மனைவியும், ஸ்ரீதரன், ஸ்ரீபவன் (ஜேர்மனி), சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, தில்லைநடராசா (சுவிஸ்), உல்லாசதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், குபேராம்பிகை, சர்மிளா (ஜேர்மனி), உமாநந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ருதி (வவுனியா), ஸ்ருதன், சர்வேதா, சவேதா, நர்மிளா, பிரியங்கா (ஜேர்மனி), இந்துஜன் (ஜேர்மனி), அபிலாஸ் (ஜேர்மனி), ஹர்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2012) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் சீயாக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(24925) (15-14)

தகவல்:
பிள்ளைகள்

## பிக்கப் மோதி சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஒக்.30

இராணுவ பிக்கப் மோதியதில் படுகாயமடைந்த சிறுவனொருவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை உரும்பிராயில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அற்புதலிங்கம் ரஜித் (வயது-15) என்ற சிறுவனே படுகாயமடைந்துள்ளார்.

(ஐ-4)

## இளைஞனுக்கு வாள் வெட்டு

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ். பொம்மைவெளியில் இரண்டு தரப்பினருக்கிடையே ஏற்பட்ட முரண்பாடு வாள் வெட்டில் முடிந்தது. இதில் ஒருவர் கையில் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் யாழ். சந்தியைச் சேர்ந்த ஜே.ஹஸ்மின் (வயது-27) என்பவரே படுகாயமடைந்தார்.

(ஐ-4)

## மரண அறிவித்தல்



### நாகரத்தினம் இரத்தினம்

நாவலடி ஒழுங்கை மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை இன்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் இரத்தினம் நேற்று (29.10.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை நாகரத்தினத்தின் அன்பு மனைவியும், இலட்சுமிகாந்தன், கமலராணி, ஆனந்தசிவம், வடிவழகன் மற்றும் காலஞ்சென்றவர்களான புனிதரஞ்சிதம், திருவெங்கடாசலம் ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2012) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி விடுதி வீதி,
அருணர் கொமினிக்கேசனடி,
பருத்தித்துறை

(23879)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்

## மழையிலும் மாணிக்கம் தேடும் கந்தளாய் மக்கள்

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலையை அடுத்து ஆறுகள், குளங்கள் மற்றும் ஏரிகள் நிரம்பி வழிகின்ற நிலையில், கந்தளாயைச் சேர்ந்த ஆயிரக் கணக்கானோர் திருகோணமலை கந்தளாய் குளத்தைச் சுற்றி இருந்து மாணிக்கக் கற்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கந்தளாய் குளத்தின் நீர் மட்டம் உயர்ந்ததை அடுத்து கரையில் சில மாணிக்கக் கற்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கண்டெடுக்கப்பட்டன.

இந்தத் தகவல் குளத்தை அண்மித்துள்ள கிராமங்களுக்கு பரவியதை அடுத்து கடும் மழையையும் பொருட்படுத்தாத கிராமவாசிகள், கந்தளாய் குளத்தைச் சுற்றி நின்று மாணிக்கக்கல் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுமக்களுக்கு சில மாணிக்கக் கற்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், குளத்தைச் சுற்றி சட்ட விரோத மாணிக் கக்கல் அகழ்வில் ஈடுபடாத வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

(ச)




தனியாகத் தெரிந்திடும் தோற்றம். தனித்துவமிக்க செயற்பாடு.

விளையாடத் தயாராக நிற்கும் கண்கவர் முற்றிலும் புதிய வடிவங்களுடன் மெல்லிய 4-வால்வுகளூடாக இணையற்ற சக்தியை அள்ளித் தந்திடும் 125 cc DTS-i என்ஜின் கொண்ட டிஸ்கவர் 125 ST, வாழ்வில் முன்னேற்றமடையும் மனிதருக்கு ஒரு வரப்பிரசாதம். உயர் செயற்திறன் அமைப்புகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. டிஸ்கவர் 125 ST தனிச் சிறப்புமிக்க செயற்பாட்டுடனும் புதிய தலைமுறையின் வடிவமைப்புகளுடனும் கலந்தது. டிஸ்கவர் 125 ST. மாற்றத்தை கண்டுபிடியுங்கள்.

- எக்ஸோஸ்டெக் தொழில்நுட்பத்துடன் 4 - வால்வுகள் 4 - ஸ்ட்ரோக் 125cc DTS-i என்ஜின்
- நைட்ரொக்ஸ் மொனோ பின்புற சொக் அப்ஸோபர்
- எலெக்ட்ரிக் ஸ்டார்ட் 5 வேக கியர் அமைப்பு
- 10-ஸ்போக் முன்புற மற்றும் பின்புற எலோய் வீல்கள்
- டிஸ்க் கவர் உடன் 200 மி.மீ. முன்புற பெட்டல் டிஸ்க் பிறேக்
- பாதத்திற்கமைவான அலுமினிய ஸ்போர்ட்டி ஃபுட் பெக் அமைப்பு
- கவர்ச்சிமிகு DC பிரதான முன் விளக்கு
- முழங்காலைத் தொடுமாறுள்ள எரிபொருள் தாங்கி

RAVI BARNES | NDN

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்
நிறுவன பதிவு இலக்கம் PB27D
த.பெ இல. 1909, 75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02. மின்னஞ்சல்: info@dpmco.com இணையதளம்: www.dpmco.com
தொலைபேசி: 011-4700600 தொலைநகல்: 011-4700677

இலவசம்!!
ஒவ்வொரு கொள்வனவின்போதும் ஒரு ஹெல்மட் மற்றும் ஒரு ஜக்கட்.
இக் கொடுப்பனவு 30 ஒக்டோபர் முதல் 30 நவம்பர் 2012 வரை மட்டுமே

ஈடிணையற்ற உத்தரவாதம்
2 வருடங்கள் அல்லது 30,000 கி.மீ ஓட்டம்*

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டப்பகலில் கணினி திருட்டு

**கடந்த சில நாள்களாகத் திருடர்கள் தனியாக இருக்கும் பெண்களிடம் நபர் ஒருவரின் பெயரைக் கேட்டு வீடுகளுக்குள் நுழைகின்றனர்.**

நவாலி, ஒக்.30

நவாலியில் பட்டப்பகலில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கணினி ஒன்றை வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ள னர்.

நவாலி சின்னப்பா வீதியில் கடந்த சில நாள்களாக பகல் 11 மணிக்கும் 12 மணிக்கும் இடையே சைக்கிளில் திரியும் திருடர்கள் வீடுகளில் தனியாக இருக்கும் பெண்களிடம் நபர் ஒருவரின் பெய ரைக் கேட்டு உள்ளே நுழை கின்றனர். அப்படியான பெயர் விலாசம் அந்தப் பகுதியில் இல்லை என்று வீட்டுக்காரர் கூறியதும் அவர்கள் அங்கிருந்து நழுவி விடுகின்றனர்.

இவ்வாறாகப் பல வீடுகளுக்குச் சென்ற இவர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒரு வீட்டுக்குள் புகுந்து அங்கு ஆள்கள் இல்லாததை அறிந்ததும் உள்ளே இருந்து கணினியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதேபோன்று தற்போது நவாலி முருகமூர்த்தி கோயிலடிப் பகுதியில் உள்ள சில வீடுகளுக்கும் சென்று குறிப்பிட்ட நபரின் பெயரைக் கூறி அவர் பணம் தர வேண்டும் என்று விசாரிக்கும் போர்வையில் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். அப்பகுதி மக்கள் உசாரானதைத் தொடர்ந்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். (த-100)



யாழ்.நாவலர் வீதியில் ஸ்ரான்லி கல்லூரிக்கு அண்மையில் நேற்று நண்பகல் நடைபெற்ற விபத்தில் ஓட்டோ ஒன்று குடைசாய்ந்து பலத்த சேதத்துக்கு உள்ளானது. (த)

# செய்தித்தாளில் உணவு பொதியிடுவதற்கு தடை

## முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.30

உணவுப் பொருள்களை செய்தித் தாள்களில் பொதி செய்வது நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் தடைசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாநகரசபைப் பிரதம சுகாதாரப் பரிசோதகர் எஸ். ஜீவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

செய்தித்தாள்களில் உணவுப் பொருள்களைப் பொதி செய்வதால் அதிலுள்ள மை, வேதிப் பொருள்கள் என்பன உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிக்கின்றன.

**ஏற்கனவே அறிவுறுத்தல் விடுக்கப்பட்ட போதும் அதை உணவு நிலைய உரிமையாளர்கள் நடைமுறைப்படுத்துவது இல்லை.**

எனவே வெள்ளைத்தாள் அல்லது அதற்கான மாற்று வழிகளைக் கையாள வேண்டும்.

இது தொடர்பாக ஏற்கனவே அறிவுறுத்தல் விடுக்கப்பட்ட போதும் அதை நடைமுறைப்படுத்த உணவு நிலையங்களின் உரிமையாளர்கள் தவறியுள்ளனர்.

எனவே நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக் கம் மேற்படி விடயம் நடைமுறைக்கு வருகின்றது என்றார். (வ-7)

## யாழ். விவசாயிகளுக்கு 'அவுசத' வகை குரக்கன்

### மாரிகாலத்திலும் பயிரிடலாம்

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ். குடாநாட்டில் புதிய இனக் குரக்கனைப் பயிரிடுவதற்கான ஏற்பாடுகள் விவசாயத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாரிகாலத்தில் பயிரிடுவதற்கு உகந்த 'அவுசத' என்ற புதிய இனக் குரக்கனை 50 வீத மானிய விலையில் விநியோகிக்கவுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் ஆர்.சௌந்தரராஜன் தெரிவித்தார்.

இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட 160 விவசாயிகளுக்குத் தலா ஒரு கிலோ வீதம் இந்த 'அவுசத' புதிய இனக் குரக்கன் வழங்கப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் 30 பேருக்கும், தெல்லிப்பழை போதனாசிரியர் பிரிவில் 40 பேருக்கும், தொல்புரம் போதனாசிரியர் பிரிவில் 30 பேருக்கும், உடுவில் போதனாசிரியர் பிரிவில் 20 பேருக்கும், புத்தூர் போதனாசிரியர் பிரிவில் 40 பேருக்கும் இந்தக் குரக்கன் வழங்கப்படவுள்ளது.

பயிர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இந்தப் புதிய இனக் குரக்கன் செய்கையாளர்களுக்கான இலவச விவசாயப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளதுடன், இலவசமாக உரப்பசளை மற்றும் திரவப் பசளை என்பனவும் வழங்கப்பட்டன. (த-17)

## பெரும்போக நெற்செய்கை தீவுப் பகுதியில் குறைவு

### கட்டாக்காலி கால்நடைகளே காரணம்

யாழ்ப்பாணம், ஒக்.30

தீவுப் பகுதியில் இந்த முறை பெரும்போக நெற்செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை என்று விவசாயத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை மிக அதிகமாக உள்ளது. இந்தக் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்குச் சம்பந்தப்பட்டோர் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடந்த போகங்களில் நெற்செய்கையை மேற்கொண்ட போது கட்டாக்காலிக் கால்நடை களால் அவை மோசமாகச் சேதமாக்கப்பட்டதாகத் தீவக விவ சாயிகள் தெரிவித்தனர்.

அதனால் தாம் பெரும் நட்டமடைந்ததாகவும் இதனால் இந்தமுறை பெரும் போகத்தில் ஆர்வம் காட்டவில்லை எனவும் அவர்கள் மேலும் கூறினர்.

தற்போதும் இந்தக் கட்டாக்காலிக் கால்நடைகளின் அட்டகாசம் அதிகமாக உள்ளமையால் இந்தமுறை தாம் பெரும்போக நெற்செய்கையில் ஆர்வம் காட்டவில்லை என அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (த-17)

## அனுமதியின்றி மரக்கறி விற்றவர் மீது வழக்கு

வலி.தென்மேற்கு, ஒக்.30

உள்ளூராட்சிச் சபைகளின் கீழ் இயங்கும் பொதுச் சந்தையில் இருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர் ஒருவர் வருமானப் பரிசோதகரிடம் அகப்பட்டுக் கொண்டார். கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண்ட இவர் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதேச சபைகளின் கீழ் இயங்கும் பொதுச் சந்தைகளில் வரி செலுத்தி மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுபவர்களின் நலன் கருதி சந்தையில் இருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் உள்ள வர்த்தக நிலையங்களில் வைத்து மரக்கறி வியாபாரம் செய்வதற்குப் பிரதேச சபையின் சட்டத்தின் கீழ் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கீழுள்ள இளவாலை பொதுச்சந்தையில் நாளாந்த வரி செலுத்திப் பலர் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் வியாபாரத்துக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் சந்தைக்கு வெளியேயுள்ள வர்த்தக நிலையங்களிலும் மரக்கறி வியாபாரம் நடைபெற்று வந்தது.

இதனால் பாதிப்படைந்த வியாபாரிகள் இதுகுறித்து பிரதேச சபையின் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து கடமையில் ஈடுபட்ட வருமானப் பரிசோதகர் சந்தையில் இருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர் ஒருவர் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (த-115)

## குடும்பஸ்தரை மோதியது டிப்பர்

தென்மராட்சி, ஒக்.30

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் வேகமாக வந்த டிப்பர் வாகனம் வீதியில் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தரை மோதித் தள்ளியதில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் பகுதியில் இடம்பெற்றது. பாலாவி வடக்கைச் சேர்ந்த சின்னையா ஈஸ்வரன் (வயது - 52) என்பவரே காயமடைந்தவராவார். இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(த-9)

# 83 வயதுக் கணவனை கைதடி இல்லத்தில் இணைத்தார் அவரது முதுமை மனைவி

## 'நீங்கள் இங்க இருங்களன்; நானும் வாறன் கெதியா' 6 பிள்ளைகளின் தாயாரின் கண்ணீர் கதை இது

யாழ்ப்பாணம், ஒக.30

இருப்பதற்கு ஓர் இடம் இல்லாமலும் பராமரிப்பதற்குப் பெற்ற பிள்ளைகள் முன் வராமையாலும் தனது நோய் வாய்ப்பட்ட கணவனை கைதடி வயோதிபர் இல்லத்தில் இணைத்தார் வயோதிப மனைவி.

இப்படி ஒரு பரிதாபச் சம்பவம் கடந்த வாரத்தில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்தவர்கள் இவர்கள். கணவரான ஜோண் திரவியத்துக்கு வயது-83. மனைவி திரவியம் இராசாத்தியம்மாவுக்கு வயது 75 இவர்களுக்கு 6 பிள்ளைகள்

தம்மைப் பராமரிப்பதற்குத் தமது பிள்ளைகள் முன் வராமையால் வயது முதிர்ந்த நேரத்தில் தமது வாழ்க்கையை நடத்திச் செல்வதில் பெரும் சிரமப்பட்டனர். இவர்களுக்குத் தங்கியிருப்பதற்கு இருப்பிடமும் இருக்கவில்லை. இதனால் பெரிதும் அந்தரித்த நிலையில் இருந்து வந்தனர்.

**பெற்றோரைப் பிள்ளைகள் அன்பு, ஆதரவுடன் பராமரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திப் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றமை மனவேதனை அளிக்கிறது.**

சுகயீனமடைந்துள்ள தனது கணவரைத் தொடர்ந்து பராமரிப்பதற்கு முடியாமல் போனமையால் அவர் தனது கணவரையும் அழைத்துக் கொண்டு நேராகக் கைதடி அரச முதியோர் இல்லத்துக்குச் சென்றார்.

தானும் நோய் வாய்ப்பட்டுள்ள நிலையில் தனது கணவரைப் பராமரிக்க முடியாத நிலை உள்ளதாகவும், பிள்ளைகளும் தம்மைப் பராமரிக்க முன் வராமை காரணமாகத் தாங்கள் பெரிதும் துன்பப்படுவதாகவும் தெரிவித்த அந்த வயோதிபப் பெண் இல்ல அத்தியட்சகர் முன்பாக விம்மி விம்மி அழத் தொடங்கினார்.

அவர்களின் நிலையைக் கண்டு கொண்ட இல்லத்தின் அத்தியட்சகர் என்.கிருபாகரன் அவர்களுடைய விவரங்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் வயது முதிர்ந்த கணவனான திரவியத்தை முதியோர் இல்லத்தில் இணைத்துக் கொண்டார்.

தனது கணவனை ஒரு இடத்தில் ஒப்படைத்து விட்ட மனத்திருப்தியுடன் முதியோர் இல்லத்தில் இருந்து வெளியேறும் போது, எனது கணவரை உங்களிடம் ஒப்படைத்து விட்டேன். நான் எங்கேயாவது இருந்து வாழ்கிறேன். அடிக்கடி அவரை வந்து பார்த்துச் செல்வேன் யாரும் இல்லாவிட்டால் நானும் இங்கு வருகிறேன். என அழுதழுது கூறி விட்டுச் சென்றதாக இல்லத்தின் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இந்த மாத முற்பகுதியில் முதியோர் இல்லத்தில் நடைபெற்ற முதியோர் தின நிகழ்வு களின்போது பெற்றோரைப் பிள்ளைகள் அன்பு, ஆதரவுடன் பராமரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திப் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றமை மன வேதனை அளிப்பதாக இல்ல அத்தியட்சகர் மேலும் கூறினார்.

பிள்ளைகள் தமது பெற்றோரை இப்படி அநாதரவாக விட்டுச் செல்லும் நிலை எமது சமூகத்தில் அதிகரித்து வருவதாகவும் இந்த நிலையை மாற்றுவதற்கான விழிப்புணர்வைத் தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாகவும் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இந்தப் பெற்றோரைக் கைவிட்டுள்ள 6 பிள்ளைகளும் வவுனியா, மட்டக் களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வசிப்பதாகவும் அத்தியட்சகர் குறிப்பிட் டார்.

பாருங்கள் இந்தப் பெற்றோருக்கு ஏற்பட்ட நிலைமையை. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணையத்தளப் பயன்பாடு முன்னிலையில் இந்தியா

### இணையப் பாவனையில் 18 மில்.இந்தியர்கள்

இணையத்தளத்தைப் பயன்படுத்தும் உலக நாடுகளில் இந்தியா முதல் 3 இடங்களில் இடம்பெற்றுள்ளது.


இந்தியாவில் 18 மில்லியன் பேர் இணையத்தளத்தைப் பயன்படுத்துகின்றனர் என்றும் இணையத்தைப் பயன்படுத்தும் இந்தியர்களின் வளர்ச்சி ஆண்டுக்கு 41 சதவீதம் அதிகரித்து வருவதாக புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சீனாவில் 14 மில்லியன் பேர் இணையத்தளத்தைப் பயன்படுத்துகின்றனர். இணையப் பயன்பாட்டில் கடந்த ஓர் ஆண்டில் இந்தியா அதிவேக வளர்ச்சியை எட்டி உள்ளது.

இதில் இணையத்தளத்தைப் பயன்படுத்துவோரில் 75 சதவீதமானோர் 15 - 34 வயதுக்குட்பட்டோர் என்பது குறிப்பிடத்தக்கது.(வ)

## சென்னை அருகில் புயல் அபாயம்

### வானிலை மையம் எச்சரிக்கை



சென்னை, ஒக்.30

சென்னை அருகே உருவாகி இருந்த குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் தற்போது தீவிரமடைந்து புயலாக மாறி வருவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னைக்கு அருகே 730 கிலோ மீற்றர் தொலைவில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை இருந்து வந்தது. இது நேற்று நகர்ந்து சென்னைக்கு அருகே 500 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்ததுடன் தீவிரமடைந்து புயலாக மாறிவருகிறது. இது இன்றும் நாளையும் நாகை மற்றும் நெல்லூர் இடையே கரையைக் கடக்கலாம் என்றும் வானிலை மையம் தெரிவித்திருக்கிறது.

இதனால் இராமேஸ்வரம், நாகை, கடலூர், சென்னை துறை முகங்களில் புயல் எச்சரிக்கைக் கூண்டுகள் ஏற்றப்பட்டுள்ளன. கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை. கடல் சீற்றம் தொடர்ந்து அதிகமாக இருந்து வருகிறது. தொடர் மழையும் பெய்து வருகிறது.

காரைக்கால், புதுச்சேரி பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. இங்கும் புயல் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. கடலோர மாவட்டங்கள் பலவற்றிலும் நேற்று பாட சாலைகளுக்கு ஏற்கெனவே விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (வ)

# சென்னையில் 'கூடங்குளம்' போராட்டம்

## சட்டசபையை முற்றுகையிடச் சென்ற வைகோ, திருமா, நெடுமாறன் உட்பட ஆயிரக்கணக்கானோர் கைது

சென்னை, ஒக். 30

கூடங்குளம் அணு உலையை மூட வலியுறுத்தி சென்னையில் சட்டசபையை முற்றுகையிட முயன்ற பழ. நெடுமாறன், வைகோ, திருமாவளவன் உட்பட ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

கூடங்குளம் அணு உலையை இழுத்து மூட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அந்தப் பகுதிமக்கள் கடந்த ஓராண்டுக்கும் மேலாகப் போராடி வருகின்றனர். பல்வேறு வித போராட்டங்களை நடத்தி வரும் கூடங்குளம் அணு உலை எதிர்ப்பாளர்கள் நேற்று சட்டப்பேரவையை முற்றுகையிடப் போவதாக அறிவித்திருந்தனர். இந்தப் போராட்டத்தை ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, திராவிடர் விடுதலைக் கழகம், உலகத் தமிழர் பேரமைப்பு உட்பட 25 இற்கும் மேற்பட்ட இயக்கங்கள் முன்னெடுக்கும் என்றும் அறிவித்திருந்தன.



இதைத்தொடர்ந்து சென்னை தலைமைச் செயலகத்தில் ஐந்து அடுக்கு பாதுகாப்புப் போடப்பட்டு ஆயிரக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

சென்னைக்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் சோதனையிடப்பட்டன. கூடங்குளம் அணு உலை எதிர்ப்பாளர்கள் பலர் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். இதேபோல் பல்வேறு மாவட்டங்களில் இருந்து சட்டப்பேரவை முற்றுகைப் போராட்டத்துக்காக ரயில் மற்றும் பஸ் மூலம் புறப்பட்டவர்களும் அந்த மாவட்ட எல்லைகளிலும் ரயில் நிலையங்களிலும் தடுத்து நிறுத்தப்பட்டனர். கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீன வர்கள் கேரளா வழியாக சென்னையை வந்தடைந்தனர்.

தடைகளை மீறி சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் அனைவரும் ஒன்று திரண்டனர். அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் வேல்முருகன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் ஆகியோர் உரையாற்றினர்.

அதன் பின்னர் எழும்பூர் விளையாட்டரங்கிலிருந்து சட்டசபையை முற்றுகையிட பேரணியாக அனைவரும் செல்ல முயற்சித்தனர். அவர்கள் அனைவரையும் பொலிஸார் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

### மனித சங்கிலிப் போராட்டத்தில் உதயகுமார்

இதேவேளை கூடங்குளம் அணு உலையை மூட வலியுறுத்தி இடிந்தகரை உள்ளிட்ட கடற் பரப்பில் நேற்று மனித சங்கிலிப் போராட்டம் நடை பெற்றது. கூடங்குளம் அணு உலைக்கு அருகேயும் போராட்டம் நடத் தப்பட்டது. கூத்தங்குழியில் சு.உதயகுமார் கடலில் நடைபெற்ற மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்து கொண்டார். (வ)

## ஜெயலலிதாவை சந்திக்கிறார் விஜயகாந்த்

சென்னை, ஒக்.30

தொகுதிப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்காக முதல்வர் ஜெயலலிதாவை நேரில் சந்திக்க, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் முடிவு செய்துள்ளார்.

இதுதொடர்பாக விஜயகாந்த் உட்பட தே.மு.தி.க. சட்டசபை உறுப்பினர்கள் 5 பேர் சபாநாயகர் தனபாலிடம் கடிதம் அளித்துள்ளனர். மேற்படி கடிதத்தில் தங்களைச் சந்திக்க முதல்வர் ஜெயலலிதாவை நேரம் ஒதுக்கித் தருமாறு வலியுறுத்தியுள்ளனர்.

## கால்பந்து வீரர் மரடோனாவுக்கு கேரளாவில் அருங்காட்சியகம்

கேரளாவில் மரடோனா தங்கியிருந்த விடுதி அறைக்கு மரடோனா அருங் காட்சியகம் என்று பெயரிட்டுள்ளனர்.

உலகப் புகழ் பெற்ற கால் பந்து வீரர் மரடோனா, இரண்டு நாள் சுற்றுப் பயணமாக இந்தியாவுக்குப் பயணம் செய்து திரும்பினார்.

கேரளாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தோடு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த ரசிகர்களையும் சந்தோசத்தில் ஆழ்த்தினார்.

கண்ணூரில் உள்ள புளூ நைல் 4 என்ற நட்சத்திர விடுதியில் தங்கியிருந்த மரடோனா, தன் அறையை விட்டுச் செல்லும்போது காதலியுடன் எடுத்த புகைப் படத்தையும் விட்டுச் சென்றார்.

இதற்கிடையே மரடோனா தங்கியிருந்த 399 ஆம் அறைக்கு தற்போது பிரபல்யம் பெற்றுள்ளது.

கால்பந்து ரசிகர்கள் பலர், முன்பதிவு செய்து இங்கே தங்குவதாக விடுதி அதிபர் ரவீந்திரன் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்.

மேலும் மரடோனா தங்கியிருந்த அறைக்கு மரடோனா அருங்காட்சியகம் என்று பெயரிட்டுள்ளனர். (வ)

## அல்லாஹ்வின் பெயர் கொண்ட எழுத்துக்களுடன் அதிசய ஆடு

### 128 ஆயிரம் யூரோவுக்கு விற்பனை



ராஜஸ்தான் மாநிலத்தில் வசிக்கும் 37 வயதான இஸ்லாம் மதப் பாட்டி வளர்த்த அரேபிய மொழியில் அல்லாஹ்வின் பெயரை உடைய அதிசய ஆடு 128 ஆயிரம் யூரோவுக்கு விற்பனையாகியுள்ளது.

அவரது அரவணைப்பில் வளர்ந்து வந்த 2 வயதான இந்த ஆட்டுக்குட்டி, தற்போது உலகப் பிரபல்யம் வாய்ந்ததாக மாறியுள்ளது.

இதற்குக் காரணம் அதன் உடலில் அரேபிய மொழியில் அல்லாஹ்வின் நாமத்தைக் கொண்டிருப்பதே ஆகும்.

இதன் காரணமாக இந்த ஆட்டுக்குட்டியானது ஈத் அல் அட்ஹா எனப்படும் பக்ரீத் விழாவை முன்னிட்டு 128 ஆயிரம் யூரோ பெறுமதிக்கு விற்கப்பட்டுள்ளது. (வ)

## இது என்ன ஆசியா, அடி பணிவா...?



சட்ட சபை துணைத்தலைவராக ஜெயராமன் போட்டியின்றி ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து ஆசி பெற்றார்.

## ஹஸாரேயுடன் இணைகிறார் நடிகர் அமீர்கான்

ஊழலுக்கு எதிராக அடுத்த வருடம் ஜனவரியில் ஆரம்பிக்கவுள்ள அடுத்த கட்ட போராட்டத்தில் பொலி வூட் நடிகர் அமீர்கானையும் தன்னுடன் இணைத்துக் கொள்ள சமூக சேவகர் அன்னா ஹஸாரே திட்டமிட்டுள்ளார்.

அமீர்கான் நடத்திய சத்யமேவ ஜெயதே என்னும் டிவி நிகழ்ச்சி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்ததோடு, சமூக பிரச்சினைகள் குறித்தும் அலசி ஆராய்ந்து வந்தது.

அந்தநிகழ்ச்சி தற்போது நடைபெறாத நிலையில் தனது போராட்டத்தில் ஒரு பகுதியாக அமீர்கானை இணைத்துக் கொள்ள ஹஸாரே விரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஹஜ் பயணம் சென்றுள்ள நடிகர் அமீர்கான் நாடு திரும்பியதும் அவரிடம் இதுகுறித்து பேச ஹஸாரே முடிவு செய்துள்ளார்.

கடந்த வருடம் லோக்பாலை வலியுறுத்திப் புது டில்லியில் ஹஸாரே நடத்திய உண்ணாவிரத போராட்டத்தில் அமீர்கான் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள், முன்னாள் இராணுவத்தினர் அடங்கிய குழு ஒன்றை உருவாக்கும் நடவடிக்கையிலும் ஹஸாரே இறங்கியுள்ளார்.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னத்தில் அறைந்தால் ஜொலிக்கும் அழகு

**சிகிச்சைக் கட்டணம் 370 டொலர்**



முகத்தில் அறைந்து அழகுபடுத்தும் தாய்லாந்து நாட்டு சிகிச்சைக்கு 370 டொலர் கட்டணம் (இலங்கை 40,000) அறவிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் அழகு நிலையம் நடத்தி வருபவர் தாய்லாந்தைச் சேர்ந்த அகா டாடா.

முகத்தில் உள்ள சுருக் கத்தைப் போக்குவதற்காக, கன்னத்தில் அறையும் சிகிச் சையை அவர் அளித்து வருகிறார். இதற்காக அவர் 370 டொலர் கட்டணமாக அறவிடுகின்றார். இதுகுறித்து டாடா கூறுகையில், நான் அளிக்கும் சிகிச்சையில் இரசாயனக் கலப்பு ஏதும் இல்லாததால் பக்கவிளைவுகள் எதுவும் ஏற்படாது. பாங்கொக்கில் உள்ள பிரபல அழகுக்கலை நிபுணரிடம் குறித்த சிகிச்சையைப் பயின்றுள்ளேன். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இந்த சிகிச்சையை எடுத்துக் கொண்டால், முகம் சுருக்கம் இன்றி பளிச்சென இருக்கும். (வ)

# நாடு கடத்துங்கள் வெள்ளையர்களை

## முஸ்லிம்களுக்கு அல்குவைதா தலைவர் அறைகூவல்

மேற்கத்தைய நாட்டு மக்களையும், வெள்ளைக்காரர்களையும் முஸ்லிம்கள் நாடு கடத்த வேண்டும் என்று அல்குவைதா தீவிரவாத இயக்கத்தின் தலைவர் அல் ஜவாஹிரி அறைகூவல் விடுத்துள்ளார்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர் அல்குவைதா இயக்கத்தின் தீவிரவாதத் தலைவராக அல்ஜவாஹிரி பொறுப்பேற்றுள்ளார். இந்தநிலையில் அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது:-

எகிப்தில் புதிய அரசும் ஊழலில் ஈடுபட்டு வருகிறது. எனவே நாட்டில் இஸ்லாமிய சட்டத்தை நடை முறைப் படுத்த மக்கள் மீண்டும் புரட்சியில் ஈடுபட வேண்டும். இதேபோன்று சிரியா ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிராகவும் மக்கள் ஒன்றுகூட வேண்டும்.



மேற்கத்தைய நாட்டு மக்க ளையும், வெள்ளைக்காரர் களையும் முஸ்லிம்கள் நாடு கடத்த வேண்டும். இதன் மூலம் எமது நியாயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

மேற்கத்தைய நாட்டு மக்களையும், வெள்ளைக்காரர்களையும் முஸ்லிம்கள் நாடு கடத்த வேண்டும். இதன் மூலம் எமது நியாயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தொழில்முறை பொய்யர். இவரை யாரும் நம்ப வேண்டாம். இவர் இஸ்ரேல் நாட்டுக்கு ஆதரவாக இருக்கிறார்.

ஒபாமா உத்தரவின் பேரிலேயே ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் ஏவுகணைகள் மூலம் முஸ்லிம்கள் கொல்லப்படுகின்றனர்- என்றார். (வ)

## மியன்மார் அகதிகளுக்கு அவசர மனித நேய உதவிகள் தேவை

**ஐ.நா. சபை தெரிவிப்பு**

மியன்மாரின் மேற்குப் பகுதியிலுள்ள ரக்கைன் மாநிலத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு உடனடியாக மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக ஐ.நா. சபை தெரிவித்தது.

ரக்கைன் மாநிலத்தில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அரச அதிகாரிகளோடு சென்று பார்வையிட கடந்த சனிக்கிழமை ஐ.நா. குழுவொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பெருமளவான அழிவுகளையும் சேதங்களையும் தாங்கள் காண நேர்ந்ததாக ஐ.நா. குழுவினர் கூறுகின்றனர். குறைந்தது 22 ஆயிரம் பேர் வாழ்விடங்களை விட்டு வெளியேற நேர்ந்துள்ளது என்று மியன்மார் அரசு மதிப்பிடுகிறது.

ஆனால் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று ஐ.நா. அகதிகள் உதவி அமைப்பின் மியன்மார் பிரதிநிதி ஹன்ஸ் டென் ஃபெல்ட் பி.பி.சி. மியன்மார் சேவையிடம் தெரிவித்தார்.

மதத்தால் முஸ்லிம்களான ரோஹிஞ்ஞா சிறு பான்மை சமூகத்தாருக்கும், அந்தப் பகுதியிலே வாழும் பௌத்த மதத்தினருக்கும் இடையில் கடந்த ஜூனில் ஆரம்பித்த இந்த வன்முறை காரணமாக இதுவரையில் மொத்தம் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர நேர்ந்துள்ளது.

வாழ்விடங்களை விட்டு வெளியேறியவர்கள் அழுக்கு நிறைந்த தற்காலிக முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் கடந்த ஒருவாரத்தில் வெளியேற நேர்ந்தவர்கள் படகுகளிலும், குட்டித் தீவுகளிலும், ஒதுக்குப்புறமான மலை முகடுகளிலும் சென்று தஞ்சமடைய நேர்ந்துள்ளது.

அவர்களுக்கு உடனடியாகவும் மிக மிக அவசியமாகவும் மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக ஐ.நா. நம்புகிறது .

வன்முறையிலிருந்து தப்பிக்க படகில் ஏறி கடலில் பயணித்த ரோஹிஞ்சா இன மக்கள் பலர் உயிரிழந்துள்ளனர் என்றும், மேலும் பலர் காணாமற்போயுள்ளனர் என்று சில அரசு சாரா உதவி அமைப்புகள் கூறுகின்றன.

இந்தப் பிரச்சினையில் ரோஹிஞ்சா இன முஸ்லிம்கள் மட்டுமல்லாது முஸ்லிம் அல்லாத சமூகத்தினரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. கூறுகிறது.

ஆனால் அதிகமான பாதிப்பு ரோஹிஞ்சாக்களுக்குத்தான் என மனித உரிமை குழுக்கள் குறிப்பிடுகின்றன. (வ)

## இத்தாலியில் மக்கள் எழுச்சி பிரதமருக்கு எதிராகப் பேரணி

**வீதிக்கு வந்தனர் லட்சம் பேர்**



இத்தாலியில் வரி உயர்வு உட்பட பல்வேறு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தநாட்டுப் பிரதமருக்கு எதிராக மக்கள் பிரமாண்டமான பேரணி நடத்தினர்.

இத்தாலியின் பிரதமர் மரியோ மொண்டி அறிவித்துள்ள வரி உயர்வு உட்பட பல்வேறு நடடிக்கைகளுக்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டு வருகிறது.

இதனையொட்டி ரோம் நகரில் பிரதமருக்கு எதிராக பிரம்மாண்ட பேரணி நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட மக்கள் சிலர் வங்கிகள் மீது முட்டைகளையும், பட்டாசுகளையும் வீசினார்கள்.

மேற்படி பேரணியில் சுமார் ஒரு இலட்சம் பேர் பங்கேற்றனர் என்று போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கூறினர்.

இதற்கிடையே ரோம் நகரிலுள்ள தேசிய சுகாதார கட்டடம் முன்பு 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் மருத்துவ தாதிமார் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். (வ)

## அல்குவைதாவிலும் பெண்களின் படையணி




சர்வதேச தீவிரவாத அமைப்பான அல்குவைதா இயக்கத்தில் முற்றிலும் பெண்களைக் கொண்ட படையணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி படையணியைச் சேர்ந்த பெண்கள் செசன்யா நாட்டில் அல்குவைதாவுடன் தொடர்புடைய குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு மேற்கத்திய நாடுகளில் ஊடுருவி, அங்குள்ள இராணுவத் தளங்கள் மற்றும் அரச கட்டடங்களை எவ்வாறு தாக்கு வது என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

ஏனெனில் அங்கு ஆண்களைச் சந்தேகப்படும் அளவுக்கு, பெண்களைச் சந்தேகப்படமாட்டார்கள் என்பதே காரணமாகும்.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் அமைப்பின் பெண்கள் படையணி, மிகப்பெரிய தாக்குதல்களில் ஈடுபட்டு உலகை அதிசயிக்க வைத்திருந்தது என்பது தெரிந்ததே. (வ)



தேர்தல் வந்துவிட்டால் குழந்தைகளை வாரித்தூக்குவது, முத்தமிடுவது, வயதான முதியவர்களை அணைத்து காட்சி கொடுப்பது அரசியல்வாதிகளின் 'ஸ்டைல்'. அதேபாணியில் ஒபாமாவும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது ஈடுபடுகிறார் போலும்...

## தேவாலயத்தில் வெடித்தது குண்டு; நைஜீரியாவில் 3 பேர் சாவு; பலர் காயம்

நைஜீரியாவில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் நேற்று முன்தினம் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 3 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்றில் மேற்படி சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது.

வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட வாகனம் ஒன்று தேவாலயத்தை நோக்கி வந்த நிலையில், வெடிக்க வைக்கப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.



மேற்படி தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்ததுடன், 12 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

மேற்படி தாக்குதலுக்கு இதுவரை எந்த வொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்றாலும், போகோ ஹாரம் என்ற இஸ்லாமிய அமைப்பே இதனை செய்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (வ)

## கவிழ்ப்பேன் அரசை

**இத்தாலியின் முன்னாள் பிரதமர் அறிவிப்பு**



இத்தாலி அரசைக் கவிழ்க்கப் போவதாக அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மரியோ மொண்டி தலைமையிலான தற்போதைய அமைச்சரவை இத்தாலியை பின்னடைவான சூழலுக்கு இட்டுச் செல்வதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தநிலையில் இத்தாலி அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை முடிவுக்குக் கொண்டு வருவதா இல்லையா என்பது குறித்து தமது மத்திய வலதுசாரி பி.டி.எல் கட்சி எதிர்வரும் நாள்களில் தீர்மானிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் அதிகளவு ஆசனங்களைக் கொண்டுள்ள மத்திய வலது சாரி பி.டி.எல் கட்சி அரசுக்கு வழங்கும் ஆதரவை வாபஸ் பெறும் பட்சத்தில் முன் கூட்டியே தேர்தல் நடத்தப்படும் நிலைமை உருவாகும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் பதவி விலகிய பெர்லஸ்கோனி, வரி மோசடி தொடர்பான வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட பின்னர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் அவசரநிலை அலற வைக்கும் ‘சான்டி’ புயல்

## 4 ஆயிரம் விமான சேவைகள் ரத்து; ரயில்கள் நிறுத்தம்

நியூயோர்க், ஒக்.30

அமெரிக்காவில் உருவாகியுள்ள சான்டி புயல் தீவிரமடைந்துள்ளதால், அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அந்தநாட்டு மக்கள் கடும் பீதியடைந்துள்ளனர்.

அமெரிக்காவைத் தாக்கப் போகும் மிகப் பெரிய புயலாக இது இருக்கும் என்பதால் தீவிரமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



அமெரிக்காவையொட்டிய கரீபியன் கடற்பரப்பில் சில தினங்களுக்கு முன்பு சான்டி புயல் உருவானது. இது கியூபா மற்றும் ஜமைக்காவில் பெரு மழையைக் கொட்டியபடி நேற்று முன் தினம் தொடக்கம் அமெரிக்காவை மிரள வைத்து வருகிறது. ‘சூப்பர்’ புயல் என்று பெயரிடப்பட்டிருக்கும் மேற்படி சான்டியை எதிர்கொள்ள அனைத்து மாகாணங்களும் முன் னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

சான்டி புயலை முக்கியத்துவம் வாய்ந்ததாக எதிர்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ஒபாமா எச்சரிக்கையும் விடுத்திருக்கிறார்.

அமெரிக்காவின் நியூயோர்க் பங்குச் சந்தை மூடப்பட்டிருக்கிறது. சுமார் 4 ஆயிரம் விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான ரயில் போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டுள்ளன. அனைத்து மாகாணங்களிலும் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை விடப்பட்டிருக்கிறது. நியூயோர்க் நகரம் இருள் போர்த்தியதாகக் காணப்படுகிறது. சான்டி புயலால் சுமார் 31 சென்ரிமீற்றர் அளவுக்கு மழை பெய்யக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது, கடலோரப் பகுதிகளில் மணல் மூடைகள் அடுக்கி வைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (வ)

## 325 லீற்றர் தாய்ப்பால் தானம் சாதனை படைத்தார் அமெ.பெண்

### கின்னஸில் அவரின் பெயர்

டெக்சாஸ், ஒக்.30

அமெரிக்காவில் உள்ள வடக்கு டெக்சாஸ் மாகாணத்தைச் சேர்ந்த தாய் ஒருவர் 86 கலன்கள் ( 325.54 லீற்றர்) தாய்ப்பாலை தானமாக கொடுத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

அலிசியா ரிச்மேன் என்ற 28 வயதுடைய அந்தப் பெண் க்ரன்பரி நகரில் வசித்து வருகிறார். அவர் 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் 2012ஆம் ஆண்டு மார்ச் வரை சுமார் 86 கலன் தாய்ப்பாலை வடக்கு டெக்சாஸில் உள்ள தாய்ப்பால் வங்கிக்கு தானமாகக் கொடுத்துள்ளார்.

அலிசியாவுக்கு 19 மாத ஆண்குழந்தை ஒன்று உள்ளது. அந்த குழந்தைக்குத் தேவையான பாலை எடுத்துக்கொண்டு மீதமுள்ள பாலைத்தான் தானமாகக் கொடுத்துள்ளார். இதன் மூலம் குறைப் பிரசவத்தில் பிறந்த குழந்தைக ளுக்கும், தாய்ப்பால் கிடைக்காத குழந்தைகளுக்கும் அது மிக உதவியாக இருந் துள்ளது. இதற்காகவே அவருடைய பெயர் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

‘இது கடவுள் தனக்கு அளித்த வரம்’ என்று கூறியுள்ள அலிசியா, தாய்ப்பால் தனக்கு அதிகமாகச் சுரப்பதனால் தான் அது கிடைக்காத குழந்தைகளுக்குத் தானமாக தரமுடிகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## ‘நியூயோர்க் ரைம்ஸ்’ பத்திரிகை மீது வழக்குத் தொடுக்கிறார் சீனப் பிரதமர்

### சொத்துக்குவிப்பை அம்பலப்படுத்தியதால்



சொத்துக்குவிப்பை அம்பலப்படுத்திய ‘நியூயோர்க் ரைம்ஸ்’ பத்திரிகை மீது சீனப் பிரதமர் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார்.

சீனப் பிரதமர் வென் ஜியாபாவ், 270 பில்லியன் டொலர் அளவுக்கு சொத்துச் சேர்த்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தியை அவரது குடும்பத்தினர் மறுத்துள்ளனர்.

சீனப் பிரதமர் வென் ஜியாபாவ், 10 ஆண்டுகளாக பதவியில் உள்ளார். அடுத்த மாதம் நடக்கும் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் அவர் பதவி விலக உள்ளார். அவர் பிரதமர் பதவி ஏற்பதற்கு முன், தன்னிடம் எந்தச் சொத்தும் கிடையாது என்று கூறியிருந்தார்.

குறித்த10 ஆண்டுகளில் அவர் மனைவி வைரத் தொழிலில் கொடிக்கட்டிப் பறக்கிறார். மகன் மற்றும் உறவினர்கள், சுரங்கம் மற்றும் தோட்டத்துறைத் தொழிலில் அதிக இலாபம் ஈட்டி வருகின்றனர். இதன் மூலம் வென் ஜியாபாவின் சொத்து மதிப்பு 270 பில்லியன் டொலரை எட்டியுள்ளதாக, ‘நியூயோர்க் ரைம்ஸ்’ பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

மேற்படி வெளியான செய்தியை, வென் ஜியாபாவின் குடும்பத்தினர் மறுத்துள்ளனர். பிரதமரின் புகழைக் குறைப்பதற்காக இந்த செய்தி வெளியிடப்பட்டதாகவும், இதற்காக, அந்த பத்திரிகை மீது மான நட்ட ஈடு வழக்குத் தொடரப் போவதாகவும், வென் ஜியாபாவ் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (வ)

## பராமரிப்புப் பணிகளுக்கு பின் மீண்டும் திறக்கப்பட்ட சுதந்திர தேவி சிலை

### சீரமைப்புக்குச் செலவு 3 கோடி ரூபா

அமெரிக்காவில் உள்ள சுதந்திர தேவி சிலை பராமரிப்புப் பணிகளுக்கு பின்னர் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள 126 ஆண்டுகள் பழமை வாய்ந்த சுதந்திர தேவி சிலை சீரமைப்புப் பணிகளுக்காக பல மாதங்களாக மூடப்பட்டது.

பிரான்ஸ் நாட்டின் சார்பில் அன்பளிப்பாக அளிக்கப்பட்ட மேற்படி சிலைக்குள் 354 படிக்கட்டுகள் இருந்தன. தற்போது இவற்றின் எண்ணிக்கை 393 படிக்கட்டுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கழிப்பறை வசதி, காற்றோட்ட வசதி போன்றவை அளிக்கப்பட்டுள்ளன. சக்கர நாற்காலியின் மூலம் சுதந்திர தேவி சிலையின் கிரீடம் வரை சென்று வர வசதி செய்யப்பட்டு உள்ளது.

3 கோடி ரூபா செலவில் சீரமைப்புப் பணிகள் நடந்து முடிந்துள்ளதால், பார்வையாளர்கள் அதிகம் பேர் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (வ)



## ஜனாதிபதித் தேர்தல் செலவு ரூ.10 ஆயிரம் கோடியைத் தாண்டியது

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான நிதி ரூ.10 ஆயிரம் கோடியைத் தாண்டியுள்ளது. அமெரிக்க வரலாற்றில் இத்தகைய அளவுக்கு தேர்தல் நிதி செலவாகியமை இதுவே முதன் முறையாகும். அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் நெருங்கி விட்டதால் இரு கட்சியினரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். தேர்தலுக்கான நிதியை அறவிடுவதில் இரு கட்சிகளின் சார்பில் தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (வ)


குட்டியப்புலம் ஸ்ரீ அபிராமி அம்பாள் ஆலயத்தின் கட்டட நிதிக்காக நடத்திய மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவு விவரங்கள்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | இல.2252 | கிறைண்டர் |
| 2 ஆம் பரிசு | இல.5284 | DVD பிளேயர் |
| 3 ஆம் பரிசு | இல.1445 | நொக்கியா போன் |

10 ஆறுதல் பரிசுகள்

இலக்கம்

390, 500, 2115, 5473, 3988,
5664, 1952, 4274, 2249, 292

உங்கள் ஆதரவிற்கு நன்றி

குட்டியப்புலம் ஸ்ரீ அபிராமி அம்பாள் ஆலயத்தினர்.

தொடர்பு:- 0771043643, 0779912058

(24913)(15-6-7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 09.10.2012 அன்று மீ பே கல்வி அபிவிருத்தி மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் எமது கல்லூரி ஆசிரியை செல்வி சசிரேகா தர்மலிங்கம் அவர்கள் ‘பிரதிபா பிரபா’ எனும் நல்லாசிரியருக்கான விருது பெற்றமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நலன்புரி கழகத்தினர்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

(24854)(5.6.7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்

ஆறுமுகம் உதயணன்

அவர்கள் 19.10.2012 அன்று முதல் சமாதான நீதிவானாக பதவி ஏற்றுள்ளமையைப் பாராட்டுகின்றோம்



01.09.2012 முதல் ஓய்வு பெற்றுள்ள

திருமதி இரத்தினகலா பாஸ்கரன்

அவர்களின் சேவையைப் பாராட்டுகின்றோம்.



2012 ஆம் ஆண்டில் தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த

செல்வன் பத்மநாதன் நிதர்சிகன்

அவர்களையும்

மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான

த. தமிழ்நிலா - 134

இ. கிருசிகா - 114

ஆகியோரையும் இவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

கிளி /வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பா.

வாழ்த்துவோர்:

ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திசங்கத்தினர்.

(24223)(6.7.8)

தவறிவிட்டது

வராகி அம்மன் கோவிலடி கொக்குவில் மேற்கை சேர்ந்த துரைராசா- நிஷாந்தன் என்பவருடைய 931560565V இலக்கமுடைய தே.அ.அட்டையும் C 692036 இலக்கமுடைய தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:-0779122884

(24914) (15-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(20)



ஆனால் அவனோ அதைத் தரக்குறைவான வேலை என்று எண்ணுகிறான். தேவைப்படும் போது, அவசர காலத்தில் நாம் எதையும் செய்யலாம். தவறில்லை, சூழ்நிலையை அவர்களுக்கு புரிய வைத்தால் எந்த வேலையும் தரக்குறைவான வேலை என்று எண்ணமாட்டார்கள். தமது பெருமையைப் பாதிக்கும் வேலை என்று கற்பனை செய்யமாட்டார்கள்.

அதிகாரத்துடன் எதையும் சொல்லக்கூடாது. உதவி செய்யும்படி கேட்டால், எப்படிப்பட்ட வேலையையும் யார் வேண்டுமானாலும் செய்துவிட்டுப் போவார்கள்.

**'உன் உதவி எனக்குத் தேவை'**

நாம் மற்றவர்களைப் பெருமையடையச் செய்ய வேண்டுமானால், மிகச் சுலபமான வழி ஒன்று இருக்கிறது. 'உன் உதவி எனக்குத் தேவை' என்று மற்றவர்களிடம் சொல்லத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கடைக்குப் போய் எண்ணெய் வாங்கி வரவேண்டும். வீட்டில் கணவனோ, பிள்ளைகளோ இல்லை. கணவன் வேலைக்குப் போய்விட்டான். பிள்ளைகள் பள்ளிக்குப் போய் விட்டார்கள். தாய் வெளியில் எட்டிப் பார்க்கிறாள். தெருவில் எதிர்வீட்டுப் பையன் நின்று கொண்டிருக்கிறான். அவனை அழைத்து 'தம்பி, உன் உதவி எனக்குத் தேவை. சமையல் செய்ய எண்ணெய் இல்லை. கடைக்குப் போய் வருகிறாயா?' என்றால் போதும்.

அவன் முக்கியமானவன் என்ற எண்ணம் வருகிறது. உடனே அவன், 'அதற்கென்ன, கொடுங்கள்' என்று எண்ணெய்ப் பாத்திரத்தையும் பணத்தையும் வாங்கிக் கொண்டு ஓடுகிறான். ஐந்தே நிமிடங்களில் எண்ணெய் வாங்கிக் கொண்டு வருகிறான்.

பெரிய மனிதர்கள்கூட, பணக்காரர்கள்கூட சிறிய உதவிகளை மற்றவர்களிடம் கேட்கும்போது, உதவி செய்பவர்கள் பெருமை அடைகிறார்கள். மகிழ்ச்சி கொள்கிறார்கள்.

உலகப் புகழ்பெற்ற ஹொண்டா நிறுவனம் ஜப்பானில் இருக்கிறது. கார்கள், ஸ்கூட்டர்கள், எலெல்ட்ரோனிக் பொருள்கள் ஆகியவற்றைச் செய்பவர்கள். இதன் முதலாளி பெரும் பணக்காரர் ஆகிவிட்டபோதிலும், தொழிலாளர்களைப் போல் அவரும் ஒரு வெள்ளைக் கோட்டு அணிந்து தொழிற்சாலையில் மேற்பார்வையிடுகிறார். தொழிலாளர்களுடன் சேர்ந்து உணவகத்தில் சாப்பிடுகிறார், உணவகத்தில் ஒரு பாம்கோலா வாங்கிச் சாப்பிட சில்லறை இருக்கிறதா என்று தேடுவார். சில்லறை இருக்காது. பக்கத்தில் வரும் ஓர் எளிய தொழிலாளியிடம் சில்லறைக் காசு கேட்பார். அவனும் மகிழ்ச்சியுடன் அதைக் கொடுப்பான். முதலாளியே தன்னிடம் உதவிகேட்டு வந்தார் என்று பெருமைப்படுவான்.

மற்றவர்களைப் பார்த்து, 'உங்கள் உதவி எனக்குத் தேவை' என்று கேட்டாலும் சரி; உங்கள் உதவி எனக்குத் தேவை என்பதுபோல் நடந்து கொண்டாலும் சரி, அவர்கள் பெருமைப்படுவதுடன் அளவில்லா மகிழ்ச்சியையும் அடைகிறார்கள். உதவி கேட்பவர்களைப்பற்றி பெருமையாகப் பேசுகிறார்கள்.

இதை நாம் உணர்ந்து கொண்டாலே நாம் மற்றவர்களை எளிதில் கவர முடியும்.

ஆனால் சில்லறைக் காசு கேட்பதையோ, சிறு உதவிகளைக் கேட்பதையோ அடிக்கடி பழக்கமாகக் கொண்டால் மதிப்பு குறைந்து விடும். எப்போதும் நாம் சில்லறை வைத்துக் கொள்ள வேண்டும். எதையும் அள்வுக்குமேல் செய்யக்கூடாது.

பொதுவாக நாம் மற்றவர்களிடமிருந்து எதையும் பெறுவதைவிட, நாம் மற்றவர்களுக்கு எதையும் கொடுத்துப் பழகிக் கொள்ளவேண்டும்.

'மற்றவர்களுக்கு உதவி செய்பவனை எல்லோரும் அன்புடன் நேசிப்பார்கள், அவன் நட்பை மிக உயர்வாக எண்ணுவார்கள். மரணம் அடையும்போது கூட அவன் மனம் மகிழ்ச்சியுடன், அதே நேரத்தில் அமைதியுடன் இருக்கும்' என்பது புத்தரின் வாக்கு.

ஆகவே, நண்பர்களைப் பெற மற்றவர்களைக் கவர, சிறு உதவிகளை மட்டும் மற்றவர்களிடம் கேட்க வேண்டும். நாம் பெரிய உதவிகளைச் செய்ய வேண்டும்.

நமக்கு மற்றவர்கள் உதவி செய்யும்போது, நாம் அவர்களிடம் அன்பைச் செலுத்த வேண்டும். பாராட்ட வேண்டும். அவர்களை மிகவும் மதிக்க வேண்டும். உணவையும், உடைகளையும் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்களிடமிருந்து நட்பைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்கக் கூடாது.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# எதிர்காலத்தில் வெளியிடப்படும் குறுந்திரைப்படங்கள் செய்திகளை சொல்வதாக இருத்தல் வேண்டும்

## கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30

எதிர்காலத்தில் வெளியிடப்படும் குறுந்திரைப்படங்கள் அல்லது ஆவணப்படங்கள் செய்திகளைச் சொல்வதாக இருத்தல் வேண்டும். அது மிகவும் தாக்கமானது. அவை நிறைய ஆக்கங்களைக் கொண்டவையாக தற்போது உள்ளன என்று யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கை நெறி மாணவன் அனுராஜ் தயாரித்த 'பயணங்கள்' குறுந்திரைப்பட வெளியீட்டு நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சிவநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய யாழ்ப்பாணச் சமூகம் சீர்கெட்ட நிலையில் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதனை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஊடக மாணவரைச் சாரும்.

எதிர்காலத்தில் வெளியிடப்படும் குறுந்திரைப்படங்கள் அல்லது ஆவணப்படங்கள் செய்திகளைச் சொல்வதாக இருத்தல் வேண்டும். அவை அதிகமான செய்திகளைக் கொண்டுவரக் கூடிய ஆக்கமாக இருக்கவேண்டும்.

எமது மாணவர்களால் "பயணங்கள்" குறுந்திரைப்படம் உருவாக்கப்பட்டது என்பது சிறப்பம்சம். இதனை குறுந்திரைப்படம் என்பதா அல்லது ஆவணப்படம் என்று கருதுவதா என்று பார்க்க வேண்டியுள்ளது. துன்பங்கள், துயரங்களுக்குப் பின்னர் இது ஆரம்பிக்கப்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் குறுந்திரைப்படங்கள் மிகவும் தாக்கமானவை. சினிமா பணத்தை பிரதானப்படுத்துகிறது. குறுந்திரைப்படங்கள் செய்தியை மையப்படுத்துபவையாக உள்ளன - என்றார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உரையாற்றுகையில், குறுந்திரைப்படங்களில் நாட்டியம், சங்கீதம் உள்ளிட்டவற்றையும் உள்ளடக்கலாம். குறுந்திரைப்படங்கள் வர வேற்கத்தக்க ஒன்று. அவற்றை ஏனையவர்களும் தயாரித்தல் வேண்டும். குறுந்திரைப்படங்கள் மூலமாக பலவகையான விழிப்புணர்வுகளை உருவாக்க முடியும்- என்றார்.

(எ-4)



திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலையினரும் இணைந்து நடத்திய நவராத்திரி கலைவிழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தனும் அவரது பாரியாரும் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். அருகில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஆனந்தலெட்சுமி மாணிக்கராஜசர்மா நிற்கின்றார்.

# மாறிவரும் உலகில் புதிய சமூகமொன்றை கட்டியெழுப்பும் கடமை பாடசாலைக்கு உண்டு

## யாழ்.புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபர்

யாழ்ப்பாணம்,ஒக்.30

மாறிவரும் உலகில் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலும், வலிமையும் கொண்ட புதிய சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் கடமை தற்போது பாடசாலைக்கு உண்டு.

அதேவேளை காலத்தின் தேவைக்கும், தொழில் சந்தையின் கேள்விக்கும் பொருத்தமான எதிர்கால சந்ததியை உருவாக்க வேண்டிய பொறுப்பும் பாடசாலைகளிடம் விடப்பட்டுள்ளது என்று யாழ்.புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபர் அருட்தந்தை கே.ஜேம்ஸ் சிங்கராஜா தெரிவித்தார்.

யாழ்.புனித அந்தோனியார் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றும் போதே அதிபர் ஜேம்ஸ் சிங்கராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் நிலையானதோர் இடத்தைப் பெற்றுக்கொள்ள கிடைக்கின்ற சகல வளங்களையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எனவே வெறுமனே ஏட்டுக் கல்வியை மட்டும் கொண்டிராமல், தனிநபர் திறன்களை விருத்தி செய்வது ஆசிரியப் பணியின் இலக்காகும். இதனை மையமாக வைத்தே "ஆளுமையும், இறை நம்பிக்கையும் கொண்ட சமூகம்" என்ற பாடசாலை நோக்குக் கூற்றையும், நவீன தொழில்நுட்ப அறிவுடன் கூடிய திறன்களை வளர்த்தலும், சமய சமூக விழுமியங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட முதிர்ச்சியுடைய சமுதாயத்தை உருவாக்குதலும் என்பனவற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

புதிய கல்விச் சிந்தனைகள், புதிய கலைத்திட்ட மாற்றங்கள் ஆகியவற்றை நன்கு உள்வாங்கி, மாறிக்கொண்டிருக்கும் உலகில் எமது பிள்ளைகள் நிலையானதோர் இடத்தைப் பெற்றுக்கொள்ள கிடைக்கின்ற சகல வளங்களையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடின முயற்சி செய்வதுடன், உயர் விழுமியங்களைப் போற்றிப் பேணுகின்றவர்களாக இருப்பது எமது எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய துணைபுரியும்.

எனவே நாம் எமது கல்விச் செயற்றிட்டங்களில் ஒருமித்த கருத்தைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். பிறர் மீது அன்பைக் கொண்டிருப்பதும் அவசியமானதாகும்- என்றார். (எ-325)

# குறுவினாவிடைப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 10 வகுப்பு மாணவர்களிடையே நடத்தப்பட்ட விவசாய விஞ்ஞானக் குறுவினாவிடைப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை வகை-1ஏபிசி

1 ஆம் இடம்-க.தீர்த்தாஜ்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, 2 ஆம் இடம்-க.கிருசன-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 3 ஆம் இடம்-கு.சிவகுமார்-சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

பாடசாலை வகை-1சி

1 ஆம் இடம்-ஸ்ரீ.தனுசா-உசன் இராமநாதன் ம.வி, 2 ஆம் இடம்-த.பிரியங்கா-உசன் இராமநாதன் ம.வி, 3 ஆம் இடம்-வ.சர்மினி-கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

பாடசாலை வகை-2

1 ஆம் இடம்-ஞா.சவுந்தர்யா-வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி, 2 ஆம் இடம்- சி.தனுசா- விடத்தற்பளை கமலாசினி வித்தி, 3 ஆம் இடம்- செ.நிரஞ்சனா-விடத்தற்பளை கமலாசினி வித்தி, செ.தயானா-கைதடி நுணாவில் அ.த.க.பா.

(எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்.முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# மாற்றம் வருமா?

1992 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராக இருந்த 'ராஜீவ்காந்தி' கொலை செய்யப்பட்டதுடன் இந்தியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடை நடைமுறைக்கு வந்தது. அந்தத் தடை இன்றுவரை நீடிக்கப்பட்டு வருவதும் புதிய விடயமல்ல.

விடுதலைப் புலிகள் ராஜீவ் காந்தியை கொலை செய்தார்களா..? இல்லையா..? என்பதற்கான பதிலை ''அது ஒரு துன்பியல் நிகழ்வு'' என்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் குறிப்பிட்டு முடித்துவிட்டார். ஆனால் ராஜீவ் காந்தி கொலை தொடர்பில் இன்னுமொரு செய்தியும் கர்ண பரம்பரைக் கதைகள் போல் எம் செவிவழி அறிந்த சம்பவமும் தொடர்கின்றது.

1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின் அமைதிப் படையாய் இந்தியப் படைகள் எமது மண்ணில் கால் பதித்தன. ஆனால் சொற்ப காலத்தில் அமைதி வேடம் கலைந்து வல்லூறுகளாக மாறி படுகொலைகளைக் கட்டவிழ்த்து விட்டன. பெற்றவர்களுக்கு வயது வந்த பிள்ளைகளை வீட்டில் வைத்திருப்பது என்பது மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருப்பது போன்றதான நிலைமையே இருந்தது.

இந்த வன்கொடுமைக்கு உள்ளானவர்கள் தமக்கான நீதியைக் கையிலெடுத்துக் கொண்டார்கள். ''எய்தவன் இருக்க அம்பை நொந்து என்ன பயன்'' அதனால் எய்தவன் அழிக்கப்பட்டான். இப்படியும் ஒரு கதை இருக்கின்றது.

1980 களில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பயிற்சிகள் வழங்கிப் போராடக் கற்றுக் கொடுத்த பெருமையும் இந்தியாவுக்கு இருக்கின்றது. ஆனால் விடுதலைப் புலிகளின் தீவிரமான போரியல் வளர்ச்சிக்குப் பின்னர் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனக்கு அச்சுறுத்தலாக புலிகள் எழுச்சியடைந்து விடுவார்கள் என்ற அச்சம் இந்தியாவுக்கு ஏற்பட்டமையே இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையான காரணம். தமக்கு வரக் கூடிய பாதிப்பை தவிர்க்கக் கருதி விடுதலைப் புலிகளை அழிப்பதில் இலங்கையுடன் கைகோர்த்துக் கொண்டது இந்தியா என்பதும் அதனால் விளைந்த பேரிடர்களும் தனியான கதைதான்.


இந்திய அரசு சட்டவிரோத தடுப்புச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் மீதான தடையை ஆண்டுக்கு ஒருமுறை நீடித்து வருகிறது. பின் தடை செய்தது சரியா? அல்லது தவறா என ஆராய்ந்து தீர்ப்பை உறுதிப்படுத்த ஒரு விசாரணையும் நடத்துகிறது.

அந்த விசாரணையின் அடிப்படையில் மத்திய அரசின் தீர்ப்புச் சரியா? தவறா? என இறுதி செய்யப்படும். ஆனால் விடுதலைப் புலிகள் மீதான தடை செல்லுபடியாகும் என்றே இதுவரை தீர்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது. அதன்படியே கடந்த மே மாதத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடை மேலும் 2 ஆண்டுக்கு நீடிக்கப்பட்டது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிக்கு அந்த அமைப்பின் தடையை நீக்குவது தொடர்பான வாதங்களை முன்வைக்க இப்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சுவிற்சர்லாந்தில் வசித்து வரும் விஜயரெட்ணம் சிவநேசன் விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகப் பாடுபட்டது, ஆனால் தற்போது இந்தியாவில் அதன் செயற்பாடு எதுவும் இல்லை, எனவே தடை உத்தரவை நீக்க வேண்டும் என்று வாதாடுகிறார்.

இந்த நிலையிலேயே முதல் தடவையாக தீர்பாயத்தில் தடையினை எதிர்த்து விடுதலைப் புலிகள் சார்பான வாதிட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மாற்றங்கள் வருமா என தமிழர்கள் காத்திருக்கிறார்கள்.

# மஹிந்த கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்





*தமிழில்: வியெஸ்ரி*

*மூலம்: மவ்பிம*

*"இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனக்கு மிக நெருங்கிய நண்பர். அவர் என்னை அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு எனது பாதுகாப்புக் குறித்து விசாரித்தறிகிறார். அதனை நான் பாராட்டுகிறேன்; மதிக்கிறேன்"*

கடந்த பெப்ரவரி மாதத்தில் சர்வதேச ஊடகவியலாளர்களுடனான சந்திப்பொன்றின்போது மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி நஷீட் மேற்கண்ட கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். மாலைதீவில் ஆட்சி மாற்றத்தையடுத்து, நஷீட்டை கைது செய்து காவலில் வைக்க வேண்டாமென மாலைதீவின் தற்போதைய ஜனாதிபதியிடம், மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கையொன்றை விடுத்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. ஆனாலும், நீதிமன்ற உத்தரவின்பேரில் அண்மையில் நஷீட், மாலைதீவு அரசால் கைது செய்யப்பட்டார். தாம் மாலைதீவு அரசால் கைது செய்யப்படவுள்ளதான தகவல் கிட்டியதும் நஷீட், தமது மனைவி, பிள்ளைகளை இலங்கைக்கு அனுப்பி வைத்துவிட்டார். நஷீட்டின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி மஹிந்த, நஷீட்டின் மனைவி, பிள்ளைகளைப் பாதுகாப்பாக இலங்கையில் தங்க வைப்பதாக நஷீட்டுக்கு உறுதியளித்திருந்தார். அதேபோன்று தாம் கைது செய்யப்படுவதிலிருந்து தப்பிக்க நஷீட் இலங்கையில் அரசியல் தஞ்சம் கோரியிருந்ததாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. ஆயினும் அந்தச் செய்தியை மறுத்து, தாம் மாலைதீவில் தங்கியிருந்தவாறே அரசுக்கு எதிராகப் போராடப் போவதாக நஷீட் தெரிவித்திருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த வேளையிலிருந்தே நஷீட்டுடன் உறவைப் பேணி வந்துள்ளார். இலங்கையில் தங்கியிருந்தவாறே நஷீட், மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கயூமின் ஆட்சியை வீழ்த்த மாலைதீவுப் பொதுமக்களைத் தயார்படுத்தி வந்துள்ளார். அந்த வேளையில் அவரது அந்த முயற்சிக்கு மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் ஆதரவு வழங்கி வந்தனர். 1994 ஆம் ஆண்டில் மஹிந்த அங்கம் வகித்த சுதந்திரக் கட்சி, இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட வேளை மஹிந்தவின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் உதவி மேன்மேலும் நஷீட்டுக்குக் கிட்டியது. அந்த வேளையில் நஷீட் எப்போதுமே மஹிந்தவின் அமைச்சு அலுவலகத்தில் காணப்பட்டார். இலங்கையில் தங்கியிருந்தவாறே மாலைதீவின் அப்துல் கயூமின் தலைமையிலான அரசைக் கவிழ்ப்பதற்கான திட்டங்களை நஷீட் செயற்படுத்தி வந்தார். மேற்குலக நாடுகளின் தூதராலயங்கள், சர்வதேச ஊடகங்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற தரப்புக்களுடன் தொடர்புபேணி நஷீட் மாலைதீவின் அரசியலில் தாம் ஈடுபடத்தக்கதொரு சுதந்திர சூழலை உருவாக்கிக் கொண்டு, மாலைதீவுக்குச் சென்று அப்துல் கயூமின் ஆட்சியை வீழ்த்தி, தாம் மாலைதீவின் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிக் கொண்டார். மாலைதீவின் நெல்சன் மண்டேலா எனத் தம்மை நிலை நிறுத்திக் கொண்டார். நஷீட் மாலைதீவின் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றிக் கொண்ட வேளையில் இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்தார். தமது நெருங்கிய நண்பராக நஷீட் மாலைதீவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றமை மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பெரு மகிழ்ச்சியை உண்டாக்கிவைத்தது.

> **தமது ஜனாதிபதிப் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக நஷீட் ஜனாதிபதி மஹிந்தவின் உதவியைக் கோரிய போதிலும் மஹிந்தவால் அந்த விடயத்தில் எதுவுமே செய்ய இயலாதுபோயிற்று.**

மாலைதீவின் ஜனாதிபதியாகிய பின்னர் நஷீட் இலங்கைக்கு அடிக்கடி பயணம் மேற்கொண்டுவந்தார்.

ஒரு சமயம் நஷீட்டின் கூட்டணி அரசுக்குள் பிளவு ஏற்பட்டு, நஷீட்டின் அரசு வீழ்ச்சி காணும் நிலை ஏற்பட்ட போது, அமெரிக்கா அவ்விடயத்தில் தலையிடுவதற்கு முன்பாக, நஷீட், ஜனாதிபதி மஹிந்தவைத் தொடர்பு கொண்டு மாலைதீவு அரசுக்குள் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்த்து வைத்து உதவுமாறு கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி மஹிந்தவும் உடனடியாக மாலைதீவுக்குச் சென்று அரசின் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சு மேற்கொண்டு பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயன்றார். ஆயினும் பின்னர் அமெரிக்காவின் தலையீட்டினாலேயே பிரச்சினை தற்காலிகமாகத் தீர்க்கப்பட்டது.

நஷீட், மாலைதீவின் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்ற அமெரிக்கா மற்றும் ஐரோப்பா உட்பட்ட மேற்குலக நாடுகளே உதவியிருந்தன. நஷீட்டுக்கு முன்பாக மாலைதீவின் ஜனாதிபதியாகவிருந்த அப்துல் கயூமை நாட்டின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை முறைப்படி கடைக்கொள்ளுமாறு அழுத்தத்தின் மேல் அழுத்தம் விடுத்து, நஷீட் மாலைதீவுக்குச் சென்று அரசியலில் ஈடுபடத்தக்க சுதந்திர சூழலை உருவாக்கிக் கொடுத்தவை அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளே. அதேபோன்று அப்துல் கயூமுக்கு எதிராக நஷீட்டின் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணியொன்றை உருவாக்கி அதனைப் பலப்படுத்தி உதவியவையும் அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளே.

மேற்குலக நாடுகளின் செல்லப் பிள்ளையான நஷீட் மாலைதீவின் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றியதையடுத்து, தமக்கும் அவருக்கும் இடையேயான நெருங்கிய பிணைப்பைப் பயன்படுத்தி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மேற்குலக நாடுகளால் இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்ட போர்க்குற்றச்சாட்டுக்களைத் தோற்கடிக்க நஷீட்டைப் பயன்படுத்திக் கொண்டார். ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையில் மேற்குலக நாடுகளால் முன்வைக்கப்பட்ட போர்க் குற்றச்சாட்டுப் பிரேரணை தொடர்பாக மஹிந்தவுக்கு ஆதரவாக நஷீட் நீண்ட உரையொன்றை ஆற்றியிருந்தார்.

ஆனால் நீண்ட நாள்கள் கடப்பதற்கு முன்னர் நஷீட், ஜனாதிபதி மஹிந்தவின் செல்லப்பிள்ளை என்ற நிலை மாற்றம் கண்டது.

சார்க் நாடுகளின் உச்சி மாநாடு மாலைதீவில் இடம்பெற்ற வேளையையண்டி முதன்முதலாக மாலைதீவில் சீன பிரதித் தூதரகமொன்று திறக்கப்பட்டமை, அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலக நாடுகளைவிட இந்தியாவையே கடும் திகைப்புக்கு உள்ளாக்கக் காரணமாகியது. நஷீட்டுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு பலமடைய மஹிந்தவே காரணமென சில சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. மாலைதீவில் சீன பிரதித் தூதுவர் அலுவலகம் திறக்கப்பட்டு நீண்ட நாள்கள் கழியும் முன்னரே நஷீட், மாலைதீவின் ஜனாதிபதிப் பதவியிலிருந்து தூக்கி வீசப்பட நேர்ந்தது. தமது ஜனாதிபதிப் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக நஷீட் ஜனாதிபதி மஹிந்தவின் உதவியைக் கோரியபோதிலும் மஹிந்தவால் அந்த விடயத்தில் எதுவுமே செய்ய இயலாதுபோயிற்று. ஆகக் குறைந்து நஷீட்டை கைது செய்ய வேண்டாமென தற்போதைய மாலைதீவு ஜனாதிபதியிடம் மஹிந்த விடுத்த வேண்டுகோள் கூட புறந்தள்ளப்பட்டது என்பது தற்போது தெளிவாகியுள்ளது. இன்று நஷீட் மீண்டும் அமெரிக்கா, ஐரோப்பா உட்பட்ட மேற்குலக நாடுகளிடமே உதவிகோர வேண்டி நேர்ந்துள்ளது.

நஷீட்டிடமிருந்து ஜனாதிபதி மஹிந்த கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்று இரண்டென்றல்லாது ஏராளமுண்டு. அதிகார இழப்பு என்பது எத்துணை கசப்பானது என்பது அவற்றில் முக்கியமானதொன்று. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல் உள்ள மனிதருக்கே...

*எதை வாசிப்பது, எப்படி வாசிப்பது, எப்போது வாசிப்பது, வாசித்தவற்றை எவ்வாறு களஞ்சியப் படுத்துவது, அதனை எவ்வாறு மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது போன்ற செயற்பாடுகளின் மத்தியில் வாசிப்பினால் புதுப்புது விடயங்களை அறிவதும் அறிந்தவற்றை உள்வாங்கி தெளிவு பெறவும் தெளிந்தவற்றை நமது வாழ்வில் பயன்படுத்தும் போது மனித வாழ்வு மெருகேறுகின்றது.*

திருமதி இ.கருணாநிதி
நூலகர், உடுவில் பொது நூலகம்



மனிதர்கள் கல்வி கற்க வேண்டும். ஏனெனில் அவர்கள் மனிதர்கள்" என்கின்ற ரஷ்ய பழமொழிக் கேற்ப எம்மைத் துலங்கவைப்பது அறிவுசார் கல்வி. அந்தக் கல்விக்கு அடிப்படையாக அமைவது தேடலின் ஊடாக வாசிப்பே என்பது ஆய்வறிந்த உண்மை. "வாசிப்பினால் மனிதன் பூரண மடைகின்றான்" என்பது ஆன்றோர் வாக்கு. ஆண்டுதோறும் ஒக்ரோபர் மாதம் முழுவதும் வாசிப்பு மாதமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு "அறிவினால் நிரம்பிய சமுதாயம் ஒன்றை உருவாக்குவோம்" என்ற தொனிப் பொருளில் கொண்டாடப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையானது இந்த மாதத்தை வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்தி நாடெங்கிலும் உள்ள பொதுசன நூலகங்கள் ஊடாக சமூகத்தில் வாசிப்புவிழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. பாடசாலை மாணவர்களிடையே தேடலினூடாக வாசிப்பின் அவசியத்தை கருத்திற்கொண்டு கவிதை, கட்டுரை, பேச்சு, சித்திரம், பொது அறிவு போட்டிகளை பொதுநூலகங்கள் ஊடாக நடத்தியும் பரிசில்கள் வழங்கியும் சமூகத்தில் நடமாடும் சேவை, நூல்களின் கண்காட்சி, கருத்தரங்குகள், நூல்களை இனங்கண்டு தேவைகருதி தேடலுக்கும் நூல்கள் பாகுபடுத்தப்பட்டிருப்பதும் (சிறுவர் பகுதி, முதியோர் பகுதி) அனைத்து செயற்பாடுகளையும் ஊக்குவிக்கும் முகமாக பொதுநூலகங்களுக்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் விருதுகளும் வழங்கப்பட்டு வருகிறன. பொது நூலகங்கள் நூல்கள், சஞ்சிகைகள், தினசரிகள் என்பவற்றை முறையாக சேகரித்து களஞ்சியப்படுத்தப்படும், காட்சிக்கு விடப்படும் நுகரப்படும் அறிவுக் களஞ்சியங்களாக விளங்கின்றன. இந்தப் பொது நூலகங்கள் ஒரு மனிதனின் முறைசார்ந்த கல்வியின் வளர்ச்சியில் இணைந்து அறிவை வளர்க்கும் அறிவுக் களஞ்சியங்களாகச் செயற்பட்டு வருகின்றன.

பொதுநூலகங்களானது வயது, பால், இன, மத, சமூக வேறுபாடுகளின்றி ஒரு மனிதனின் கருவில் இருந்து கல்லறை போகும் மட்டும் அவனை ஒரு முழுமனிதனாக்குகின்றது. ஒருவன் அறிவாளியாக செயற்கரிய செய்த சான்றோனாக இருந்தால் அவன் மறைந்த பின்பும் கூட அவனது படைப்புக்களை பேணிப்பாதுகாத்து மிளிரவைப்பது பொது நூலகங்களே. அந்த வகையில் ஒரு பொதுநூலகமானது அறிவுப் பொக்கிஷமாக மிளிர்கின்றது. எனவே மனிதனானவன் வாசிக்க வாசிக்க மேல் ஓங்குகின்றான்.

இதனையே வள்ளுவப் பெருந்தகை " தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு என்கின்றார். எனவே நூல்களைத் தேடி, வாசிப்பை நேசித்து, கற்க வேண்டியவற்றை கசடு அறக் கற்று அறிவு படைத்தவர்களாக உயர உறுதுணையாக நிற்பது பொது நூலகங்களே. அறிவுசார் நூல்களை வாசிப்பதன் நோக்கம் கற்றோரை சான்றோர் ஆக்குவதற்கே ஆகும்.


இந்த வகையில் வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் பொது நூலகங்கள் மக்களிடையே வாசிப்பைத் தூண்டும் திறவுகோல்களாக உள்ளன. இவை உள்ளூராட்சி மறுசீரமைப்பின் செயற்பாட்டுக்கு அமைய நூலகத்தை நோக்கி வர முடியாத வாசகர்களை நோக்கி தனது சேவையினை விஸ்தரித்து வருகின்றன. அந்த வகையில் உடுவில் பொது நூலகமானது இரு தடவைகள் வீழ்ச்சி கண்ட போதும் மீண்டும் எழுந்து நின்று மக்களுக்கான சேவையினை வழங்கி வருகின்றது. நூலகங்களில் பொதுவாக பத்திரிகைப் பகுதி, சஞ்சிகைப் பகுதி, உடன் உதவும் பகுதி, இரவல் வழங்கும் சேவை, நிழற்படப்பிரதியாக்கல் சேவை, ஒட்டுப் புத்தக சேவை, சஞ்சிகைகளின் தொகுப்பு சேவை போன்ற சேவைகளைக் கொண்டு உடுவில் பொது நூலகமானது பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறின்றி பயன்படுத்தும் இடத்தில் இருப்பதும், பாடசாலைகள், பல்கலைக்கழகம், கல்வித்திணைக்களம் என்பவற்றுக்கு நடுவே அமையப் பெற்றிருப்பதும் ஒரு சிறப்பம்சமாகும். பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பெரிதும் பயன் உடையதாகவும் ஏறத்தாழ 11,000 நூல்களைக் கொண்டும் சஞ்சிகை தொகுப்புக்களையும் ஒட்டுப் புத்தகங்கள் ஊடாகவும் தேடல்களுக்கான தகவல்களையும் வழங்கி வருகின்றது. அத்தோடு வலிகாமம் தெற்கு பிரதேச சபை நூலகங்கள் பிரதேச வாசகர் வட்டம் ஊடாக இணைந்து உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வெள்ளிமலை காலாண்டு சஞ்சிகையை வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் இந்த வாசிப்பு மாதத்தில் எதை வாசிப்பது, எப்படி வாசிப்பது, எப்போது வாசிப்பது, வாசித்தவற்றை எவ்வாறு களஞ்சியப் படுத்துவது, அதனை எவ்வாறு மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது போன்ற செயற்பாடுகளின் மத்தியில் வாசிப்பினால் புதுப்புது விடயங்களை அறிவதும் அறிந்தவற்றை உள்வாங்கி தெளிவு பெறவும் தெளிந்தவற்றை நமது வாழ்வில் பயன்படுத்தும் போது மனித வாழ்வு மெருகேறுகின்றது. முன்னைய சூழலில் கேட்டல், ஓதுதல், சிந்தித்தல், ஞானம் பெறல் என்ற வகையில் அறிவுப்பெருக்கம் பிரவாகித்தது.

இன்றைய உலகம் கல்வி, பொருளாதாரம், விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பம் என பல முகப்பட்ட தேடல்களைக் கொண்ட நூல்களும் பல்கிப் பெருகி விட்டன. அறிவியல் யுகம், தகவல் யுகம் என்று விருத்தியடைந்து செல்லும் இந்த நாளில் இலகுவில் கிடைக்கக் கூடிய வகையிலும் அனைவரும் அணுகும் வகையிலும் புத்தகங்கள் தேடலுக்கான விடயங்களை சிறைப் பிடித்து பொது நூலகங்கள் ஊடாக வழங்குகின்றன. மாணவர்களுக்கான உலகியல் கல்வி வளர்ச்சிக்கும் தகவல் சீர்திருத்தங்களுக்கு மத்தியில் தேடல், தொடுதல், வெளிப்படுத்தல் என்பனவு வாசிப்புக்கு இன்றியமையாதவை ஆகும்.

எனவே இந்த வாசிப்பு மாதத்தில், வாசிப்பு வாரத்தில் அல்லது புத்தக தினத்தில் மட்டும் அல்லாமல் எப்போதும் அதி உன்னத நூல்கள் பலவற்றை நூலகத்தை நாடிச்சென்று வாசிப்போம் என உறுதி பூணுவோம்.

# தொற்றா நோய்களைப் பரீட்சித்து நீண்ட ஆயுளைப் பெறலாமே

தென்னவன்



யாழ்.குடாநாட்டில் தொற்றா நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல் ஒவ்வொருவருக்குள்ளும் பயத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

தொற்றா நோய் என்றால் என்ன என்பது எம்மில் பலருக்கு தெரியாது. 35 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்களுக்கு எம்மை அறியாமல் உருவாகும் நோய்களே தொற்றா நோய்கள் ஆகும். மனித வாழ்வில் ஏவராவது ஒருவருக்கு நோய் தொற்றி அதன் தாக்கம் தெரியும் வரை தனக்கு நோய் ஏற்பட்டிருப்பது தெரிய வராது. ஏனெனில் எமது உடல் நோய்கள் எம்மை ஆக்கிரமித்த போதிலும் அதன் பாதிப்பின் போதே எமக்கு ஒரு நோய் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. நோய் ஏற்பட்டிருப்பது தெரியும் வரை அனைவரும் சுகதேகியாக இருப்பதாகவே நினைக்கிறார்கள்.

ஆண், பெண் வித்தியாசமின்றி எமது உணவுப் பழக்கத்தினால் பல்வேறு நோய்களை எமது உடலில் இணைத்துக் கொள்வதை நாம் அறிவதில்லை. பொதுவாக நீரிழிவு, இரத்த அமுக்கம், கொலஸ்ரோல் போன்ற நோய்களுடன் பெண்களுக்கு மார்புப் புற்று நோய், கர்ப்பவாயல் புற்று, கர்ப்பப்பை புற்று போன்றவையும் ஆண்களுக்கு வாய்ப்புற்று, சுவாசப்புற்று, உணவுக் கால்வாய்ப் புற்று போன்ற நோய்களும் எம்மை அறியாமல் தொற்றிக் கொள்கின்றன. இவை ஏற்படும் பட்சத்தில் அதனுடன் கண்ணில் பாதிப்பு , பல் நோய் போன்றவையும் இணைந்து விடுகின்றன. தொற்றா நோய்களை ஆரம்பத்தில் கண்டறிவதற்காக எமது நாட்டில் சுக வாழ்வு சிகிச்சை நிலையங்களை நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு தென்னிலங்கைப் பகுதியில் பெரு வெற்றி பெற்றுள்ளது. எனினும் யாழ்.குடா நாட்டில் இந்த சிகிச்சை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அதில் சிகிச்சை பெறுவதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. இதற்கு நாங்கள் எந்த நாளும் சுகதேகியாக உள்ளோம் என்ற எம் மத்தியில் உள்ள எண்ணமே காரணமாகும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள நான்கு ஆதார வைத்தியசாலைகளில் சுகவாழ்வு சிகிச்சை நிலையங்கள் வாராந்தம் பயிற்சிபெற்ற மருத்துவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. சிகிச்சை பெற வருபவர்களுக்கு தொற்றா நோய்கள் தொடர்பான அனைத்துப் பரிசோதனைகளும் இலவசமாக நடத்தப்படுகின்றன. இந்த சிகிச்சைப் பிரிவில் கலந்து கொள்வோர் பரிசோதனையின் பின்னர் பத்து வருடங்களுக்கு பயன்படுத்தக்கூடிய பரிசோதனை குறிப்பு புத்தகம் வழங்கப்படுகிறது. இந்தப் புத்தகத்துடன் வருடத்தில் ஒரு நாள் இந்த சிகிச்சை நிலையத்தில் இலவச பரிசோதனைகளை மேற்கொண்டு தொற்றா நோய் ஏற்படாதுள்ளதை உறுதிப்படுத்துவதுடன் அவ்வாறு தொற்றா நோய் ஏற்பட்டிருந்தால் ஆரம்பத்திலேயே அதனை அழிக்கக்கூடிய வகையில் செயற்படலாம்.

குடாநாட்டில் வாழும் 35 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தத்தமது பிரிவில் உள்ள ஆதார வைத்தியசாலையில்நடைபெறும் சிகிச்சை நிலையங்களின் பரிசோதனைகளில் பங்குபற்றி எமது உடலில் உள்ள தொற்றா நோய்களைக் கண்டறிவதுடன் உடல் நிலை ஆரோக்கியமாக உள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். குறிப்பாக தொழில் நிறுவனங்களில் இணைந்து கொள்பவர்கள் கட்டாயம் சுகவாழ்வு சிகிச்சை நிலையத்திற்கு செல்ல வேண்டும். அதற்கு நிறுவனத் தலைவர்கள் முன்வர வேண்டும். ஏனெனில் தொழில் செய்பவர் சுகதேகியாக இருந்தால் தான் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பாடுபட முடியும்.

தொழில் செய்யும் ஆண், பெண் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் தொற்றா நோயின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டால் அந்தப் பணியாளரின் சேவையை அந்த நிறுவனம் இழக்க வேண்டி நேரிடும். வைத்தியசாலைகளில் நடைபெறும் சிகிச்சை நிலையங்களில் தொழில் புரிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படுவதால் இந்த சிகிச்சை நிலையத்திற்கு சென்று ஒரு மணி நேரம் செலவிட்டால் ஒரு வருடத்துக்கு மன நிம்மதியுடன் தொழில் செய்யலாம்.

தொழிலில் நியமிக்கப்படும் போது அனைத்துப் பணியாளர்களும் குறிப்பிட்ட காலத்திற்குள் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பது கட்டாயமாகும். தொழில் புரிவோரில் 35 வயதுக்கு மேற்பட்டோர் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று அனைத்து நிறுவனங்களாலும் கோரப்பட்டால் சுகதேகியான பணியாளர்களை வைத்திருக்க முடியும். இதற்கு ஒரே வழி வருடாந்தம் வேதன ஏற்றம் வழங்க முன்னர் சுகவாழ்வு சிகிச்சை நிலையத்தில் பெற்ற அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென கட்டாயப்படுத்தினால் நிச்சயம் நல்ல பயனைப் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மது அருந்துவோர், புகைப் பிடிப்போரில் 35 வயதுக்கு மேற்பட்டோர் அவசியம் சுகவாழ்வு சிகிச்சை நிலையத்தில் தம்மை பரிசோதித்துக் கொள்வது நீண்ட ஆயுளுடன் வாழ வழி சமைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பற்றும் பதற்றமும்

ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அழகான அரண்மனையில் அவன் வாழ்ந்து வந்தான். அந்த அரண்மனையை விட அழகான மாளிகை ஒன்றை அந்த ஊரிலேயே ஒருவன் கட்டியிருந்தான். அப்படிக் கட்டி முடித்ததில் அவனுக்கு மிகவும் பெருமை. எத்தனையோ செல்வந்தர்கள் எல்லாம் வந்து பார்த்துவிட்டு ''இந்த மாளிகையை விலைக்குக் கொடுக்கிறாயா... எவ்வளவு விலை சொன்னாலும் வாங்குவதற்குத் தயார்'' என்று சொல்லிக் கேட்டுப் பார்த்தார்கள்.

''நான் இதை விற்பதற்குத் தயார் இல்லை!'' என்று சொன்னான். அந்தளவுக்கு சிறப்பான கலை அம்சத்தோடு அதைக் கட்டி முடித்துள்ளான். அது ஒரு அரண்மனை மாதிரி இருந்தது. சுற்றிலும் அழகான பூந்தோட்டம்.

ஒருநாள் அவன் எங்கேயோ வெளியூருக்குப் போய்விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்போது அந்த மாளிகை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. பதறிப் போனான். விலைக்குக் கேட்டவர்கள் யாராவது இதைச் செய்திருக்க வேணும்....! அல்லது மன்னர் செய்த சதியாக இருக்குமோ என்று நினைத்தான். ஒரு மூலையில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தான். அந்த வேளை அவனுடைய மகன் அங்கே ஓடி வந்தான்.

''அப்பா! அழாதேங்கோ! இதை நான் நேற்று இரவே எங்கள் ஊர் மன்னருக்கு விற்றுவிட்டேன். இதைக் கட்டி முடிக்க எமக்கு எவ்வளவு செலவாகியதோ அதேபோல மூன்று மடங்கு விலைக்கு விற்றுவிட்டேன்! கவலைப் படாதேங்கோ... இதைவிட அழகான மாளிகையை நாம் புதுசாகக் கட்டலாம்'' என்றான்.

இதைக் கேட்டதும் அழுது கொண்டிருந்தவன் அழுகையை நிறுத்தினான். சிரிக்க ஆரம்பித்தான். ''இதே இடத்தை நான் மன்னரிடமிருந்து விலைக்கு வாங்குவேன்... இதைவிட அழகான மாளிகையைக் கட்டுவேன்!'' என்று சுற்றி நின்ற எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருந்தான்.

இந்த நேரத்திலே அவனின் இளைய மகன் ஓடி வந்தான்.

''அப்பா! அண்ணன் சொன்னதெல்லாம் சரிதான்... மன்னனிடம் விலை பேசினதெல்லாம் உண்மைதான். ஆனால் விற்றது பேச்சளவிலேதான். இனிமேல்தான் பத்திரம் வாங்கவேண்டும். எழுத வேண்டும். நீங்கள் கையெழுத்துப் போட வேண்டும்... பதிவு செய்ய வேண்டும்... மன்னரிடம் பணம் வாங்க வேண்டும். அதற்காகத்தான் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அதற்குள் இப்படி நடந்துள்ளது!'' என்றான்.

இப்போது சிரித்துக் கொண்டிருந்த அவன் சிரிப்பை நிறுத்தினான். மறுபடியும் குழந்தை மாதிரி அழ ஆரம்பித்தான்!.

இது ஒரு சம்பவம். இதிலிருந்து என்ன தெரிகின்றது?

அந்த அழகான மாளிகை தன்னுடையதென்று நினைக்கும்போது அவனுக்கு அழுகை வந்தது. அது தன்னுடையது இல்லை என்று நினைக்கும் போது சிரிப்பு வந்தது. மறுபடியும் அது தன்னுடையது தான் என்னும் உணர்வு வரும்போது அழுகை!

''எதிலிருந்து நீ நீங்கியிருக்கிறாயோ அதிலேயிருந்து உனக்கு துன்பம் இல்லை'' என்கிறார் திருவள்ளுவர்.

இந்த உடம்பு என்னுடையதில்லை என்னும் உணர்வு உனக்கு வந்திட்டால் அது ஒரு பெரிய நிலை.

''உன் உடம்பின் மீது நீ கொண்டிருக்கின்ற பற்று அதாவது அடையாளம் கழன்று களத்தில், உடம்பே ஈம நெருப்பில் எரிந்தாலும் கவலைப் படமாட்டாய்?'' என்கிறார் ஓஷோ.




''வேறு யாரோ சிதையில் எரிக்கின்றதாகவே தோன்றும். கூட்டத்தோடு நின்று நீயும் வேடிக்கை பார்த்திருக்கலாம்! யாரும் உன்னைப் பார்க்கவும் முடியாது!'' என்கிறார் அவர்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# யாழில் தோன்றி இந்தியாவிலும் பரவிய செபமாலை மாதா துறவு சபை ஆசிரமங்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி.......)



தாபகர் தோமஸ் அடிகளின் உடல் பாகங்கள் 40 வருடங்களின் பின்னர் பாதுகாப்புக் கருதி தோலகட்டியில் இருந்த கல்லறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதற்காக எடுக்கப்பட்ட போது...

**எஸ்.யேசுதாஸ்**

தோலகட்டியில் தோமஸ் அடிகளாரினால் ஆரம்பிக்கப்பட்ட செபமாலை மாதா துறவு சபைத் துறவிகள் அடிகளாரின் இறை வழிநடத்தலில் ஆன்மிக வழியில் மக்களை ஈர்ப்பதோடு திருச்சபைப் பணிகளுக்காக செபித்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். செப, தவ, தியானயோகவாழ்வை வாழ்ந்து அதை எமது மண்ணில் மலரச் செய்து ஏழைகள் வாழ்வை உயர்த்துவதிலும் முன்னின்று பணியாற்றினர்.

அந்தப் பகுதி பாமர மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு தச்சுத்தொழில் பயிற்சிகள், நெல்லிரச உற்பத்தி மற்றும் பல கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்து, பார்க்குமிடமெங்கும் காய்கறி பழமரத் தோட்டங்களும் நெல்லி, மா, கமுகு, பூமரச் சோலைகளும் ரம்மியமான அமைதிச் சூழலைத் தோற்றுவித்தனர். கட்டாந்தரையாக இருந்த இடத்தை கடின உழைப்பால் சோலைவனமாக மாற்றினர்.

எளிமையும், அடக்கமும், பொறுமையும், இலட்சியப் பணி நோக்கும் கொண்ட அடிகளார் பல சவால்கள், சோதனைகள், எதிர்ப்புகள், அவதூறுகள் , ஏளனங்களைச் சந்தித்த போதும், போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும் இறைமகன் இயேசுவுக்கு ஏற்பட்ட அவமான மரணத்தின் முன்னால் இது எம்மாத்திரம் என பொறுமையுடன் தன்பணி தொடர்ந்தார்.

பலவிதமான அசுத்த ஆவிகள், பேய்களினால் பீடிக்கப்பட்ட பலர் தோமஸ் அடிகளாரை நாடி வந்தனர். ஆழமான செப,தவ நோன்புகளால் இறைவன் வழங்கிய தெய்வீக ஆற்றல் வல்லமையின் சக்தியால் பேய்களை சாட்டையால் அடித்து விரட்டி மக்களைக் குணப்படுத்தினார். தானும் ஒரு பணியாளன் போன்று அனைத்து வேலைகளிலும் ஈடுபட்டு உழைத்தார். கொழும்புத்துறை புனித சூசையப்பர் துறவற சபை இளவாலை தியான நிலையம் மற்றும் இலங்கையின் பல பகுதிகளுக்கு சென்று தியானங்கள் நடத்தி ஆன்மிக வழிகாட்டியாக விளங்கினார்.

ஆண்களுக்கான சந்நியாச சபைகள் போன்று பெண்களுக்கும் துறவுச் சபையை ஏற்படுத்தி இறை பணியாற்ற விருப்பம் கொண்டு 1950 இல் புனித வளனார் கன்னியர் மடத்தையும் 1951 இல் அச்சுவேலி அமலிவனம் ஆசிரமத்தையும் ஆரம்பித்தார். அமலிவனத்திற்கான 60 ஏக்கர் நிலப்பகுதியை சேர் சிற்றம்பலம் கார்டினர் அன்பளிப்புச் செய்தார்.

ஒருமுறை தோலகட்டிப் பகுதியில் வானம் பொய்த்து பயிர்கள் வாடிக்கொண்டிருந்தன. அடிகளாரின் செபத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் மழைவேண்டும் என்று கேட்டார்கள். இரவு பகலாக செபமாலையைப் பாட்டாகப் பாடி சகோதரர்களுடன் செபித்தார். வானம் இருண்டது. கார்முகில்கள் மழையைப் பொழிந்தன. இவ்வாறு இவர் வழியாக இறைவன் பல அற்புதங்களைப் பொழியலானார்.

சாதி, மத பேதமின்றிப் பணியாற்றிய அடிகளார் 1937 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி குருத்துவ வெள்ளி விழாவை அமைதியாகக் கொண்டாடினார். அந்தப்பகுதி இந்து மாணவர்கள், மக்கள் மேல் கொண்டிருந்த கரிசனைக்கு நன்றியாக தோலகட்டியின் கிழக்கிலும் மேற்கிலும் இரு அரச மரங்களை நட்டு மகிழ்ந்தார். இவை இன்றும் காணப்படுகின்றன. இந்துக்கள் மயானத்திற்குச் செல்வதற்கு வசதியாக தோலகட்டியின் வடக்கிலும் தெற்கிலுமாக அகன்ற பாதையை விட்டுக் கொடுத்து இறைவனின் அன்பால் மக்களை அரவணைத்தார்.

அமலமரித்தியாகிகள் சபையின் அனைத்துலகத் தலைவர் தெதோரே லெபோர் அடிகளாரின் அழைப்புக்கிணங்க 1938 ஆம் ஆண்டு ரோம் நகரில் நடந்த பொதுக் கூட்டத்துக்குச் சென்று சபையின் வளர்ச்சி, குறிக்கோள், பணிகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்தார். அத்துடன் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று துறவற சபையின் செயற்பாடுகளைப் பார்வையிட்டார். அங்குள்ள மௌன தியான முறைகளை சபைக்குள் புகுத்தினார்.

இந்த வேளையில் இந்தியாவில் தமிழ்நாட்டிலிருந்து [illegible] ஆயர்கள் , குருக்கள் குறிப்பாக இயேசு சபையைச் சேர்ந்தோர் தோலகட்டி காட்சித்தியான சபை துறவு ஆசிரமத்தைப் பார்வையிட்டுச் சென்றனர். இந்திய கத்தோலிக்கருக்கு இந்தத் துறவு சபையின் சிறப்புக்கள், தேவை தொடர்பாக எடுத்துக் கூறியதை அடுத்து, தேவ அழைத்தலில் நாட்டம் கொண்ட சில இளைஞர்கள் தோலகட்டிச் சபையில் இணைந்தனர்.

உலகம் முழுவதும் திருமறை வேகமாகப்பரவ துணை நிற்பது தியான சபைகள் தான் என்பதால் அதே பணியை மேற்கொண்டிருந்த செபமாலை மாதா துறவு சபையை இந்திய மண்ணில் நிறுவுமாறு ஆயர்கள் அழைப்பு விடுத்தார்கள். இதனை நிறைவேற்ற குருக்களின் உருவாக்கம் தேவை என்பதை கருத்திற்கொண்டு சந்நியாச வாழ்வை மேற்கொண்டிருந்தோரில் நால்வரைத் தெரிந்தெடுத்து மெய்யியல், இறையியல் கற்பித்து யாழ்.ஆயரால் திருநிலைப்படுத்தப்பட்டனர். முன்னதாக இந்தியாவில் இயேசு சபைக் குருவாக இருந்த அந்தோனி பர்னாந்து அடிகள் 1939 ஆம் ஆண்டு இங்கு வந்து இச்சபையில் இணைந்து அந்தோனி சூசைநாதர் என்ற பெயருடன் குருவாகியிருந்தார்.

தொடர்ந்து 1944 இல் இந்தியாவைச் சேர்ந்த அருட்திரு பிரான்சிஸ், அருட்திரு யோன், 1949 இல் அருட்திரு பீற்றர், இலங்கையைச் சேர்ந்த அருட்திரு ஜே.பி. பாக்கியநாதர் ஆகியோர் குருக்களாக அபிஷேகம் செய்யப்பட்டனர்.

ஆண்களுக்கான சந்நியாச சபைகள் போன்று பெண்களுக்கும் துறவுச் சபையை ஏற்படுத்தி இறை பணியாற்றவிருப்பம் கொண்டு 1950 இல் புனித வளனார் கன்னியர் மடத்தையும் 1951 இல் அச்சுவேலி அமலிவனம் ஆசிரமத்தையும் ஆரம்பித்தார். அமலிவனத்திற்கான 60 ஏக்கர் நிலப் பகுதியை சேர் சிற்றம்பலம் கார்டினர் அன்பளிப் புச் செய்தார்.

ஆசிரமத்தின் மடங்கள் இந்தியாவிலும் ஸ்தாபிக்கப்பட்டன. 1952 இல் மணப்பாறையில் புஸ்பவன ஆசிரமம் ,1954 இல் வட்க்கன் குளம் அமலிவனம் கன்னியர் மடம், 1955 இல் றைகாவில் நிஷ்களங்க ஆசிரமமும் திறக்கப்பட்டன. இலங்கையிலும் இந்தியா விலும் ஆசிரம சபைகளை ஏற்படுத்தி ஏராளமான குருக்கள் கன்னியர், துறவிகளை உருவாக்கி கத்தோலிக்க ஆன்மிகத்தை வளர்க்க அரும்பாடுபட்ட தோமஸ் அடிகளாரின் குருத்துவ பொன் விழா 1962 இல் தோலகட்டி, யாழ்ப்பாணம், பாண்டியன் தாழ்வு, அச்சுவேலி ஆகிய இடங்களில் கொண்டாடப்பட்டது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.10 ஆயிரம் சம்பள உயர்வு

## அனைத்து அரச ஊழியர்களுக்கும் வேண்டும்
## அஞ்சல் உத்தியோகத்தர்கள் சங்கம் தீர்மானம்

திருகோணமலை, ஒக்.30

அனைத்து அரச ஊழியர்களுக்கும் தற்போதைய வாழ்க்கைச் செலவு உயர்வு, விலைவாசி ஏற்றம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பத்தாயிரம் ரூபாவால் மாதாந்த சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

சங்கத் தலைவர் எம்.எஸ்.எஸ்.பிரேமதிலக தலைமையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தி லேயே இந்தச் சம்பள அதிகரிப்புக் கோரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தப் பிரச்சினை உட்பட மேலும் பல தீர்மானங்கள் சங்கப் பொதுச் செயலாளர் யூ.எல்.எம்.பைஸரால் கூட்டத்தில் முன்மொழியப்பட்டதுடன், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டன.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★முதல்தர அஞ்சல் அதிபர் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

★அஞ்சல் திணைக்களத்தால் வெளியிடப்படும் சுற்றறிக்கை தனிச் சிங்களத்தில் அனுப்பப்படுவதால் தமிழ் பேசும் தபாலதிபர்கள், உப தபாலதிபர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். எனவே சுற்றறிக்கை தமிழ் மொழியிலும் வெளியிடப்பட வேண்டும்.

★கடந்த பதினொரு வருடங்களுக்கு மேலாக தற்காலிக அடிப்படையில் இயங்கும் அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் நிரந்தரமாக்கப்படல் வேண்டும். அத்துடன் அந்த அலுவலகத்துக்கான ஆளணிகளும் உருவாக்கப்பட வேண்டும்.

★தொலைபேசிப் பட்டியல்கள் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படாமல் உப அஞ்சல் அலுவலகங்களுக்கு நேரடியாகவே அனுப்பப்படவேண்டும்.

★களுவாஞ்சிக்குடி மற்றும் சம்மாந்துறை அஞ்சல் அலுவலகக் கட்டடங்கள் புதிதாக நிர்மாணம் செய்யப்பட வேண்டும். சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்துக்கு உப அஞ்சல் அலுவலகம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட வேண்டும். உப அஞ்சல் அதிபர்களுக்கு வழங்கப்படும் காகிதாதிகளுக்கான கொடுப்பனவு 100 ரூபாவில் இருந்து 500 ரூபாவரை அதிகரிக்கப்பட வேண்டும். கல்முனை அஞ்சல் அலுவலகத்துக்கு மேலும் ஒரு கணினி வழங்கப்படுவதுடன், சாய்ந்தமருது உப அஞ்சல் அலுவலகத்துக்கும் கணினி ஒன்று வழங்கப்பட வேண்டும்.

★உப அஞ்சல் அலுவலகங்களுக்கான வாடகை 250 ரூபாவில் இருந்து மதிப்பீட்டு அறிக்கையின்படி அதிகரிக்கப்பட வேண்டும்.

போன்ற தீர்மானங்களுடன் மேலும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் அஞ்சல் மா அதிபர் டீ.என்.பி.ரோஹண அபயரட்ண பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (ச-30)

## புடைவை விற்பனையில் ஈடுபட்ட இந்தியர் கைது

களுவாஞ்சிக்குடி,ஒக்.30

சட்டவிரோதமான முறையில் இலங்கையில் தங்கியிருந்த இந்திய நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி, கல்லாறு பிரதேசத்தில் வைத்து இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் இவர் புடைவை விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட வர் மேலதிக விசாரணை களுக்காக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச)

## பண்டாரவளையில் பெண்ணின் சடலம் மீட்பு

பண்டாரவளை,ஒக்.30

பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கு இடமான முறையில் உயிரிழந்த பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பண்டாரவளை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 60 வயதான பெண் என்று பொலிஸார் தெரிவித்தனர். சடலம் தற்போது தியத்தலாவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)



மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி மாங்காடு சுயம்புலிங்க மகாவிஷ்ணு ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பாற்குட பவனி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

## பெண்களின் அந்தரங்க பாவனைப் பொருள்கள்

### பொலிஸார் விசாரணை

கண்டி,ஒக்.30

கண்டியிலுள்ள இரு வீடுகளுக்கு முன்பாக காணப்பட்டதாகக் கூறப்படும் பெண்களின் அந்தரங்க பாவனைப் பொருள்கள் தொடர்பில் கண்டி பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

கண்டி, போவல போதிராஜ மாவத்தையிலுள்ள மேலதிக நீதிவானின் வீட்டுக்கு முன்பாகவும் மற்றுமொரு வீட்டுக்கு முன்பாகவும் பெண்களின் பாவனைப் பொருள்கள் கைவிடப்பட்ட நிலையில் கடந்த சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பொருள்கள் யாரால், எதற்காக இங்கு கைவிடப்பட்டுள்ளன என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று பொலிஸார் கூறினர்.

இந்த விசாரணைக்கு பொலிஸ் மோப்ப நாயின் உதவி பெறப்பட்டுள்ளது என்றும் இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## 500 ஹெக்ரெயர் பரப்பில் மிளகாய் பயிரிடத் திட்டம்

### மாத்தளை மாவட்டத்தில்



மாத்தளை,ஒக்.30

மத்திய மாகாணத்தில் மிளகாய்ச் செய்கைக்கு பிரசித்தி பெற்ற மாத்தளை மாவட்டத்தில் புதிதாக மேலும் 500 ஹெக்ரெயர் நிலப் பரப்பில் மிளகாயைப் பயிர் செய்யவும், அதனை செத்தல்மிளகாயாகப் பக்குவப்படுத்தி சந்தைக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மாத்தளை மாவட்ட செயலாளர் ஹெலன் ஏ. மீகஸ்முல்ல தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் வருடாந்த சுயதேவைக்காக 40,000 மெற்றிக் தொன் செத்தல் மிளகாய் அவசியமானது. எனினும் 6000 மெட்ரிக் தொன் மாத்திரமே தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றது. மிகுதி 34,000 மெட்ரிக் தொன் மிளகாயையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இறக்குமதிக்கு செலவாகும் பெருந்தொகைப் பணத்தின் ஒரு பகுதியையாவது மீதப்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டே இந்தத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்துக்கு என்று விவசாய அமைச்சு 47 லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

ஏற்கனவே தம்புள்ள, கலேவெல, பள்ளேபொல, நாவுல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கான விதைகள் இலவசமாக வழங்கப்படுவதோடு, உற்பத்தி செலவின் 50 வீதத்தையும் அரசு வழங்க முன்வந்துள்ளது.- என்றார். (ச)

### விடாது தொடரும் அடைமழை:

## லக்ஸபான நீர்த்தேக்க வான் கதவுகள் திறப்பு

நுவரெலியா,ஒக்.30

கடும் மழை காரணமாக லக்ஸபான நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் களனி கங்கையின் நீர்மட்டம் உயரும் என்று நுவரெலிய மாவட்ட அரச அதிபர் டி.பி.ஜி. குமாரசிறி தெரிவித்தார்.

ஆற்றை அண்மித்த மற்றும் தாழ் நில மக்கள் அவதானமாகச் செயற்படுமாறு அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, பொகவந்தலாவை, லொவிலோன் பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவால் குடியிருப்பு ஒன்று பாதிக்கப்பட்டுள்ளது. உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்ட போதும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் நிலைகொண்டுள்ளதன் காரணமாக கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லும் போது எச்சரிக்கையாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கோரியுள்ளது.

யாழ்ப்பாணம் தொடக்கம் மட்டக்களப்பு வரையான கடற்பரப்பில், கடல் கொந்தளிப்பு, பலத்த காற்று வீசும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தநிலையில் நாட்டின் பல பாகங்களிலும், மின்னல் தாக்குதலுக்கு இலக்கான பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

எனவே மழை காலங்களில் மக்கள் தமக்கான பாதுகாப்பு குறித்து அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இதேவேளை, இத்தாழமுக்க நிலை தொடர்பாக வடக்கு, கிழக்கு கரையோர மாவட்டங்களில் வாழும் பொது மக்களுக்கும், முப்படையினருக்கும், பொலிஸாருக்கும் அறிவூட்டியுள்ளோம் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் லால் குமார கூறினார். (ச)

## பஸ் மரத்தில் மோதி விபத்து

### 40 பேர் படுகாயம்

கயிட்டிகொலாவ,பதவியா வீதியில் நேற்று திங்கட்கிழமை பஸ் மரத்துடன் மோதியதில் 40 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

திருகோணமலைக்கும் மன்னாருக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் பஸ்ஸொன்றே இவ்வாறு மரத்தில் மோதி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கயிட்டிகொலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கரையோர ரயில் போக்குவரத்து பாதிப்பு

பாணந்துறை மற்றும் வாதுவ இடையிலான ரயில் மார்க்கத்தில் மின் கம்பமொன்று வீழ்ந்ததில் கரையோர ரயில் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த மின் கம்பத்தை அகற்றி ரயில் போக்குவரத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ.ரத்நாயக்க தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீங்கள் உண்மை, நேர்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள். நண்பர், உறவினர் உரிய மரியாதை தருவர். தொழில் , வியபாரம் வளர்ச்சிபெற அனுகூலமான காரணி பலம் பெறும். தாராள பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** அவசரமான பணி உருவாகி அன்றாடப் பணியைத் தாமதப்படுத்தும். நம்பகத்தன்மை இல்லாதவர்களிடம் இரகசியத்தைச் சொல்லவேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தன்மையை கூடுதல் உழைப்பால் பாதுகாப்பது நல்லது. பணவரவு சீராக இருக்கும்.

**மிதுனம்:** நீங்கள் ஆரம்பிக்கும் செயலை மனப்பூர்வமாக நிறைவேற்றுவீர்கள். ஆதாய பணவரவு கிடைக்கும், குல தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தர் பணியாளர்களை ஊக்கப்படுத்தி திட்ட இலக்கை நிறைவேற்றுவர்.

**கடகம்:** உங்கள் மனதில் தன்னம்பிக்கையும் செயலில் உத்வேகமும் பெறுவீர்கள். இதனால் ஆரம்பிக்கும் நற்காரியம் அத்தனையும் முழு பலனைத்தரும். நீண்டநாள் சந்திக்க நினைத்த நண்பரைக் காணும் வாய்ப்பு உருவாகும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு தகுந்த சன்மானம் கிடைக்கும்.

**சிங்கம்:** நீங்கள் நிறைவேற்ற வேண்டிய செயலில் தாமதம் குறுக்கிடலாம். எதிர் மனப்பாங்கு உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க அதிக பணிபுரிவது அவசியம். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** நீங்கள் கூடுதல் பணிகளால் மனதில் அதிருப்தி அடைவீர்கள். தொழில் வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். பணவரவு மிதமாகக் கிடைத்து சிக்கனமான செலவுக்குப் பயன்படும். முக்கிய ஆவணம் பிறர் பொறுப்பில் விடவேண்டாம்.

**நாளை**

ஐப்பசி -15 புதன்கிழமை 31.10.2012
திதி: துதியை பி.இ.05.32 வரை
நட்சத்திரம்: கார்த்திகை முழுவதும், அமிர்தம்
சுபநேரம்: 04.33-06.03 வரை
ராகுகாலம்: 12.03- 01.33 வரை

**துலாம்:** உங்கள் செயல்கள் சிறப்புப் பெற தேவையான மாற்றம் செய்வீர்கள். நண்பர்களிடம் கூடுதல் மதிப்பு, மரியாதை கிடைக்கும். தொழில், வியாபார அபிவிருத்திப் பணி நல்ல விதமாக நிறைவேறும்.

**விருச்சிகம்:** உங்கள் வாழ்வில் முக்கிய செயல் நிறைவேற குல தெய்வ அருள் பலமாக துணை நிற்கும். சிறிய செயலையும் நேர்த்தியாகச் செய்வீர்கள். தொழில் வியாபாரம் அபிவிருத்தியாகி மன நிறைவைத் தரும். ஆதாய பண வரவு கிடைக்கும்.

**தனுசு:** தெய்வநம்பிக்கையின் பெயரால் ஒருவர் உங்களிடம் உதவி கேட்பார். அவரது செயலின் உண்மைத் தன்மை உணர்ந்து உதவுவது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கடின உழைப்பு அவசியம். பணவரவை விட புதிய இனங் களில் செலவுத்தொகை அதிகரிக்கும்.

**மகரம்:** நீங்கள் மிகவும் எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகும். மனதில் அதிக நம்பிக்கை கொள்வதால்செயல் திருப்திகரமாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் வரவால் போட்டி அதிகரிக்கும்.

**கும்பம்:** நீங்கள் திட்டமிட்ட காரியம் எளிதாக நிறைவேறும். குல தெய்வத்திற்கு நன்றி சொல்லி நெகிழ்ச்சி அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** உங்களின் மனதில் நம்பிக்கைக் குறைவு ஏற்படலாம். நண்பர்களிடம் பேசுவதில் நிதானமான நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். தொழில் வியாபாரத்தில் இருக்க அனுகூலம் பாதுகாக்க கூடுதல் உழைப்பு உதவும். மிதமான அளவில் பணவரவு கிடைக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 9 | 3 |
| | | | | 7 | | 6 | 2 | |
| 3 | 6 | 5 | 2 | | | 7 | 4 | |
| 7 | | 9 | 8 | 5 | | 4 | | |
| | | 4 | | | 2 | 3 | | |
| | | 8 | | 3 | 4 | 9 | | 6 |
| | 2 | 7 | | | 9 | 8 | 3 | 4 |
| | 9 | 3 | | 8 | | | | |
| 1 | 8 | | | | | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 3 | 4 | 7 | 2 | 1 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 3 | 1 | 6 | 5 | 2 | 7 |
| 1 | 7 | 2 | 5 | 8 | 9 | 6 | 4 | 3 |
| 3 | 8 | 9 | 2 | 5 | 1 | 4 | 7 | 6 |
| 6 | 1 | 4 | 8 | 3 | 7 | 9 | 5 | 2 |
| 7 | 2 | 5 | 6 | 9 | 4 | 8 | 3 | 1 |
| 2 | 3 | 6 | 9 | 4 | 8 | 7 | 1 | 5 |
| 8 | 4 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 | 9 |
| 9 | 5 | 7 | 1 | 6 | 3 | 3 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு



பிறப்பு
17.10.1956

இறப்பு
30.09.2012

### திருமதி சிவகடாட்சம் அன்னலட்சுமி

கடந்த 30.09.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சிவகடாட்சம் அன்னலட்சுமி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (28.10.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.10.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


இல. 62, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(247 [illegible] (4-5-6-7)

## உள்ளக் கோயிலில் உறைந்திருக்கும் தெய்வத்தின் இருபத்திரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலர்ந்தது
15.04.1904



விண்ணில் உறைந்தது
30.10.1990

### அமரர் வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை

**திதி: அபரபக்க பிரதமை - 30.10.2012**

அன்பின் உறைவிடமே அழியாப் பெருநிதியே...
ஆண்டு பல சென்றாலும் ஆறுமா எம் துயரம்
உழைப்பால் உயர்ந்தீரே உத்தமனே எங்கள் அப்பா...
உலகமெனும் மாயையை நாம் உண்மை என்று நம்பிவிட்டோம்.

இயற்கை வனப்பு மிக்க இல்லறமாம் சோலையிலே
இன்பமுடன் உலாவி வர ஏற்ற வழி செய்தீரே...
அறிவாற்றல் மிக்கவராய் அவனியிலே வாழ வைத்து
அகம் மகிழ்ந்த போது அரன் பாதம் கிட்டியதோ...?
காலச் சுழற்சியினால் கணப்பொழுதில் மறைந்தீரே
காவியமாய் எங்கள் கருத்தில் நிறைந்தீரே...
தாயுமாய் தந்தையுமாய் தக்கதோர் ஆசானாய் தந்தீர் அறிவுரைகள்
தரணியிலே உங்களைப் போல் தயாளனை நாம் காண்போமோ...

என்றும் உங்கள் நினைவில் வாழும்
**குடும்பத்தினர்.**

குடியிருப்பு,
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

(21571)(4 5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீர்கொழும்பு கத்தோலிக்க சபையின் ஏற்பாட்டில் போதைப்பொருள்கள், மதுபானம் மற்றும் விபசார நிலையங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை பேரணி இடம்பெற்றது. நீர்கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ள செபஸ். மேரிஸ் தேவாலயத்துக்கு முன்பாக ஆரம்பமான பேரணி கொச்சிக்கடை பிக்சோரா தேவமாதா தேவாலயத்தில் நிறைவடைந்தது.

# எரிபொருள் இறக்குமதி விரைவில் மாற்று ஏற்பாடு

## அமைச்சர் சுசில் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.30

இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனம் நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் எரிபொருள்களை இறக்குமதி செய்வதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டுள் ளது என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்தார்.

இதற்காக மாற்றுத் தரப் பினரு டன் ஒப்பந்தங்களைச் செய்துகொள் வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. பொரு ளாதார தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஈரானிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்வது நீண்ட காலத் துக்கு சாத்தியமாகாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்தே மாற்று நடவடிக் கைகளை மேற் கொள்ள இலங்கை



பெற்றோ லியக் கூட்டுத்தாபனம் தீர் மானித்துள்ளது என்று அவர் தெரிவித் தார். எரிபொருளை இறக்குமதி செய் வதற்கு பல தரப்பினரி டமிருந்தும் கேள்வி கோரப்பட்டுள்ளது. அதனால், எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு இட மில்லை. நீண்டகால தயார்ப்படுத்தலின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் எரிபொருள் இறக்குமதி செய்யப் படும் என்று அவர் மேலும் கூறினார். (ச)

# விவசாயத்துக்கு தீங்கான வன விலங்குகளை அழியுங்கள்

## வேறு வழியில்லை என்கிறார் அமைச்சர்



கொழும்பு,ஒக்.30

விவசாயத்துக்கு தீங்கு விளைவிக்கும் வனவிலங்கு களை கொன்றொழிக்கலாம். அதனைவிட வேறு வழியில்லை என்று விவசாயத்துறை அமைச் சர் மஹிந்த யாப்பா அபே வர்த்தன தெரிவித்தார்.

பண்டாரவளையில் நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரை யாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குரங்குகள், காட்டுப் பன் றிகள் மற்றும் முதலைகள் என் பன மக்களின் விவசாயத் துக்கு தீங்கு விளைவிக்கின்றன.

தங்காலையில் விளை நிலத்துக்கு சேதம் விளை வித்த குரங்குகள் பிடிக்கப் பட்டு யால தேசிய சரணா லயத்தில் விடப்பட்டுள்ளன. எனி னும், அந்தக் குரங்குகள் மீளவும் தப்பிவந்து விவசாய நிலங் களை சேதப்படுத்துகின்றன.

குரங்குகள் மாத்திரமல்ல காட்டுப் பன்றிகள் மற்றும் முதலைகள் ஊடாகவும் மக்கள் இதே பிரச்சினை களை எதிர்கொள்கின்றனர்.

தங்களுடைய விளை நிலங்களுக்கு சேதம் விளை விக்கின்ற வன விலங்கு களை கொன்றொழித்தால் அவர் களுக்கு எதிராக எவ்வித மான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டாம் என்று நான் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்குவேன் - என்றார். (ச)

# சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டவரைவு விரைவில்


## நடவடிக்கையில் அரசு என்கிறார் சட்டமா அதிபர்

கொழும்பு,ஒக்.30

சாட்சிகளைப் பாதுகாக் கும் சட்டவரைவின் இறுதி வரைவுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அனு மதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த சட்ட வரைவு விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படும் என்று சட்டமா அதிபர் பாலித்த பெர் னாண்டோ தெரிவித்தார்.

இந்த சட்ட வரைவு தொடர் பான அடுத்தகட்ட நடவடிக் கைகளை எடுப்பதற்காக அது நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

சாட்சிகளைப் பாதுகாக் கும் சட்டவரைவு 2008ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டது. எனினும் அந்த சட்டவரைவில் அரசு சில திருத்தங்களை மேற்கொள்ள



வேண்டி இருந்தமையால் அது, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.

இந்தநிலையில், அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடு கள் மற்றும் சர்வதேச மன் னிப்புச் சபை உள்ளிட்ட அமைப்புகளிடமிருந்து அரசு எதிர்கொண்ட அழுத்தத்தை அடுத்தே இந்த சட்டவரைவை திருத்தங்களுடன் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ச)

# டெங்கு காய்ச்சலால் மாணவன் சாவு

கொழும்பு,ஒக்.30

டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நிலையில் நீர் கொழும்பு மாவட்ட வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்று வந்த பாடசாலை மாணவன் ஒருவன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

தங்கொட்டுவ பிர தேசத்தை சேர்ந்த, வென்னப் புவ ஜோசப் வாஸ் கல்லூரியில் தரம் ஒன் பதில் கல்வி கற்றுவந்தவ ருமான கருகுலசூரிய அன் டனி மகேஸ் பெர்னாண்டோ (வயது-14) என்ற மாண வனே டெங்கு காய்ச்சலி னால் உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவனுக்கு கடந்த 20 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் தனியார் வைத்தியசாலையில் சிகிச் சையளிக்கப்பட்டு பின்னர் நீர்கொழும்பு மாவட்ட வைத் தியசாலைக்கு மாற்றப்பட்ட குறித்த சிறுவன் சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாக மாணவனின் உறவினர்கள் தெரிவித்தனர்.

(ச)

# 13 ஐ நீக்கினால் எதிர்ப்பு

## மத்திய மாகாண முதலமைச்சர் சரத்

கொழும்பு,ஒக்.30

நாட்டின் இறைமை, ஒருமைப்பாட்டின் பிரகாரம் அரசமைப்புக்கு அமைவாக நான் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டேன். எனி னும், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய் தால் நான் எதிர்ப்பேன் என்று மத்திய மாகாண முதல மைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்தின் நகல் உண்மையிலேயே மாகாணசபைகளில் நடை முறைப்படுத்தப்பட வில்லை. தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலேயே இந்தத் திருத்தம் மாகாண சபைகளுக்கு கொண்டுவரப் பட்டது என்று அவர் கூறி னார்.

வடக்கு, கிழக்கில் இந்த முறைமை உண்மையாக நடைமுறையில் இல்லை.



தற்பொழுது கிழக்கு மாகாண சபை நிறுவப்பட்டுள்ளது. எனினும் அங்கும் 13ஆவது திருத்தம் முறையாக நடை முறைப்படுத்தப்படுவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

எனவே 13ஆவது திருத் தத்தை ரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால் நான் அதை எதிர்ப்பேன் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# பாரிசவாதத்தால் உயிரிழப்பு நாளொன்றுக்கு 40–50 வரை

## சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,ஒக்.30

இலங்கையில் நாளொன் றுக்கு 40-50 பேரளவில் பாரி சவாதம் நோயால் உயிரிழக் கின்றனர் என்று சுகாதார அமைச்சு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித் துள்ளது.

இதுகுறித்து சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த நாட்டில் வைத்திய சாலைகளில் இடம்பெறு கின்ற உயிரிழப்புகளுக்கு துணைபுரியும் நான்காவது காரணியாக பாரிசவாதம் விளங்குகின்றது.

நாட்டில் பாரிசவாதத் துக்கு உள்ளாவோரின் எண் ணிக்கை ஒவ்வொரு தசாப் தமும் இரு மடங்குகளாக அதிகரித்து வருகின்றது. அதி லும் 25 வீதத்தினர் 65 வயதுக்கு உட்பட்டவர்

**இந்த நோய் ஏற் படுவதை தவிர்க்க மதுப் பாவனை, புகைப்பிடித்தல் என்பவற்றை கை விடுவதே சிறந்தது.**

களாவர். 15-59 வயதுக்கு இடைப்பட்டோரின் உயிரி ழப்புக்கு துணைபுரியும் காரணிகளில் பாரிசவாதம் 5 ஆவது இடத்தில் உள்ளது .

இந்த நோய் ஏற்படுவதை தவிர்க்க மதுபாவனை, புகைப் பிடித்தல் என்பவற்றைப் கைவிடுவதே சிறந்தது. உப்பு பாவனையைக் குறைப் பதுடன் மரக்கறி மற்றும் பழ வகைகளை அதிகளவில் உட்கொள்வது அவசியம் என்று மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கூடங்குளம் அணுமின் நிலையத்தை கண்காணிக்க அனுமதிக்க வேண்டும்

## கருணாதிலக அமுனுகம வேண்டுகோள்



கொழும்பு,ஒக்.30

தமிழகத்தில் நிர்மாணிக் கப்பட்டு வரும் கூடங்குளம் அணுமின் உற்பத்தி நிலை யத்தை நேரடியாகக் கண்கா ணிக்க அனுமதிக்க வேண் டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சின் செயலா ளர் கருணாதிலக அமுனுகம கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்கனவே கூடங்குளம் அணுமின்னிலையத்தால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து, இலங் கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பேச்சு இடம்பெற் றிருந்தன.

இந்த நிலையில் தற்போது அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதற்கான இராஜதந்திர முன்னெடுப்புக்கள் மேற்கொள் ளப்படும் என்று அவர் கூறி னார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

உசன், மிருசுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வி கமலாம்பிகை முருகேசபிள்ளை ஆகிய நான் 11.07.2012 முதல் எனது பெயரை செல்வி கமலேஷீ முருகேசபிள்ளை என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன். இனிவரும் காலங்களில் இந்தப் பெயரையே பயன்படுத்துவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

(24922)(5-6-7) செல்வி கமலேஷீ முருகேசபிள்ளை.

# நயினாதீவு-குறிகாட்டுவான் படகுச் சேவை நேற்று ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஒக்.30

தீவுப் பகுதியில் நேற்று அதிகாலை முதல் தொடர்ச்சியான மழை காரணமாக நயினா தீவு-குறிகாட்டுவான் படகுச் சேவைகள் முற்பகல் 10 மணிவரை இடம்பெறவில்லை.

வெளியிடங்களிலிருந்து நயினாதீவுக்குச் செல்வதற்காக குறிகாட்டுவானுக்குச் சென்றிருந்த மக்களை புயல் அபாயம் ஏற்படலாம் மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லுமாறு மேற்படி துறைமுக அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டது.

### மழை காரணமாக

இதவேளை நெடுந்தீவில் தொடர்ந்து பலத்த மழை பெய்து கொண்டிருந்ததால் மின் கம்பங்கள் வீதிகளில் விழுந்து கிடப்பதால் மேற்குப் பகுதிக்கான மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் பஸ் சேவையும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## வேலைவாய்ப்பு

கணினி அறிவுள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பு உண்டு. பின்வரும் முகவரிக்கு நேரில் வரவும்

STYLO TEXTILES & TAILORING

இல. 442, ஆஸ்பத்திரி வீதி (யாழ். மத்திய பஸ் நிலையம் அருகில்) யாழ்ப்பாணம்.
021 221 9696

(24920)(6.7.8)

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள..............
ரெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
இல. 687, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(சி/4416)(3.6.7) தொ.பே - 0212219686

## மரண அறிவித்தல்

### திருமதி தவச்செல்வம் கௌரி



பருத்தித்துறை, மாதனையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தவச்செல்வம் கௌரி கடந்த 23.10.2012 செவ்வாய்க் கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் சீவரத்தினம் - லீலாவதி தம்பதியரின் அன்பு மகளும், அதிகாரலிங்கம், லோகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், தவச்செல்வத்தின் (செல்வம்) பாசமிகு மனைவியும், கௌசன், திவானி, பவிஸ்னா ஆகியோரின் அன்புத் தாயும், கருணாநிதியின் (ராசா) பாசமிகு சகோதரியும், தவச்செல்வி, குணச்செல்வம், மகாராஜி, அருண்ராஜ் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2012) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30-3.30 வரை பிரான்ஸில் அமைந்துள்ள 71, Rue des Rondeaux 75020 Paris இல் நடைபெறும். பருத்தித்துறை மாதனை இல்லத்தில் இன்று (30.10.2012) செவ்வாய்க்கிழமை அனுதாப நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகள்:
தவச்செல்வம்
0033 9538 70179 (பிரான்ஸ்)

தகவல்:
க. சீவரத்தினம் (தந்தை),
சீ. லீலாவதி (தாய்),
சீ. கருணாநிதி (ராசா - சகோதரன்)
பருத்தித்துறை, மாதனை.

(24900)(45.6.7)


# சமாதானம் வேண்டி செபமாலைப் பேரணி

பாண்டியன்தாழ்வு புனித செபஸ்தியார் தேவாலயத்தில் இருந்து யாழ்ப்பாணம் ஓ.எல். ஆர். தேவாலயம் வரை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை செபமாலை பவனி இடம்பெற்றது. அன்றைய தினம் பி.ப.3 மணிக்கு ஆரம் பமான மேற்படி பேரணியில் தென்பகுதியைச் சேர்ந்த சுமார் ஐயாயிரத்துக்கு அதிகமான கிறிஸ்தவ மக்கள் கலந்துகொண்டனர். நாட்டில் சமதானம் இனங்களுக்கிடையிலான ஐக்கியம் என்பவற்றை வலியுறுத்தி செபமாலை மாதாவின் திருச் சொரூபத்துடன் மக்கள் பேரணியாகச் சென்றனர். இதேவேளை தென் பகுதியில் இருந்து சுமார் 40 பஸ்களில் மேற்படி மக் கள் வந்திருந்தனர். (வ-7)

GRAND OPENING
FAST PROMOTION
'USA Company Expension in South'
வடக்கில் புதிதாக ஆரம்பிக்க உள்ள 5 புதிய கிளைகளுக்கு 50புதிய வெற்றிடங்கள்.
Customer service,Supervisors, Management Trainees
பயிற்சியின் போது (Rs.10,000 - 15,000)
பயிற்சியின் பின் (Rs.50,000 - 100,000)
Qualification O/L, A/L, Dip,Any Degree
யாழ்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் விண்ணப்பங்களுக்கு முக்கியத்துவம்.
(தங்குமிட வசதியுண்டு)
தொடர்பு:
077 556 6224, 077 190 6728
021 720 0867 (24921)(5-6-7)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கனகரெத்தினம் (ஞானத்துரை)



அராலியைப் பிறப்பிடமாகவும் கோக்குவிலில் வசித்தவரும் தற்போது தெஹிவளையில் வசித்து வந்த வருமான கனகரெத்தினம் 27.10.2012 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நாக லிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், செல்வமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், அன்னம்மா, நவரட்ணம், செல்வரட்ணம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராசமணி, சுப்பிரமணியம், கந்தசாமி, வல்லிபுரம் ஆகியோரின் மைத்துனரும், சிவானந்தராஜா, யோகானந்தன், கலாவாணி, பிரேமானந்தன், உருத்திரவாணி, குகானந்தன், ஜெயவாணி, தயாவாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், பவளராணி, சாந்தினி, ஸ்ரீரஞ்சன், கமலாதேவி, ரவீந்திரநாதன், ஜெயப்பிரபா, சங்கர்தாஸ், ரபேசன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.10.2012) செவ்வாய்க் கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2012) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21A, 1/3, வண்டவேட் பிளேஸ்,
தெஹிவளை.

தகவல் :
குடும்பத்தினர்

(சி/2807)(6.7.8)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 09 . 04 . 1954

இறப்பு 24 . 10 . 2010

அமரர் செல்லையா தெட்சணாமூர்த்தி
( சாமி)

திதி : அபரபக்க துதியை ( 30.10.2012)

பண்ணாகம் பதியினில் பண்புடனே
வாழ்ந்தவரே எங்கள் அப்பா
சுற்றமெல்லாம் சூழ்ந்து நின்று சாமி என்று அழைக்க
சத்தமில்லாமல் சாமியிடம் போனதென்ன
பாசம்தனை பொழிந்து பக்குவமாய் வளர்த்தீரே எம்மை
இப்போ பரிகாரம் செய்வதற்கு தேடுகின்றோம் உம்மை
விரைந்து நீங்கள் வருவீரா ?

முதலாம் குறுக்குத்தெரு,
பண்ணாகம், சுழிபுரம்.

குடும்பத்தினர்.
(24917)(6.7.8)

மருத்துவ உதவியாளர் பயிற்சி
O/L வரை கற்றிருக்கும் அனைவருக்கும் கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி.
M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் அரிய வாய்ப்பு.
பயிற்சிக்கட்டணம் : 12,500/= (6 Months)
லாவா வைத்தியசாலையில் செயன்முறைப் பயிற்சிகள்
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
Knowledge Universe
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி :0777302882/0213208342
www.kugroup.info

## தவறிவிட்டது

விஸ்வநாதன் வித்தியானந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (720495112V), வாகன சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் தற்காலிக அடையாள அட்டை என்பனவற்றுடன் மணிபேர்ஸ் ஒன்று கிளிநொச்சி நகர பகுதிக்குள் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் நாகதம்பிரான் வீதி, மத்திய கல்லூரிக்கு அருகில் வேளாங்கன்னி வெதுப்பகத்தில் கொடுத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

நாகதம்பிரான் வீதி,
வேளாங்கன்னி.

தொடர்பு: 077 133 2090

(24228)(5-6-7)

## AROD
## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

**மகளிர் விடுதி மேற்பார்வையாளருக்கான விண்ணப்பம் கோரல்**

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் பெண்களின் இல்லத்துக்கு விடுதி மேற்பார்வையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பிப்போர் மாற்று வலுவுடையோர்களுடன் சேர்ந்து அன்புடனும், கண்டிப்புடனும் சேவை மனப்பாங்குடனும் செயற்படும் திறமை உடையவராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை:40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மட்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:10.11.2012

விண்ணப்பத்தில் தாங்கள் எதிர்பார்க்கும் வேதனம் குறிப்பிடப்படல் வேண்டும். மாற்று வலுவுடையோர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

செயலாளர்,
வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்,
17, அடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு,யாழ்ப்பாணம்.
(தொ.பே.: 021 321 7718)

(சி/4363)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# வங்கி மீதான பற்று தற்போது ஊழியருக்கு குறைந்து வருகிறது

## இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர்

யாழ்ப்பாணம்,ஒக்.30

வங்கி ஊழியர்களுக்கு வங்கி மீதான பற்று தற்போது குறைந்து செல்கிறது. அனுபவம் மிக்க ஊழியர் களைத் தாருங்கள் என்று கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை மாறவேண்டும்.

இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என். மாணிக்கசிங்கி தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தினரால் வெளியிடப்படும் ''வாழ்நாள் வங்கியாளர்'' நூலின் இரண்டாவது வெளியீடு யாழ். மாவட்ட இலங்கை வங்கி மேற்றரக் கிளையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்கேடி. சுமணசிறி கலந்து கொண்டார்.



நூலின் முதற்பிரதியை வங்கியின் மேற்தரக்கிளை பிரதம முகாமையாளர் ஜேசுதாசன் வெளியிட சுமணசிறி பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போது மாணிக்கசிங்கி மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தகால ஊழியர்கள் பற்றுடன் கடமையாற்றினர். தற்காலத்தில் வங்கி ஊழியர்களுக்குவங்கி மீதானபற்றுகுறைவடைந்து செல்கிறது. இந்த நிலை மாற்றமடைய வேண்டும் அனுபவம் மிக்கவர் களைத் தாருங்கள் என்று கேட்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். எதிர்காலத்தில் அனுபவசாலிகளைப்பெற முடியாத நிலைமையே ஏற்படும்.

பெரும்பாலான வங்கி ஊழியர்களை வழி நடத்த வேண்டிய பொறுப்பு எமக்கு மட்டுமல்லாது ஓய்வுபெற்ற வங்கியாளர்களுக்கும் உள்ளது. இளம் வங்கியாளர்களுக்கு எழுதுவதற்கு நேரமில்லை. இலங்கை வங்கியில் அது குறைந்து வருகிறது. முன்னர் ஊழியர்கள் எழுதுவார்கள். இதேபோல தற்போதைய ஊழியர்களும் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். பலவற்றையும் சேர்த்து கட்டுரையாக்கினால் இளைய சமுதாயம் பயனடையும்.- என்று கூறினார்.

இந்த நிகழ்வில் வங்கியின் ஓய்வுபெற்ற வடமாகாண உதவிப் பொது முகாமையாளர்களான எஸ். பாலசுப்பிரமணியம், கே.சிவராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-4)

## விற்பனைப் பொருள்கள் இன்றி கூட்டுறவுக் கடைகள் மூடல்

சுழிபுரம், ஒக்.30

சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்க விற்பனைக் கிளைகள் பல விற்பனை பொருள்கள் இல்லாமையால் மூடப்பட்டுள்ளன. பண்ணாகம் கிளை இல. ஐந்தும் திறக்காது மூடப்பட்டு இருந்தது. அதேவேளை இக்கிளை விற்பனைக்கு பயன்பட்டு வந்த கட்டட அறையொன்றை தனியார் ஒருவருக்கு அச்சகத் தேவைக்கு வாடகைக்கு கொடுக்க சங்க நிர்வாகம் முடிவெடுத்திருந்தது. இதை அறிந்த கிளைக்குழு நிர்வாகத்தினர் சங்க நிர்வாகத்தினருடன் பேசி மீண்டும் கடையை திறக்க ஏற்பாடு செய்துள்ளனர். சுழிபுரத்திலுள்ள கிளையொன்றை மூடி 5 ஆம் கிளையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடையில் விற்பனைக்குத் தேவையான பொருள்கள் இல்லாமையால் பொருள் வாங்கச் செல்பவர்கள் திரும்பிச் செல்கின்றனர். சங்கக் கடையாக இருந்த காலத்தில் அங்கத்தவர்கள் பொருள்கள் வாங்கிய இலாபப் பணத்திலேயே 5 ஆம் கிளைக் கட்டடம் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. (3-28)

## ஆசிரியர் தின விழா

தென்மராட்சி, ஒக்30

சாவகச்சேரி சங்கத்தானை ஞானோதயா கல்வி நிலையத்தின் ஆசிரியர் தின விழாநேற்றுமுன்தினம்நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் விருந்தினராகக் கலந்து கொண்டு ஆசிரியர்களின் ஒழுக்கம் பற்றி உரையாற்றினார். (3-9)

## வாய்க்கால்கள் சீரில்லை ஓடக்கரை வீதியில் வெள்ளம்

வடமராட்சி, ஒக்.30

பருத்தித்துறை ஓடக்கரை ஒழுங்கையில் வெள்ளம் தேங்கி நிற்பதால் குறித்த ஒழுங்கை ஊடாக நகருக்குச் சென்றுவரும் மக்கள் பெரிதும் அவலத்துடன் பயணிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

கடும் மழை பெய்யும் போதெல்லாம் தம்பசிட்டி வீதி, ஆத்தியடிப் பகுதிகளில் இருந்து வரும் வெள்ளம் ஓடக்கரை வழியாக பொலிஸ் நிலையத்தின் ஓரமாகச் சென்று கடலுக்குள் விழுவதுண்டு.

குறித்த வெள்ளம் ஓடிச்செல்லும் வாய்க்கால்களில் தடங்கல்கள் இருப்பதாலும் வெள்ளவாய்க்கால் நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமையாலும் வெள்ள வாய்க்கால் அமைந்துள்ள ஓடக்கரைச் சந்தியில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

மழை நின்று விட்டாலும் வெள்ளம் முழுவதும் வடிய சில தினங்கள் செல்கிறது. இச் சந்தியில் வெள்ளம் தேங்கி நின்றால் நடந்து செல்லும் போது ஒருவரின் முழங்காலுக்கு மேல் வெள்ளம் நிற்கும்.

புலோலி மேற்கு, அல்வாய், இன்பருட்டி, கம்பர் மடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நகருக்கு வந்துசெல்ல ஓடக்கரை வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மட்டுமன்றி, ஓடக்கரைச் கற்றாடல்களைச் சேர்ந்த மக்களும் ஓடக்கரைச் சந்தி வெள்ளத்தால் அவலப்பட்டு வருகின்றனர்.

ஓடக் கரை வெள்ளப் பிரச்சினைக்கு பருத்தித்துறை நகரசபை தீர்வு காணுமா என்பதே இந்தப் பகுதி மக்களின் கேள்வியாகும். (ம-8)

## பட்டாபிஷேக நிகழ்வு

மானியூர் சிவஸ்ரீ ப.விநாயகமூர்த்தி குருக்களின் புத்திரர் இருவருக்கு குருப் பட்டாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயில் இடம்பெறும்.

இந்தியா-பிள்ளையார் பட்டி கற்பக விநாயகர் ஆலய வியாசரத்தினம் சிவஸ்ரீ மு.பிச்சை குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெறும். (3-50)


## மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்



### க.கை. விக்னேஸ்வரன்

(இலங்கை வங்கி 2ஆம் கிளை,யாழ்ப்பாணம்)

நேரிய பார்வையும், கூரிய சிந்தனையும், மற்றவர்களுக்கு உதவும் சிந்தையும்,வாடிக்கையாளரது மனதினை இலகுவில் புரிந்து கொண்டு உதவி செய்யும் திறமையும், எல்லோராலும் மூப்பு இளமையின்றி ''விக்கியண்ணா'' என அழைக்கப்படும் தீவகத்தின் தலைத் தீவைச் சேர்ந்தவரும், யாழ்/இந்துவின் புகழ் பூத்த மாணவனும், இந்துவின் ப.மா.ச.ஆட்சிக் குழு உறுப்பினரும்,சமூக சேவையாளருமான க.கை.விக்னேஸ்வரன் பதவி உயர்வு பெற்றதனையிட்டு மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
1.என்.தனேந்திரன் (நிகரா ஒப்பந்தகாரரும், கட்டடப் பொருள் விநியோகத்தரும்)
2. ரி.றகுணா (வர்த்தகர்)
3.பி.கரிதாஸ் (வாடிக்கையாளர்)
4. எம்.ஞானதீபன் (வர்த்தகர்)
5.என்.சச்சிதானந்தன் (இளவரசி புடைவையகம்)
6. S. றஜனிகாந், S.றஜனிதரன் (அம்பாள் மரக்காலை நல்லூர்)
7.N.தேவா (காப்புறுதிநிதி ஆலோசகர்)

(24779)(5.6.7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கு.பாலமுருகன் (B.A,Dip.in Ed.SLPS -3)

ப.தேவேந்திரகுமார் (B.Sc., PGDE(Merrit)

எமது பாடசாலையின் ஆசிரியரான குமாரசாமி பாலமுருகன் அவர்கள் (02.10.2012) அன்று இலங்கை அதிபர் சேவை தரம் -3 இற்கு நியமனம் பெற்றமையையும், பழனிச்சாமி தேவேந்திரகுமார் அவர்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் உயர் தேர்ச்சி பெற்றமையையும் மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்

(24555)(5.6.7) கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாயலம். கிளிநொச்சி.

## விழி நீர் சொரிகின்ற 31 ஆம் நாளும் நன்றி,நவிலலும்



### அமரர் நாகமுத்து கிருஸ்ணபிள்ளை

[சொக்கலிங்கம்]

எங்கள் குடும்பத் தலைவர் நாகமுத்து கிருஸ்ணபிள்ளை (சொக்கலிங்கம்) 30.09.2012 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று(30.10.2012) செவ்வாய்க் கிழமை மு.ப.11மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார்,உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் வீதி,பண்டத்தரிப்பு (சி/4308)(5-6-7) குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவு நாள்



மலர்வு 27.07.1950 உதிர்வு 30.10.2011

திருமதி மயில்வாகனம் தயாநிதி

ஆண்டொன்று அகன்றாலும் ஆறாது எம்மன வேதனைகள்
நிலையில்லா இவ்வுலகில் நிலைத்துவிட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாது நாம் நீந்துகின்றோம் கண்ணீரில்

விக்காவில்,காரைநகர். (24851) (15-7-6) குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு advt@uthayan.com 0215671111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் சட்டத்தரணியாகலாம்...!

சட்டத்தொழில் என்பது ஒரு உயர் தொழிற் தகைமையாகும். இவ் உயர் தொழிற் தகைமை மாறிவரும் நவீன உலகில் இன்றியமையாத தொன்றாகும். சிறு சிறு தனியார் கம்பனிகள் முதல் அரச நிறுவனங்கள் வரை சட்ட ஆலோசகர்களின் தேவையை வேண்டி நிற்கின்றன. மேலும் நாளாந்த வாழ்க்கையிலும் சட்டத்தரணிகளின் தேவை இன்று முக்கிய பங்கை வகிக்கின்றமையினை நீதிமன்ற வாசலுக்குச் செல்வோர் யாவரும் புரிந்துகொள்ள முடியும்.

இன்று இலங்கையில் சட்டக் கற்கை நெறிக்குள் மாணவர்களை உள்வாங்குவதற்கு நடத்தப்படுகின்ற திறந்த போட்டிப் பரீட்சைகள் என்றால் அவை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற சட்டமாணி சட்டக் கற்கை நெறிக்கான அனுமதிப் பரீட்சையும், சட்டக் கல்லூரியினால் நடத்தப்படுகின்ற சட்டக்கல்லூரி அனுமதிப்பரீட்சையுமேயாகும்.

திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற சட்டமாணி சட்டக் கற்கை நெறி பரீட்சைக்கு (LLB ENTRANCE EXAM) தோற்ற விரும்பும் மாணவர்கள் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. ஜி.சீ.ஈ உயர்தர பழைய பாடத்திட்டம் - நான்கு பாடங்களில் ஆகக் குறைந்தது ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஏனைய பாடத்தில் இன்னுமொரு தடவை சித்தியடைந்திருத்தல் வேண்டும். (அல்லது)

2. ஜி.சீ.ஈ உயர்தர புதிய பாடத்திட்டம் - ஒரே தடவையில் 3 சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். (அல்லது)

3. செனட் சபையினால் ஏற்கப்படக் கூடியதான இவற்றுக்குச் சமனான அல்லது மேற்பட்ட தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

சட்டக்கல்லூரி (LAW COLLEGE ENTRANCE EXAM) அனுமதிப்பரீட்சைக்குத் தேவையான ஆகக் குறைந்த தகைமைகள்

1. ஜி.சீ.ஈ. சாதாரண தரம்- ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி (C) அத்துடன்

2. ஜி.சீ.ஈ. உயர்தரம் - ஒரே தடவையில் பழைய பாடத்திட்டம் 4 பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டம் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்டப்பட்ட இரண்டு பரீட்சைகளுக்குமான- தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, ஆர்வமுடைய மாணவர்கள் குறிப்பிட்ட அனுமதிப் பரீட்சைகளுக்கு (LLB LAW ENTRANCE) விண்ணப்பிக்கலாம்.

மேற்படி இரு முறைகளினூடாகவும் நாம் சட்டத்தரணியாகும் வாய்ப்புக்கள் எமது நாட்டில் இலகுவாகக் கிடைக்கின்றன. இந்தப் போட்டிப்பரீட்சைகளுக்கான தயார்படுத்தல் மற்றும் பயிற்சி வகுப்புக்களை குறுகிய காலத்தில், குறைந்த செலவில், மிக இலகுவாக - கிறீன்விச் கல்லூரி (Greenwich College) கொழும்பு - தெஹிவளை, யாழ்ப்பாணம், கண்டி, WINSYS NETWORKS- மட்டக்களப்பு ஆகிய பிரதேங்களில் நடத்துகின்றது.

இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்து நீங்களும் ஒரு சட்டத்தரணியாக விரும்பினால் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொண்டு மேலதிகமான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

GREENWICH COLLEGE
No.34, Galle Road, Dehiwala. Tel: 0112713214, 0112726237

No.01, 2nd lane, Power house Road, Jaffna. Tel: 0777630708

WINSYS Networks, No.10, New Kalmunai Road, Batticaloa. (த)

## முள்ளிவாய்க்கால் பாடசாலைக்கு 'டயலொக்' நிறுவனம் உதவி



யாழ்ப்பாணம்,ஒக்.30

முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்துக்கு 'டயலொக்' நிறுவன வவுனியா கிளை முகாமையாளர் உள்ளிட்ட ஊழியர்களால் ஒரு லட்சம் ரூபா செலவில் வர்ணந்தீட்டி, நீர்ப்பம்பி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன என்று கிளை முகாமையாளர் ரி.சங்கரதாஸ் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து சென்று கடந்த மாதம் அந்தப் பகுதியில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதை அடுத்து அந்தப் பாடசாலை இயங்க ஆரம்பித்தது. போரினால் பாதிக்கப்பட்ட அந்தப் பாடசாலையில் திருத்த வேலைகள் செய்யப்பட்ட கட்டடத்துக்கே நிறுவனத்தினர் வர்ணம் பூசினர். கிளை ஊழியர்களால் வர்ணம் பூசப்பட்டது.

தண்ணீரை இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இங்குள்ள கிணற்றிலிருந்து நீரைப் பெறுவதற்காக நீர்ப் பம்பியும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. தவிர திருத்தப் பணிகள் நடைபெறும் பகுதியில் வர்ணம் பூசுவதற்கென சுமார் 80 லீற்றர் பெயின்ற் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. (த-4)

## ராணி சந்தன ஷவர் ஜெல் அறிமுகம்



சுவதேஷி நிறுவனம் புதிய வடிவம் மற்றும் நறுமணத்துடன் அமைந்துள்ள ராணி சந்தன ஷவர் ஜெல் தயாரிப்பை அறிமுகம் செய்துள்ளது.

இலங்கையின் முன்னணி அழகு சோப் வகைகளில் ஒன்றான ராணி சந்தன சோப் வகையானது, சுமார் 7 தசாப்த காலமாக இலங்கை மற்றும் வெளிநாட்டு பாவனையாளர்களின் நம்பிக்கையை வென்ற தயாரிப்பாக விளங்குகிறது.

நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் கருத்து வெளியிடுகையில், "நாளாந்தம் தமது கடினமான வேலைப்பளு மிக்க செயற்பாடுகளுக்கு மத்தியில் தமது சருமத்துக்கு இலகுவானதும் மிருதுவானதுமான தயாரிப்பு ஒன்றின் தேவை நிலவுவதை நாம் அறிந்துள்ளோம்.

தரமான ஷவர் ஜெல் ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் தமது சருமத்தை மிருதுவாகவும், நறுமணத்துடனும் திகழச்செய்ய எதிர்பார்க்கும் பெண்களுக்குப் புதிய ராணி ஷவர் ஜெல் தயாரிப்புகளின் மூலம் மேலதிக நம்பிக்கையை வழங்கக் கூடியதாகவிருக்கும் என நாம் நம்புகிறோம்'' என்றார்.

பல நூற்றாண்டு காலமாகப் பெண்களின் பாரம்பரிய அழகுசாதன சிகிச்சை மூலமாக உலகளாவிய ரீதியில் சந்தனம் காணப்படுகிறது. பழங்காலங்களில் அரச குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் அழகு சாதானத் தெரிவாக சந்தனம் அமைந்திருந்தது. தற்போது நவீன காலத்துக்கேற்ப பெண்களின் தெரிவாக இந்த சந்தனத்தை ஷவர் ஜெல் வடிவில் விசேடமாக சுவதேஷி வழங்குகிறது. (த)

## சீட்டிழுப்பில் வென்றோர்

வலி.வடக்கு, ஒக்.30

மக்கள் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் இடையே மாதாந்தம் நடைபெறும் ஜெயஸ்ரீ சீட்டிழுப்பில் சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் கணக்கு வைத்திருப்பவர்களின் மார்ச் மாதம் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

மாசிலாமணி ஞானசீலன் - கோணர்புலம் மல்லாகம், இளையவன் சுப்பிரமணியம் சறோஜா - சுராவத்தை சுன்னாகம், பரமேஸ்வரி செல்வரட்ணம்- ஏழாலை கிழக்கு. (த-86)

## சைக்கிள் வென்றவர்

வலி.வடக்கு, ஒக்.30

மக்கள் வங்கியினால் உலக சிறுவர் தினத்தையொட்டி நடைபெற்ற சிசு உதான சீட்டிழுப்பில் சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் கணக்கு வைத்திருக்கும் மல்லாகத்தைச் சேர்ந்த விமலாம்பிகை பாலன் யாசோதரன் 'மௌண்டன்' சைக்கிளை வென்றுள்ளார். (த-86)

## பனசோனிக் கூரை மின்விசிறிகளுக்கு அதி உன்னத SLS 814 சான்றிதழ்



இலத்திரனியல் சாதனங்களுக்கு சர்வதேச ரீதியாகப் புகழ்பெற்ற பனசோனிக் வர்த்தகப் பெயரிலான பொருள் ஒன்றிற்கு இலங்கையின் தரச்சிறப்பு அங்கீகாரமான SLS 814 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்படும் SLS சான்றிதழ், உற்பத்திப் பொருள்களின் உன்னதமான வடிவமைப்பு, தரமுயர்ந்த செயற்றிறன் என்பவற்றிற்குச் சான்றாகும். இலங்கையின் பனசோனிக் சாதனங்களின் அதிகாரம் பெற்ற விநியோகஸ்தராக யுனி வோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் செயற்படுகின்றது.

F-56MZ2என்ற மொடலில் கிடைக்கும் பனசோனிக் கூரை மின்விசிறியில் பல்வேறு சிறப்பம்சங்களும்; விசேட பாதுகாப்பு நுட்பங்களும் அடங்கியுள்ளன. இந்த மின்விசிறி 5 வேகத் தெரிவு, மிதமிஞ்சிய சூடேற்றம் மற்றும் மின்னோட்ட அதிகரிப்பைத் தடுப்பதற்கான தேர்மல் பியூஸ், நிரந்தர உராய்வு நீக்கியுள்ள போல் பெயாரிங்ஸ் முதலிய வசதிகளைக் கொண்டுள்ளன.

கண்டிப்பான பனசோனிக் பாதுகாப்பு நியமங்களுக்கேற்ப இந்த மின் விசிறி உருவாக்கப்பட்டுள்ளது. Safety Wire கொண்டுள்ளதால் விசிறியின் சட்டமோ, அலகுகளோ கழன்று விழாது. Cut- off Safety Switch அலகுப் பாதுகாப்பிற்கான தட்டம் ஆகிய பாதுகாப்பு அம்சங்களும் அடங்கியுள்ளன.

எனவே, பாவனையாளர்கள் பூரண பாதுகாப்பைப் பெறுவார்கள். இக் கூரை மின்விசிறியை நாடெங்குமுள்ள சொவ்ட்லொஜிக் காட்சியறைகளில் உறுதிமிக்க சொவ்ட்லொஜிக் உத்தரவாதத்துடன் பெறலாம். (த)

## மைக்ரோமக்ஸ் தற்போது அபான்ஸில்



இந்தியாவின் முன்னணி கையடக்க தொலைபேசி உற்பத்தி நிறுவனமான மைக்ரோமக்ஸ் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற விற்பனைப் பங்காளாராக அபான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அபான்ஸ் நிறுவனமானது பல வகையான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் உலகின் முன்னணி வர்த்தக நாமங்களின் தொகுதிகளை களஞ்சியப்படுத்தி வைப்பதில் அதிகாரம் பெற்ற விற்பனைப் பங்காளாராகச் செயற்படுகிறது என அபான்ஸ் நிறுவனத்தின் பிரதி பணிப்பாளரான தினேஷ் பெரேரா தெரிவித்தார்.

எமது நிறுவனமானது இலங்கையில் அதிக கையடக்க தொலைபேசிகளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களில் உள் ளடங்குவதுடன், நாடு பூராகவும் 400 விற்பனைக் காட்சியறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அனைத்து உற்பத்திகளும் உத்தரவாதத்துடன் விற்பனை செய்யப்படுவதுடன், விற்பனையின் பின்னரும் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது என அவர் மேலும் கூறினார்.

அபான்ஸ் நிறுவனத்துடன் மைக்ரோமெக்ஸ் நிறுவனம் இணைந்துள்ளமையானது, இலங்கையின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பலம் வாய்ந்த விநியோகப்பங்காண்மை மற்றும் விற்பனையின் பின்னரான சேவையூடாக அபான்ஸ் நிறுவனத்தின் ஊடாக எமது உற்பத்திப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என மைக்ரோமக்ஸ் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் சன்ஜீவ் ஆரியரட்னம் தெரிவித்தார்.

மைக்ரோமக்ஸ் (Micromax) நிறுவனமானது, அண்ட்ரொயிட் மென்பொருள் கொண்ட 3எ கைத்தொலைபேசிகள் வரை 50 இற்கும் அதிகமான கையடக்கதொலைபேசி வகைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. (த)

## ஸ்ரீலங்கா பாமா வீக் டிசம்பர் மாதம் கொழும்பில்



மருந்து உற்பத்தித் தொழில் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் மற்றும் இத் தொழிலின் எதிர்காலம் பற்றிய மூன்று மாநாடுகளை உள்ளடக்கிய ஸ்ரீலங்கா பாமா எதிர்வரும் டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

மருந்து உற்பத்தித் துறையில் உலகின் மிகப் பெரிய நிகழ்ச்சி ஏற்பாட்டாளரான CPhl, இந்த மருந்து வாரத்தை இலங்கை மருந்து உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்கின்றது. CPhl என்பது உலகளாவிய UBM குழுமத்தில் அங்கம் வகிக்கும் அமைப்பாகும்.

டிசம்பர் 3 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா மருந்து வாரத்தில் உயிரியல் ரீதியாகக் கிடைக்கும் தன்மையும் உயிரியலுக்குச் சமான தேவைகளும், மருந்து விற்பனை அணியினரின் வினைத்திறனும் தன்னியக்கப்படுத்தலும், வழங்கல் அமைப்பும் விநியோகமும் ஆகிய விடயங்கள் மூன்று மாநாடுகளில் ஆராயப்படும்.

மருந்து உற்பத்தித் துறையில் இலங்கையின் முன்னணி அமைப்புக்களில் ஒன்றாக விளங்கும் இலங்கை மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் 1,000 இக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. தொழிற்றுறையின் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை எடுப்பதும் புதிய வாய்ப்புக்களை உருவாக்குவதும் சங்கத்தின் குறிக்கோள்களாகும்.

ஈஸை பாமசூட்டிக்கல்ஸ் இந்தியாவின் முகாமைப் பணிப்பாளர் கே. ஷிவ்குமார், தகவல் தருகையில், ''விரிவடைந்துவரும் இலங்கைச் சந்தையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு விற்பனை அணியினரின் வேலைத்திறனை அதிமுக்கியமானது'' என்று கூறினார். (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



அச்சுவேலி மத்திய கல்லூரியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற விஜயதசமி விழாவின் போது மாணவர்களது கலை நிகழ்வினைக் காணலாம்.

## நல்லூர் பொது நூலகத்தில் இன்று புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.30

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் பொது நூலகம் நடத்தும் புத்தகக் கண்காட்சி இன்று செவ்வாய்க் கிழமையும், நாளை புதன்கிழமையும் நூலக மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் அருகிவரும் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் சகல பொதுநூலகங்களிலும் ஒக்ரோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் நல்லூர் பொதுநூலகத்தினால் இந்த நிகழ்ச்சித் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

நடமாடும் சேவை மற்றும் போட்டிகள் போன்றவற்றை பாடசாலை மற்றும் கிராம மட்டங்களில் நடத்தியுள்ள நல்லூர் பிரதேச சபை, இந்த வாரம் இருநாள் கொண்ட புத்தகக் கண் காட்சியை ஏற்பாடு செய்துள்ளது.

நல்லூர் பொதுநூலகர் கே. ஜசிந்தா தலைமையில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் முன்பள்ளி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் நூலக ஆர்வலர்கள் கலந்து பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-14)

## பனம் பாத்திபோடுவதில் ஆர்வமில்லை

சென்ற ஆண்டு விளைந்த பனங்கிழங்குகளில் புழுக்கொடியலாகப் போடப்பட்டவை விற்பனை செய்யமுடியாது தேங்கிக் கிடப்பதாக சுழிபுரம் பண்ணாகம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பனம் பாத்தி போடக் கொடுக்கப்பட்ட கூலிக்கே எந்த இலாபமும் கிடைக்கவில்லை. இதனால் பனம்பாத்தி போடுவதில் இம்முறை இந்தப்பகுதி மக்கள் ஆர்வம் செலுத்தவில்லை. (3-28)

# விடுதலைப் புலிகள் இயக்க பிரதிநிதிக்கு 'தடை நீக்கம்' குறித்து வாதிட அனுமதி

## நீதிபதி 'ஜெயின்' தீர்ப்பாயத்தின் விசாரணையில் திடீர் திருப்பம்

இந்தியாவில் தடை செய்யப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிக்கு, அந்த அமைப்பின் தடையை நீக்குவது தொடர்பிலான வழக்கில் வாதாடுவதற்கு நீதிபதியின் அனுமதி கிடைத்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய மத்திய அரசு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து பிறப்பித்த ஆணை சரியானது தானா என்பதை ஆராய்ந்துவரும் நீதிபதி வி.கே.ஜெயின் தலைமையிலான தீர்ப்பாயம், சுவிற்சர்லாந்தில் தற்போது வசித்துவரும் விஜயரட்ணம் சிவ நேசன் விடுதலைப் புலிகள் சார்பாக தடை நீடிப்பை எதிர்த்து மனு சமர்ப்பிக் கலாம் என்று நேற்று உத்தரவிட்டது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின்னர், 1992 முதல் விடுதலைப் புலிகள் மீதான தடை தொடர்ந்து நீடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஒவ்வொரு முறையும் நீதிபதி ஒருவர் தலைமையிலான தீர்ப்பாயம் தடை அவசியமா என்பது குறித்து விசாரித்து, விசாரணையின் அடிப்படையில் மத்திய அரசின்ஆணை செல்லுமா இல்லையா எனத் தீர்ப்புக் கூறும்.

தடை செல்லும் என்றே இதுவரை தீர்ப்புக்கள் வெளியாகியிருக்கின்றன. அதன்படியே கடந்த மே மாதத்தில் விடுதலைப்புலிகள் மீதான தடை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. அதுகுறித்து டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி ஜெயின் விசாரணை மேற்கொண்டிருக்கிறார்.

கடந்த இரண்டு நாள்களாக கொடைக் கானலில் அந்தத் தீர்ப்பாயத்தின் அமர்வு நடைபெற்றது. அப்போது சுவிற்சர்லாந்தில் வசிக்கும் விஜயரட்ணம் சிவநேசன் என்பவர், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிராந்திய ஒருங்கிணைப் பாளர் என்று மனு சமர்ப்பித்துள்ளார்.

ஐரோப்பாவில் இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக தான் பாடுபடுவதாகவும், விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கைத் தமிழர் உரிமைக்காக பாடுபட்டது. தற்போது இந்தியாவில் அதன் செயற்பாடு எதுவுமில்லை. அந்த நிலையில் இந்தியாவில் அதன் மீதான தடை நீக்கப்பட வேண்டும் எனக் கோரி அவர் எழுதியிருந்த மனுவை அவர் சார்பில் சென்னை வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் சமர்ப்பித்தார்.

அவர் சார்பாக தீர்ப்பாயத்தின் முன் தன்னை வாதாட விடுமாறு கோரி சிவநேசன் எழுதியிருந்த கடிதத்தையும் ராதாகிருஷ் ணன் நீதிபதியிடம் கையளித்தார்.

சிவநேசன் குறித்து விவரங்கள் உறுதியாகத் தெரியாத நிலையில் சிவநேசனின் மனு ஏற்கப்படக்கூடாது என மத்திய அரசு சார்பில் வாதிடப்பட்டது.

ஆனால் நீதிபதி வி.கே.ஜெயின், சிவநேசன் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என உத்தரவிட்டார்.

தீர்ப்பாயம் இப்போது தான் தடையை எதிர்த்து விடுதலைப்புலிகள் சார்பாக வாதிட ஒருவரை அனுமதித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## சுமத்திரையோ தொண்டு நிறுவனம் யாழ்ப்பாணத்தில் சேவை விஸ்தரிப்பு

### ஆர்வலர்கள் இணையலாம்

தற்கொலை தடுப்பு, உள ஆரோக்கியம் ஆகிய துறைகளில் 38 வருடங்களாக சேவையாற்றும் சுமத்திரையோ தொண்டு நிறுவனம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிறுவனத்துடன் இணைந்து சேவையாற்றும் தன்னார்வத் தொண் டர் குழுவினர்களுக்கு ஆரம்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டதை அடுத்தே தன்னார்வ தொண்டர்க ளாக தற்கொலைத் தடுப்பு வேலைகளில் ஈடுபட அனுமதிக்கப்படுவர்.

ஒவ்வொருவரும் வாரமொன்றுக்கு நான்கு மணி நேரம் சேவை புரிவதுடன் தொண்டரடிப்படையில் ஊதியம் இல்லாமல் பணியாற்ற விரும்பும் ஆர்வலர்கள் அனைவரும் இணைந்து கொள்ளலாம்.

வடக்கில் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள தற்கொலையைக் கட்டுப்படுத்த 50 இற்கும் மேற்பட்ட தொண்டர்கள் தேவைப்படுவதால் ஆர்வமுடைய மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றலும், பண்பும் உடையவர்கள் நிறுவனத்துடன் இணைந்து சேவையாற்றுமாறு நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளை தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 40 இற்கும், மேற்பட்ட நாடுகளில் 3100 இற்கும் மேற்பட்டதொண்டர்கள் இணைந்து இந்த தொண்டு நிறுவனம் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆர்வமுடையவர்கள் இல. 106, நான்காம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் எனும் முகவரியுடனோ, 021-222-2416 எனும் தொலைபேசி இலகத்தினூடாகவோ தொடர்புகொண்டு தொண்டர்களாக இணைந்து கொள்ளலாம். (3-14)

# அமைச்சர் பந்துல பேச மறுத்தமை அரசின் தீர்மானமா? அவரது முடிவா?

## தெளிவுபடுத்தக் கோருகிறது - ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.30

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தொழிற்சங்கங்களுடன் பேச மறுத்தமையானது, அரசின் கொள்கையா அல்லது அவரது தனிப்பட்ட கருத்தா என்பதனைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கோரியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பள அதிகரிப்பு உட்பட பல கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்திக் கடந்தவாரம் கொழும்பு இராஜகிரியவிலிருந்து இசுருபாயவுக்கு நடைப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. அதிபர் சங்கம், ஆசிரியர் சங்கம் என 13 தொழிற் சங்கங்கள் இணைந்து அந்த நடைப் பயணத்தை நடத்தியிருந்தன.

நடைப்பயண இறுதியில் கல்வி அமைச்சருக்கு முன்பாக ஒன்றுகூடிய தொழிற் சங்கங்களின் தலைவர்கள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவைச் சந்தித்துக் கலந்துரையாட வேண்டும் என்று கோரினர். எனினும் கல்வி அமைச்சர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்க மறுத்து விட்டார்.

தமது கோரிக்கைகள் தொடர்பில் இரண்டு வாரங்களில் உரிய தீர்வு தரப்பட வேண்டும். தவறின் தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்க முடியாது என்று தொழிற்சங்கங்கள் வலியுறுத்தின. தமது கோரிக்கைகள் தொடர்பில் அறிக்கையொன்றைக் கல்வி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ஜெயரட்ணவிடம் கையளித்திருந்தன.

அமைச்சர் எம்மைச் சந்திக்க மறுத்தமையானது அரசின் தீர்மானமா? அல்லது அவரது தனிப்பட்ட கருத்தா என்பது தொடர்பில் விளக்கமளிக்க வேண்டும். இலங்கை அரசியல் யாப்பில் அவ்வாறு சந்திக்க உரிமை உள்ளது. அவ்வாறு சந்திப்பதற்குத் தொழிற்சங்க உரிமையும் உண்டு. சர்வதேச தொழிலாளர் அமைப்பிலும் உறுப்புரிமைகள் தொடர்பில் இலங்கை அரசு கையெழுத்திட்டடுள்ளது.

இந்த நிலையில் அன்றையதினம் அமைச்சரைச் சந்திப்பதாக தொழிற்சங்கங்கள் சுமார் ஒரு மாதத்துக்கு முன்னரே அமைச்சருக்கு அறிவித்திருந்தன. எனினும் அமைச்சர் சந்திக்க மறுத்து விட்டார். எனவே இது தொடர்பில் அவர் தெளிவுபடுத்த வேண்டும் - என்றார். (த-4)

## தொப்புள்கொடியுடன் குஞ்சைப் பிரசவித்தகோழி

### கேரளாவில் அதிசயம்

கேரள மாநிலத்தில் விவசாயி ஒருவரின் கோழி ஒன்று தொப்புள் கொடியுடன் கூடிய குஞ்சு ஒன்றைப் பிரசவித்துள்ளது.

காசர்கோடு மாவட் டம் செருவத்தூர் சீமேனி புலியன்னூரைச் சேர்ந்த ஏழை விவசாயி பரதன். கேரளாவில் ஏழைகளுக்கு குடும்ப ஸ்ரீ என்ற அமைப்பின் மூலம் இலவசமாக ஆடு, மாடு, கோழிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தில் பரதனுக்கு வழங்கப்பட்ட ஒரு கோழி சில மாதங்களுக்கு முன் முட்டையிடத் தொடங்கியது. இதுமுட்டையிட்டாலும் அடைகாப்பதில்லை. இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை பரதன் மற்றும் குடும்பத்தினர் வீட்டு வாசலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அந்தவேளை வெளியே மேய்ந்து கொண்டிருந்த கோழி, திடீரென வீட்டுக் குள் ஓடி வந்தது. வீட்டுக் குள் நுழைந்ததும் அது தொப்புள் கொடியுடன் ஒரு குஞ்சை பிரசவித்தது. அதைப் பார்த்து அதிர்ச் சியடைந்த பரதன், அந்த கோழிக்குஞ்சை ஒரு துணியில் சுற்றி பாதுகாப்பாக வைத்தார். கோழிக்குஞ்சு உயிருடன் உள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.கல்வி கோட்ட மட்டப் பாடசாலைகளின் 18 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை அணி வீரர்களைப் படத்தில் காணலாம். (த-23)

## வவுனியா யங்ஸ்ரார் புதிய நிர்வாகிகள்

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் வவுனியா வைரவர் புளியங்குளத்திலுள்ள விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ராஜ்குமார், உப தலைவர் ஜீவகுமார், செயலாளர் கிறிஸ்டோடி தினேஸ், உப செயலாளராக மயூரன், பொருளாராக தீபன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினராக மயூரன் , பிரசன்னா,நாகராஜன், விஜயகுமார், கோகுலன், அரவிந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(த-23)

# விபுலானந்தன் கிண்ண இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் அமரர் பொன் விபுலானந்தன் ஞபாகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் நேற்று திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்றது.

நேற்று காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆண்கள் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 58:49 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

பெண்கள் பிரிவினருக்கான அரையிறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை அணிக்கும், யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட அணிக்கும் இடையில் ஆட்டம் இடம்பெறவிருந்தது. இதில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை அணி போட்டிக்குச் சமூகம் கொடுக்காமையால் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

மாலை இடம்பெற்ற பெண்களுககான அரையிறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதன் கல்லூரி மோதிக் கொண்டது இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 56:45 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும் ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது . மேற்படி போட்டியில் வெற்றிபெறும் அணி இன்று மாலை இடம்பெறும் இறுதியாட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணியுடன் மோதவுள்ளது.

(23)

# வவுனியா புதுக்குளம் மாணவி 5 ஆம் இடம்

யாழ்ப்பாணம்,ஒக்.30


அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய தடகளப் போட்டியில் கடந்த 9 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.



தேசிய தடகளப் போட்டியின் இறுதி நாளை இடம் பெற்ற அரை மரதன் போட்டியில் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய மாணவி சாளினி 1 மணித்தியாலம் 33 நிமிடங்களில் ஓடி 5 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவர் வடமாகாண மட்டத்திலான பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-23)

# கரம் போட்டி பரிசளிப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.மாவட்ட கரம் சங்கம் நடத்தியமுதலாவது திறந்த கரம் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்களில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரி உள்ள விளையாட்டரங்கில் யாழ். மாவட்ட கரம் சங்கத்தின் தலைவர் பாலமுரளி தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பரிசளிப்பு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் கே.எழில்வேந்தன் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கி கௌரவித்தார். வெற்றிபெற்றோரின் விவரங்கள் வருமாறு

ஆண்கள் பிரிவினருக்கான இரட்டையர் பிரிவில் எஸ்.சற்குணமூர்த்தி, ஜெ. ஜெயகாந்தன் முதலாமிடம் எஸ்.காண்டீபன், எஸ்.பிரியதர்சன் இரண்டாமிடம் எம்.சோபனாத், எம்.குகதீபன் மூன்றாமிடம்,

பெண்கள் பிரிவினருக்கான இரட்டையர் பிரிவில் கே.டிலோஜினி, எஸ்.வித்தியராணி முதலாமிடம் எஸ்.வினோஜா, கே.கே சஜனி இரண்டாமிடம், என்.தரன்கினி, வி.சௌதினி மூன்றாமிடம்

ஆண்கள் தனிப்பிரிவில் எம்.அன்ரனிஸ் முதலாமிடம், எம்.செந்தூரன்-இரண்டாமிடம், எம்.சோபனாந் மூன்றாமிடம்

பெண்கள் தனிப்பிரிவில்

கே.கேசாஜினி முதலாமிடம், எஸ்.வினோஜன் இரண்டாமிடம், எஸ்.வித்தியாரணி மூன்றாமிடம்.

(த-23)

# காலிறுதியாட்டத்துக்கு முன்னேறியது யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி

யாழ்ப்பாணம்,ஒக்.30

கால்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான கால்டன் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் கொழும்பு அமல் சர்வதேச மைதானத்தில் கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் யாழ்.மாவட்ட அணி வெற்றியீட்டி கால் இறுதி ஆட்டத்துக்கு தகுதிபெற்றது.

சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மரூன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட அணி 77:58 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து வோஷியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட அணி 75:58 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

(த-23)



இலங்கை மேசைப்பந்தாட்டச் சங்கமும் வவுனியா பிரதேச செயலகமும் இணைந்து வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மேசைப் பந்தாட்டப் பயிற்சி முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா சைவப் [illegible] கல்லூரியின் உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

[illegible] வீரர்களுக்கு மேசைப்பந்தாட்டம் தொடர்பான நுணுக்கங்களைப் பயிற்றுவிப்பாளர் விளக்குவதை படத்தில் காணலாம். (த- 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிவாகை சூடியது சிட்னி



CHAMPIONS LEAGUE TWENTY 20

## சொந்த மண்ணில் சொதப்பிய சிங்கங்கள்



சம்பியன்ஸ் லீக் தொடரில் அசத்திய சிட்னி சிக்ஸர்ஸ் அணி கிண்ணத்தை கைப்பற்றியது. நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் லயன்ஸ் அணியை 10 இலக்குகள் வித்தியாசத்தில் மிகச் சுலபமாக வீழ்த்தியது. சொந்த மண்ணில் சொதப்பிய லயன்ஸ் அணி பெரும் ஏமாற்றம் அளித்தது.

தென்னாபிரிக்காவில் நான்காவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர் நடந்தது. இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய பிராந்திய அணியான சிட்னி சிக்ஸர்ஸ், தென்னாபிரிக்க பிராந்திய அணியான ஹைவெல்டு லயன்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிட்னி அணித் தலைவர் பிரட் ஹாடின் களத்தடுப்பை தேர்வு செய்தார்.


சிட்னி அணியின் மிரட்டல் பந்துவீச்சில் லயன்ஸ் அணி சிதறிப் போனது. நதன் மக்கலம் வீசிய முதல் பந்துப் பரிமாற்றத்தில் ஒரு சிக்ஸர் அடித்த குலாம் போடி (6), அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்தவர்கள் சொதப்பினர். ஆட்டத்தின் 3 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய ஹேசல்வுட் இரட்டை அடி கொடுத்தார். 2 ஆவது பந்தில் காக் (1), 6 ஆவது பந்தில் அனுபவ மெக்கன்சியை (0) வெளியேற்றினார். அணித் தலைவர் அல்விரோ பீட்டர்சனும் (1) ஏமாற்றினார். முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் ஒற்றை இலக்கத்தில் நடையைக்கட்ட, 3.3 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளுக்கு 9 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது லயன்ஸ் அணி.

சொகைல் தன்விர் (11) நீடிக்கவில்லை. பின் ஜீன் சைம்ஸ், சோலிகிலே சேர்ந்து அணியை ஓரளவுக்கு மீட்டனர். 6 ஆவது இலக்குக்கு 41 ஓட்டங்கள் சேர்த்தனர். கும்மின்ஸ் பந்துப் பரிமாற்றத்தில் சைம்ஸ் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகள் அடித்தார். மறுபக்கம் ஹேசல்வுட் பந்தை சிக்ஸருக்கு அனுப்பினார் சோலிகிலே. தொடர்ந்து ஸ்டார்க் பந்துப் பரிமாற்றத்திலும் ஒரு சிக்ஸர், பவுண்டரி அடித்தார். இந்த நேரத்தில் மக்கலம் சுழலில் சோலிகிலே (20) சிக்கினார். அதிரடியாக ஆடிய பிரிட்டோரியஸ் 21 ஓட்டங்கள்(13 பந்துகள், 2 சிக்ஸர்கள், 1 பவுண்டரி) 'ரன் அவுட்டானார்'. தனிநபராக போராடிய சைம்ஸ் (51) அரைசதம் கடந்த நிலையில் வெளியேற, ஓட்ட எண்ணிக்கை உயர வாய்ப்பு இல்லாமல் போனது. லயன்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 121 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. சிட்னி சார்பில் நதன் மக்கலம், ஹேசல்வுட் தலா 3 இலக்குகள் வீழ்த்தினர்.

### மெகா வெற்றி

சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் 10 இலக்குகள் வித்தியாசத்தில் வென்ற முதல் அணி என்ற பெருமையை சிட்னி சிக்ஸர்ஸ் பெற்றது. இதற்கு முன்னர் பெங்களூர்( எதிர் கயானா, 2010), லயன்ஸ்( எதிர், கயானா, 2010) கொல்கத்தா( எதிர், பெங்களூர், 2011) அணிகள் 9 இலக்குகள் வித்தியாசத்தில் வென்றிருந்தன.

போகிற போக்கில் எட்டக்கூடிய இலக்கை விரட்டிய சிட்னி அணிக்கு மைக்கல் லம்ப், பிரட் ஹடின் சேர்ந்து அதிரடி தொடக்கம் கொடுத்தனர். இவர்கள், லயன்ஸ் பந்துவீச்சை வெளுத்து வாங்கினர். மோரிஸ், நானஸ் பந்துப் பரிமாற்றங்களில் பவுண்டரி, சிக்ஸர்களாக விளாசினர். பங்கிசோ சுழலில் லம்ப் 'ஹட்ரிக்' பவுண்டரி அடித்தார். பிரிட்டோரியஸ் பந்துப் பரிமாற்றத்தில் வரிசையாக இரண்டு சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி அடித்த லம்ப், அணிக்கு விரைவான வெற்றியைத் தேடி தந்தார். சிட்னி அணி 12.3 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கு நஷ்டமின்றி 124 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்று, சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. லம்ப் 82 (8 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள்), ஹடின் 37 ஓட்டங்களுடன்(4 பவுண்டரிகள், 1 சிக்ஸர்) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை லம்ப் வென்றார்.



### 'கோல்டன் பட்' யாருக்கு?

சம்பியன்ஸ் லீக் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களுக்கான தங்க துடுப்பு விருதை சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் மைக்கல் லம்ப் தட்டிச் சென்றார். இவர் 6 போட்டியில் 226 ஓட்டங்களுடன் முதல் இடத்தை பெற்றார்.

### இரண்டாவது அணி

சம்பியன்ஸ் லீக் தொடரில் கிண்ணத்தை வென்ற இரண்டாவது ஆஸ்திரேலிய அணி என்ற பெருமை பெற்றது சிட்னி சிக்ஸர்ஸ். முன்னதாக 2009 இல் நியூ சவுத் வேல்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

### தோல்வி ஏன் ?

லயன்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரர்கள், சுழற்பந்துவீச்சில் திணறுவதை அறிந்து கொண்டு தொடக்கத்தில் நதன் மக்கலம், ஸ்டீவ் கீபி போன்றவர்களை சிட்னி அணி சரியாக பயன்படுத்தியது. இவர்களை சமாளிக்க முடியாததால் இலக்குகள் வரிசையாக சரிந்தன. தவிர, லயன்ஸ் அணியின் களத்தடுப்பும் படுமட்டமாக இருந்தது. லம்ப் 15 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கொடுத்த பிடியெடுப்பு வாய்ப்பை குலாம் தவறவிட்டார். ஹடின் 17 ஓட்டங்களில் கொடுத்த பிடியெடுப்பு வாய்ப்பை பிரிட்டோரியஸ் கோட்டைவிட, அது சிக்ஸராக மாறியது. பந்துவீச்சும் எடுபடவில்லை. மொத்தத்தில் இறுதி போன்ற முக்கியமான போட்டியில் சொதப்பும் வழக்கமான தென்னாபிரிக்க அணியாகவே லயன்ஸும் காட்சி அளித்தது.

### நாயகன் ஸ்டார்க்

சம்பியன்ஸ் லீக் தொடரில் அதிக இலக்குகள் வீழ்த்தியவர்களுக்கான தங்க இலக்கு விருதை சிட்னி [illegible] பெற்றார். இவர் 6 [illegible] கைப்பற்றினார். இவரே தொடர் நாயகன் விருதையும் வென்றார். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழலுக்கு சாதகமான ஆடுகளங்கள் உருவாக்கலாம்

–ஹர்பஜன்



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தை உருவாக்கலாம், என்று ஹர்பஜன் சிங் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி 4 டெஸ்ட், 2 'ரி-20' மற்றும் 5 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் அடுத்த மாதம் 15 ஆம் திகதி அஹமதாபாத்தில் தொடங்குகிறது. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது சுழற்பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களை அமைப்பதில் தவறில்லை என்று இந்திய வீரர் ஹர்பஜன் சிங் கருத்துத் தெரிவித்தார்.

இதுகுறித்து ஹர்பஜன் கூறியதாவது:

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி காத்திருக்கிறேன். இந்தத் தொடரை 4-0 என்று முழுமையாக வென்றால் நன்றாக இருக்கும். பொதுவாக சொந்த மண்ணில் விளையாடும் அணிகள் தங்களுக்கு சாதகமான ஆடுகளத்தை அமைத்துக் கொள்ளும். எனவே இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சுழலுக்கு சாதகமான ஆடுகளத்தை உருவாக்குவதில் தவறில்லை. ஏனெனில் இந்திய அணி, ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து சென்ற போது அவர்களுக்கு சாதகமாக வேகப்பந்துவீச்சு எடுபடும் ஆடுகளத்தை அமைத்து தொடரை முழுமையாக வென்றனர்.

நட்சத்திர வீரர் கெவின் பீட்டர்சன், மீண்டும் அணிக்கு திரும்பி இருப்பது இங்கிலாந்து அணிக்கு கூடுதல் பலம். இவரது வருகையால் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வரிசை வலுவடைந்துள்ளது - என்றார். (5)

# தென்னாபிரிக்கா அணி சம்பியன்

ஹொங்கொங்கில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஹொங்கொங் சிக்ஸர்ஸ் தொடரின் சம்பியன்களாக தென்னாபிரிக்க அணி தெரிவாகியுள்ளது. இறுதி ஆட்டத்தில் அந்த அணி பாகிஸ்தான் அணியை இலகுவாகத் தோற்கடித்திருந்தது.

6 பேர் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டிகளாக இடம்பெற்ற இந்தப் போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் மாத்திரம் 8 பந்துகள் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்களாக இடம்பெற்றது. ஏனைய போட்டிகள் 6 பந்துகள் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்களாக அமைந்திருந்தன.

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, இந்தியா, நெதர்லாந்து அணிகள் பங்குபற்றியிருந்தன.

முதலில் இந்த அணிகள் 4 அணிகள் கொண்ட 2 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் இடம்பெற்றதோடு, அதன் பின்னர் ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதலிரண்டு அணிகளும் தெரிவுசெய்து அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.அடுத்த சுற்றில் அந்த அணிகள் தமக்குள் போட்டிகளில் பங்குபற்றி, அதில் முதலிரண்டு இடங்களைப் பெற்ற அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன.

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, ஹொங்கொங் அணிகள் கொண்ட குழு 'ஏ' இலிருந்து ஹொங்கொங், தென்னாபிரிக்க அணிகளும், பாகிஸ்தான், இலங்கை, இந்தியா, நெதர்லாந்து அணிகள் குழு 'பி' இலிருந்து இலங்கை, பாகிஸ்தான் அணிகளும் அடுத்த சுற்றிற்குத் தகுதிபெற்றிருந்தன.

இதில் இலங்கை அணி தான் பங்குபற்றிய 3 போட்டிகளிலும் வெற்றிபெற்றிருந்ததோடு, பாகிஸ்தான், ஹொங்கொங், தென்னாபிரிக்க அணிகள் தலா 2 போட்டிகளில் வெற்றிபெற்றிருந்தன.

எனினும் அடுத்த சுற்றுப் போட்டிகளில் தென்னாபிரிக்க அணி 3 போட்டிகளிலும், பாகிஸ்தான் அணி 2 போட்டிகளிலும் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன.

ஹொங்கொங் அணி ஒரு போட்டியில் வெற்றிபெற்றுக் கொண்ட அதேவேளை, இலங்கை அணி 3 போட்டிகளிலும் தோல்வியடைந்திருந்தது. இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்தது.

தென்னாபிரிக்க அணி 5 பந்துப் பரிமாற்றங்களில் 142 ஓட்டங்களைக் குவிக்க, பாகிஸ்தான் அணி 4.1 பந்துப் பரிமாற்றங்களில் 105 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 37 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தது.

(5)

# மரடோனாவின் அறை மியூசியமாக மாறுகின்றது

உலகப் புகழ்பெற்ற முன்னாள் உதைபந்து வீரர் மரடோனாவுக்கு உலகம் முழுவதும் கோடிக்கணக்கில் உதைபந்து ரசிகர்கள் உள்ளனர். கடந்த வாரம் இந்தியாவுக்கு வந்த மரடோனா கேரளாவில் 2 நாள்கள் சுற்றுப்பயணம் செய்தார். மரடோனா, கண்ணூரில் உள்ள ப்ளூ நைல் என்ற 4 நட்சத்திர ஹோட்டலில் அறை எண்.399 இல் தங்கி இருந்தார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அவர் இரவு இந்த ஹோட்டலில் தங்கி ஓய்வு எடுத்தார். ஏராளமான உதைபந்து ரசிகர்களையும் சந்தித்தார். 2 நாள்கள் தங்கிய பின்பு சொந்த நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மரடோனா அறையை விட்டு வெளியேறிய பின்னர் அந்த அறைக்கு திடீர் மவுசு ஏற்பட்டு உள்ளது. அவர் தங்கியிருந்த 399 ஆம் எண் அறையில் தங்கிச் செல்ல உதைபந்து ரசிகர்கள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். தற்போது கட்டாரைச் சேர்ந்த உதைபந்து ரசிகர் மற்றும் தொழில் அதிபரான ஒருவர் மரடோனா தங்கியிருந்த அறையில் தங்கி இருக்கிறார். இந்த அறையை அவர் முன்கூட்டியே பதிவு செய்துதான் தங்க முடிந்தது.

அடுத்தடுத்து 399 ஆம் எண் அறை பதிவாகிக் கொண்டு இருப்பதாக ஹோட்டல் அதிபர் ரவீந்திரன் தெரிவித்தார். அந்த அறையில் மரடோனா தனது காதலியுடன் இருக்கும் போட்டோ ஒன்று உள்ளது.

இந்தப் போட்டோவை மரடோனா கொண்டு வந்து இருந்தார். அறையை விட்டு வெளியேறும் போது அவர் மறந்து விட்டுச் சென்றாரா? அல்லது தன் நினைவாக விட்டுச் சென்றாரா? என்பது தெரியவில்லை.

மரடோனாவின் பேரன் பெஞ்சமின் போட்டோவும் அறையில் உள்ளது. இந்த போட்டோக்களை நிரந்தரமாக அறையிலேயே வைத்து இருப்பதாகவும் அறைக்கு மரடோனா மியூசியம் என்று பெயரிட்டு இருப்பதாகவும் ஹோட்டல் அதிபர் ரவீந்திரன் கூறினார். (5)


ASIAN FURNITURE

பண்டிகைக் கால சிறப்புத்தள்ளுபடி

Computer Tables: Rs. 4990/= Rs. 3725/= Rs. 9800/= Rs. 7750/=

Office Cupboards & Filling Rocks: Rs. 9900/= Rs. 4400/= Rs. 5700/= Rs. 6600/=

Tv Racks & Wall Units: Rs. 14000/= Rs. 12300/= Rs. 3780/= Rs. 10150/=

Office Chairs: Rs. 7665/= Rs. 4025/= Rs. 4050/= Rs. 5645/=

மெத்தைகள் - 1900/- இல் இருந்து, கட்டில்கள் - 3900/-, இல் இருந்து அலுமாரிகள் - 6750/- இல் இருந்து, 6 கதிரைக்கு ஒரு ரீப்போ இலவசம் என்பவற்றை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள

ஏசியன் தளபாடம். 133, மின்சார நிலைய வீதி (பஸ் நிலையம் அருகில்)

T.P : 077 3583879, யாழ். நகரில் முதன் முறையாக துரித கதியில் குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு மற்றும் யாழ், கொழும்பு பார்சல் சேவை (8.14)

021 222 7892



## வேலையாள்கள் தேவை

- Sales Rep (ஆண்)
- Computer Assistent (பெண்)

தொடர்பு- Multilac Show Room

ஞானம் பெயின்ட்

558, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம்,

யாழ்ப்பாணம்.

T.P- 0778942702 (சி/4365) (9.14)



## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

ஒட்டுசுட்டான் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளது.

காலம்- 07.11.2012 புதன்கிழமை பி.ப. 2.00 மணி

இடம்- ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

அனைத்து அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர், செயலாளர்.

(சி/4366)(9.14)


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சிறிஸ்கந்தராசா



பூநகரியைப் பிறப்பிடமாகவும், விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிறிஸ்கந்தராசா நேற்று (29.10.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தியாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜீவானந்தன், நிரஞ்சன், கார்த்தீகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2012) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 12 ஆம் கட்டை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

விசுவமடு. (சி/4367)(9.14) நிரஞ்சன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.